
# சுமைதாங்கி



முதற்பதிப்பு: மார்ச் 1978
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 6-00

கிடைக்குமிடங்கள் :

1. பாரி நிலையம், சென்னை-1
2 வானதி பதிப்பகம், சென்னை-17
3. பூங்கொடி பதிப்பகம், சென்னை-4

முகப்பு ஓவியம் : கோபுலு

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
சென்னை-14

# வணக்கம்

நான் தஞ்சாவூர்க்காரன். கல்லணை கட்டிக் காவிரிக்குக் கரையெடுத்த கரிகாற்பெருவளத்தான் எனுந் திருமாவளவனால் அகழப்பெற்ற வெண்ணியாற்றின் தென்கரை மீதுள்ள, தஞ்சை நகராட்சி எல்லைக்குட்பட்ட, சுங்கந்தவிர்த்தசோழன் திடல் நான் பிறந்த இடம். 15—10—1925–ல் பிறந்த நான், தமிழவேள் உமாமகேசனார் நிறுவிய கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை வடக்கு வீதியிலுள்ள தொன்மை வாய்ந்த தூய பேதுரு உயர்நிலைப்பள்ளி, கும்பகோணத்தில் பொன்னியாற்று மருங்கில் அமைந்திருக்கும் புகழ் மேவிய அரசினர் கல்லூரி ஆகிய கல்விக் கூடங்களில் பயின்றேன்.

தமிழாசிரியராகித் தமிழ்த்தொண்டு புரியவேண்டும் எனப் பெரிதும் விரும்பி, இளமையிலேயே தமிழிலுள்ள இலக்கண இலக்கியங்கள் அனைத்தையும் கற்றேன். ஆனால் அரசு அதிகாரியான என் தந்தையார்க்கு நான் தமிழாசிரியராவதில் விருப்பமில்லை. கதை, கட்டுரைகள் எழுதித் தமிழ்ப் பணியாற்றிட எண்ணித் துவங்கினேன். எனினும், கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிடக் கவிதையே நல்ல கருவி எனக் கருதிப் பின்னர், செய்யுள் யாத்தலையே விழைந்து, தொடர்ந்து எழுதி வரலானேன்.

நான் இருமுறை பரிசுபெற்ற அரசு ஊழியர். ஆமாம்! மத்திய அரசில் பணியாற்றும்போது ஒருமுறையும், மாநில அரசில் அலுவலராக இருந்தபோது இன்னொருமுறையும் பரிசு பெற்றவன். எப்படி?

1946–ஆம் ஆண்டுத் துவக்கத்திலேயே மத்திய அரசின் தபால் தந்தித்துறையில் அஞ்சற்பிரிப்பாளர் என்னும் மூன்றாம் பிரிவு ஊழியராகச் சேர்ந்தேன். தொழிற்சங்க ஈடுபாட்டினால், கிளைச் சங்கத் துணைச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி, இறுதியில் மாநிலச்சங்கத்தின் தலைவராகவும் விளங்கினேன். தஞ்சை, ஈரோடு, மாயூரம் ஆகிய ஊர்களில் பணியாற்றி வந்தேன். 1960–ஆம் ஆண்டில் அனைத்திந்திய ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது, நான்தான் வேலை நிறுத்தத்தைத் தூண்டியவன் என்று கருதப்பட்டுப் பரிசு வழங்கப்பெற்றேன்.

என்ன பரிசு? இரண்டு நாள் சிறைவாசம்; நீதி மன்றத்தில் வழக்கு; வேலை நீக்கம்! நான்கு திங்களுக்குப் பின்னர் மீண்டும்

அலுவலில் சேர்க்கப்பட்டு, ஆனால், நாடு கடத்தப்பட்டேன் கேரளாவுக்கு!

23 ஆண்டுகள் உழைத்த பிறகு, முறையான ஓய்வு பெற 14 ஆண்டுகள் எஞ்சி இருந்த நிலையில், 1969–ஆம் ஆண்டில் பதவி விலகினேன். நானே வலிந்து இராசிநாமாச் செய்ததால், மத்திய அரசிலிருந்து பணிக்கொடையோ, ஓய்வூதியமோ எனக்குக் கிடையாது!

உடனேயே, அதே மாதத்திலேயே, மாநில அரசுக்கு அழைக்கப்பட்டேன். தமிழ்நாட்டு அரசின் செய்தி—மக்கள் தொடர்புத் துறையில் பிரச்சார அலுவலராக நியமிக்கப்பெற்றேன். படிப் படியே உதவி இயக்குநர், துணை இயக்குநராகப் பதவி உயர்வுகளை முறையாகப் பெற்றேன். ஓய்வின்றித் திறமையாக நேர்மையாக உழைப்பவர் என்று பலராலும் போற்றப்பட்டேன். என்னைப் பாராட்டிப் புகழ்ந்து, மேலோர்கள் அளித்த நற்சான்றிதழ்கள் கைவசம் உள்ளன. அந்த ஏழாண்டுகளும் அரசு வட்டாரத்தில் கவிஞர் என்ற பெயரால் குறிக்கப்பட்ட ஒரே அதிகாரி நான்தான்!

இந்நிலையில், 1976–ஆம் ஆண்டில், இந்தியா நெருக்கடி நிலையாலும், தமிழ்நாடு குடியரசுத்தலைவராலும் ஆளப்பட்டுவந்த நேரத்தில், நான் உதவி இயக்குநராகப் பதவி இறக்கம் செய்யப்பட்டுத், தமிழ்நாடு கதர்—கிராமத்தொழில் வாரியத்தில் மக்கள் தொடர்பு அலுவலராக 6 திங்கள் பணியாற்றினேன். திடீரென்று சூலைத் திங்கள் 27–ஆம் நாள், மூன்று மாத முன்னறிவிப்புக்குப் பதிலாக 3 மாதச் சம்பளத்தைக் கையில் தந்து, கட்டாய ஓய்வு என்னும் அரசாணை ஒன்றையும் அளித்து, என்னை வீட்டுக்கு அனுப்பிவைத்தனர். ஓர் அரசு ஊழியர்க்கு இதைவிடப் பெரும் பேறு வாய்க்கப்பெறுமா?

எனக்குக் கட்டாய ஓய்வு தரப்பட்டது அநீதியானது; மாநில அரசின் விதி முறைகளின்படி, நான் ஓய்வுபெற 4 ஆண்டுகள் மீதம் இருக்கின்றன; மீண்டும் என்னைப் பணியில் துணை இயக்குநராக அமர்த்திட வேண்டும்—என ஆளுநர்கட்கும், ஆட்சியாளர்க்கும் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளேன். முடிவு???

எப்படியோ? "நமக்குத் தொழில் கவிதை" அல்ல என்று நான் இதுவரையில் இருந்தாலும், இனி, எழுதித்தானே பிழைக்க வேண்டும்?

ஆனந்தமாக எழுதத் துவங்கியவன் நான். நாற்பது ஆண்டுகளாகக் கவிதை எழுதுகிறேன்; என்றாலும் முழுமையாக என்

பெயரில் ஒரு செய்யுள் நூல் இதுவரை வெளியானதில்லை! என் கவிதைகளில் அங்கதச் சுவையும், நகைச்சுவையும் மிகுந்து காணப் படுவதாகத் திறனாய்வாளர் கருதுகின்றனர். கதைபொதி கவிதைகளே எனக்கு மெத்த விருப்பமானவை. எவையாயினும், யாப்புக்குட்பட்ட மரபு வழிக் கவிதைகளே நான் எழுதுவன. என் கவிதைகளைச் சுவைத்து, என்னைப் பாராட்டி ஊக்கிவிட்ட பேரறிஞர் பெருந்தகையோர் சிலர் இன்றில்லை எனினும், இந்நாள் மேல்மட்டப் பெருமக்கள் பலரும் என் எழுத்துக்களை விரும்பிச் சுவைப்போரே ஆவர்.

தமிழ்நாட்டில் கவிதைகளை எழுதுவோரும், எழுதினாலும் சுவைப்போரும் மிகவும் குறைவு. படித்தால் புரியாது என ஒதுங்கு வோரே அதிகம் பேர்! பத்திரிகைகள் எத்தனை வெளிவந்தாலும் கவிஞர்களுக்கு இடம் தருவதில்லை. கவிதை எழுதுவதற்கு உண்மை யான, முறையான இலக்கண அறிவு வேண்டும். புதுக் கவிதை என்று செய்யுள் சட்ட திட்டங்களை விட்டு விலகுவோர்க்குங்கூடத் தமிழ்ப் புலமை இன்றியமையாதது. எனவே கவிதை எழுத முயல் வோரும் குறைவே! அடிப்படைத் தமிழறிவு சிறிதும் இல்லா தோரும் தமிழ்நாட்டில் தமிழ் எழுத்தாளராக விளங்க முடியும்! ஆங்கிலம் மிகுந்த உரையாடல் நடையிலேயே இன்று யாவும் எழுதப்படுகின்றன; அவையே பாராட்டும் பெறுகின்றன. என்ன செய்வது?

இப்படியாகவும் தமிழ் மொழி வளர்ந்து வந்து கொண்டிருந்த சூழ்நிலையில், ஒரு தமிழ் வார இதழுக்குத் திடீர்த் துணிச்சல் ஒன்று ஏற்பட்டது. "தினமணிகதிர்" என் கவிதைகளை மெத்தவும் விரும்பித், தொடர்ந்து வெளியிட விழைந்தது. அந்த இதழுக் காகவே, தமிழ்மொழியின் எழுத்துச் செழிப்பையும், சொல்வளத் தையும், பொருள் மேம்பாட்டையும் எடுத்துக் காட்டிடும் வண்ணம் ஓரெழுத்தும் ஈரெழுத்தும் பயின்றுவர, எளிமையான கவிதைகள் சில எழுதத் தொடங்கினேன். இவற்றால் எனக்கு ஏற்கனவே இருந் தவர்கள் தவிரப் புதிய வாசகர்களும் உருவாயினர். இதற்காகத் தினமணிகதிருக்கு நான் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

எனவேதான், இன்று நூல் வெளியிட வேண்டிய கட்டா யத்துக்கு நான் ஆளானதும், கதிரில் வெளியான கவிதைகளிற் பல வற்றையும் திரட்டித் தொகுத்து உங்கள்முன் படைக்கும் துணிவு பெற்றேன். மேலும் இந்தத் தொகுப்பில் மூன்று இசைப் பாடல் களும், சில கதைப் பாடல்களும், பெருமக்கள் பற்றிய கவிதை களும், பல்வேறு இதழ்களில் வெளியானவை இடம் பெற்றுள்ளன,

இந்த நூலுக்கு நீங்கள் தரும் உற்சாகம் ஆதரவு ஊக்கம் இவைகளைப் பொறுத்து, நான் அடுத்தடுத்துச் சில நூல்களை வெளியிட எண்ணுகின்றேன். கவிதைத் தொகுப்பு மட்டுமின்றிச் சில உரைநடைப் புத்தகங்களும் எழுத நினைக்கிறேன். இன்றைய வரலாற்று நிகழ்ச்சிகள் சில நேற்றையச்செய்திகளாக உருவெடுக்கு முன்னர், அந்தக் கருவின் சினையில் சிறியதொரு அணுவாக நானும் இருந்திருக்கிறேன் அல்லவா? நான் நேரில் பங்கேற்று அறிந்துள்ள சரித்திரச் சம்பவங்களை எப்போதாவது உங்களுக்கு நானே தெரிவித்திட வேண்டாமா? வேண்டுமெனில், அவற்றை யெல்லாம் உரைத்திடும் வாய்ப்பு, இப்போதன்றி வேறெப்போது நேரும்?

மிகுந்த இன்னலுக்கும் முட்டுப்பாட்டிற்கும் இடையே இந் நூலை வெளிக்கொணர்ந்துள்ளேன். தயங்கித் தயங்கி, ஓராண்டாய்த் துணிவு வராமல், பின்னடைந்தேன். மூவேந்தர் அச்சகம் முத்து, ஒத்துழைக்க முன் வந்தார். உடுக்கை இழந்தவன் கை போல உதவினார். இருள் சூழ்ந்த போதில் ஒளி வழங்கினார். அவருக்கு நன்றி. பல்சுவை ஓவிய நிபுணர் அருமை நண்பர் கோபுலு அவர்களும் நன்றிக்குரியார். முகப்பு ஓவியம் அவர் கை வண்ணத்தில் முகிழ்த்தது!

இனி, என் உடல் பொருள் உயிரானவர் என்னைப் பாராட்டிச் சிலாசாசனம் போல் வடித்துள்ள சொற்களிற் சில, அட்டையின் பின்புறம் இடம்பெற்று நூலுக்கு மெருகேற்றுகின்றன.

கையேந்தி இந்நூலை வரவேற்றுத் தமிழுலகம் எனக்குக் கைகொடுக்கும் என்று நம்பிக் கைகுவித்து வணங்குகிறேன்.

ஈன்று புறந்தந்த என்தாய் சோதிக்கும்
சான்றோராம் தந்தை சுந்தர மூர்த்திக்கும்
ஆன்றவிந் தடங்கிய அன்பின் அணிகலனாய்த்
தோன்றிய இச்செய்யுள் தொகுப்புநூல் வழங்கினனே.

அன்பன்

சு. கருணானந்தம்

# நன்றி

தமிழ்நாட்டில் புத்தகம் படிக்கும் ஆர்வம் மீண்டும் தழைத்துப் பூத்துக் குலுங்குவது கண்டு பெருமகிழ் வடைகின்றோம். நிறையப் பதிப்பகங்கள் நாள்தோறும் தோன்றுவதும், பலதுறை தழுவிய நூல்கள் ஆங்காங்கு வெளியிடப் பெறுவதும் நல்ல அறிகுறிகளாகும். தாய் மொழி வளர்கிறது என்னும் செய்தியோடு, எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் ஊக்கம் பெறுகிறார்கள் என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

இந்தப் புதுமலர்ச்சி கண்டு பூரிப்பும் துணிவும் கொண்டு, நாங்களும் புதிதாக ஒரு புத்தகத்தை வெளியிட விழைந்தோம். எளிய முறையில் இயற்றப் பெற்றுள்ள கவிதைகள் இன்று பல்லோராலும் விரும்பிப் படிக்கப் படுகின்றன. எனவேதான் இந்தக் கவிதைத் தொகுப்பு தமிழ் மக்களால் வரவேற்கப் பெறும் என்று நம்புகின்றோம்.

நாங்களும் புதியவர்கள். எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் நல்குங்கள். நாங்கள் தொடர்ந்து இத்துறையில் தொண்டாற்றிட உதவுங்கள். வணக்கம்.

**குமணன் பதிப்பகத்தார்**

சென்னை-90

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | சுமைதாங்கி | 1 |
| 2. | கருவேப்பிலை | 3 |
| 3. | ஈ | 5 |
| 4. | பல் | 7 |
| 5. | மாலை | 9 |
| 6. | படி | 11 |
| 7. | தாள் | 13 |
| 8. | டிவி | 15 |
| 9. | ஏணி–தோணி | 17 |
| 10. | கைகாட்டி | 19 |
| 11. | கா | 21 |
| 12. | கை | 23 |
| 13. | பா | 25 |
| 14. | பை | 27 |
| 15. | மா | 29 |
| 16. | மை | 31 |
| 17. | இசை | 33 |
| 18. | கடவுள் | 35 |
| 19. | கம் | 37 |
| 20. | சம் | 39 |
| 21. | தம் | 41 |
| 22. | பம் | 43 |
| 23. | கல் | 45 |
| 24. | சல் | 47 |
| 25. | மானம் | 49 |
| 26. | தை | 52 |
| 27. | தா | 53 |
| 28. | வை | 55 |
| 29. | வா | 57 |
| 30. | தல் | 59 |
| 31. | மல் | 61 |
| 32. | வல் | 63 |
| 33. | பெருந்தன்மை | 65 |
| 34. | விருந்து | 67 |
| 35. | வெறுங்கை | 69 |
| 36. | கடிதம் | 71 |
| 37. | பண்பாடு | 73 |
| 38. | கஞ்சி | 75 |
| 39. | 1, 3, 5, 7 | 77 |
| 40. | கோட்டை | 79 |
| 41. | வானம் | 81 |
| 42. | ஆடை | 83 |
| 43. | கடல் | 85 |
| 44. | நாடு | 87 |
| 45. | ஒழுங்கு | 91 |
| 46. | பலன் | 92 |
| 47. | பிழை | 93 |
| 48. | சுற்றுலா | 94 |
| 49. | வள்ளல் | 96 |
| 50. | அண்ணல் | 97 |
| 51. | அய்யா | 99 |
| 52. | புதையல் | 101 |
| 53. | புதுமை | 103 |
| 54. | வாழ்வு | 105 |
| 55. | உணவு | 106 |
| 56. | பிள்ளை | 107 |
| 57. | சிங்கம் | 108 |
| 58. | மலை | 109 |
| 59. | பேறு | 110 |
| 60. | காப்பான் | 111 |

# சுமைதாங்கி

நீரில்லை எனில்உணவும் இல்லை; உண்டி
நிறையவில்லை என்றாலோ உடம்பும் இல்லை.
தேரில்லா மன்னவரே இல்லை; அன்னார்
செலவழிக்க வில்லையெனில் கோவில் இல்லை.
பேரில்லா மானுடரும் இல்லை; ஏனோ
பேரெடுக்க அனைவராலும் முடிவ தில்லை?
வேரில்லா வேறுமரம் இல்லை; என்னை
வெட்டவெளிச் சாலையோரம் நட்டு வைத்தார்!

கால்கடுக்க நிற்கின்றேன் தினமும்; என்ன
கடுங்காவல் தண்டனையா? யார்கொ டுத்தார்?
நூல்களிலே சொன்னபடி கொடிய வர்க்கும்
நுங்கைப்போல் குளிர்உள்ளம் காட்டு கின்றேன்.
கால்கடுக்கச் சுமையோடு வருவார் தம்மைக்
கண்டிரங்கி நானதனை வாங்கிக் கொள்வேன்.
பால்கொடாத மாடுகளும் அரிப்பெ டுத்தால்
பாங்குடனே என்மீதில் உராய்ந்து செல்லும்!

தலைக்கனத்தை இறக்கிடுவேன்; நன்றி சொல்லும்
சமுதாயம் நினைக்கிறதா? இறுமாப் பென்னும்
தலைக்கனத்தை இறக்குவதார்? சுடுமண் என்று
சாற்றிடுவோம் செங்கல்லைக்; கருங்கல் லாக
நிலைக்கதவு போன்றுள்ளேன் எனினும் பாகாய்
நெக்குருகும் நெஞ்சுடையேன்! இந்நாள் என்னைக்
கலைக்கண்ணால் எங்கேயோ சிற்றூர் தன்னில்
காணுங்கால் உமதுள்ளம் களிப்பு கூடும்!

நாதொங்கத் தொங்களங்கும் ஓட லாலே
நாயென்று வந்ததுபேர்; தாழ தற்கும்
நாதொங்கு தல்போன்ற கார ணத்தால்
நாதாங்கி என்றுபெயர்; பளுவி னுலே
பாதங்கள் வீங்காத பாருங் கல்லாய்ப்
பாதையிலே உள்ளசுமை தாங்கித் தூண்நான்
பாதொங்கும் வரவேற்பு வளைவு போலப்
பகட்டின்றி நிற்கின்றேன்; பார்த்துச் செல்வீர்!

சுமைதாங்கி நான்மட்டுந் தானு? அன்புத்
தொண்டாற்றும் தாய்மார்கள் பத்துத் திங்கள்
அமைவாக மகவுதனைச் சுமக்கின் ருரே—
அவரெந்த நன்றியினை எதிர்பார்த் தார்கள்?
இமைபோல உமையெல்லாம் பாது காத்தே
ஏற்கின்ருர் பாரத்தை! இவ்வா ருகச்
சுமைதாங்கும் நேரத்தில், கூழாங் கல்லும்
தூக்குமெனச் சொன்ஞல்யார் நம்பு வார்கள்?

சுமையெல்லாம் சுவையாக மாற்றிக் கொண்டே
சுகமெல்லாம் மறந்திருக்கும் தியாக உள்ளம்
அமைவதுதான் எளிதாமோ? அன்னை என்னும்
அன்புடைய இனம்போல்தான் யானும் என்பேன்!
இமைமூடித் துயில்வதுபோல் தோன்றி ஞலும்
யார்துயரும் தாம்சுமந்தே இனிமை தந்து
நமைவளர்த்த அன்னனவர் போல, நானும்
நாள்தோறும் சுமைதாங்கி, மரத்துப் போனேன்!

# கரு வேப்பிலை

கருவாக விதையாகச் சினையு மாகக்
கருவூலப் பொருளாகப் பெயரெ டுத்தேன்.
திருவாக வாழ்ந்தாலும் துருப்பி டித்தே
தேய்ந்தாலும் நான்மட்டும் ஓய்ந்தா போவேன்?
கருவாழை யானஎனக் கெதிர்ப்புக் காட்டக்
கடையடைப்போ ஊர்வலமோ ஏது மில்லை;
திருவாளர் சிலர்கட்டுப் பாடென் கின்றார்;
சிறக்கட்டும் கண்ணியம்! என் கடமை என்ன?

அணுவென்றே உரைத்திட்டார் அறிஞர் என்னை;
அடக்கத்தில் எனக்குநிகர் நான்தான்! தூய
பணிவுள்ள பருவப்பெண் நாணத் தைப்போல்
பாதுகாப்புச் சட்டத்தின் கைதி யாகித்
துணிவோடு விடுதலையும் பெறுவேன், ஓர்நாள்
சுமைதாங்கும் பூமிக்கோர் வரவும் ஆவேன்.
உணவாக ஐம்பூதம் எனைச்சு வைக்கும்;
உடலின்ஐம் புலன்களையும் நான்நு கர்வேன்.

அனைத்துயிரின் இனத்தினையே பெருக்கிக் கூட்டும்
ஆசிரியன் அடியேன்தான்; ஆனால் ஒன்று!
பனைத்துணையாய்ப் பாவையிடம் எனைப்பார்க் காமல்
பாழ்வெளியைப் பயன்படுத்தப் பசுமை கொஞ்சும்
தினைத்துணையே விளைகின்ற விவசா யத்தில்
திறமான விஞ்ஞானப் புதுமை சேர்த்தால்
நினைத்தபடிப் படிப்படியே உணவுற் பத்தி
நிறைவெய்தும்; அதுதானே என்பே ரின்பம்!

காவியஞ்செய் பாவலரோ என்னைத் தேடிக்
கருமுகிலாய்த் திரிகின்றார்! சிலவேண் டாத
தாவரம்போல் சழக்கரிடம் தழைத்த போதும்,
சலிக்கின்ற காலத்தால் கருகிப் போவேன்.
தூவியதோர் பூமழைபோல் சொலல்வல் லார்க்கோ
சுரக்கின்ற கேணியாக மனத்தி ருப்பேன்.
ஆவியன்ன பயிரும்நான்; களையும் நானு?
அறிவுடையீர்; களையைமட்டும் களைய வாரீர்!

கருவேப்பி லைமணக்கச் சமையல் செய்து—
கட்டாயம் சாப்பிடுமுன் ஒதுக்கு கின்றீர்!
தெருவேம்பின் இலைகசக்கும்; கருணை கூர்ந்து
தின்கின்றீர் சர்க்கரைநோய் தீரும் என்றே!
கருவாடு மெல்லுகையில் மூக்கை மூடிக்
கருமத்தைப் பெருமனதால் முடிக்கின் றீர்கள்!
கருவேல முள்வேலி நல்ல காவல்;
கைபட்டால் குத்துமென விலகிச் செல்வீர்!

கருமணியிற் பாவைதான் பார்வை நல்கிக்
கண்களுக்கே எழில்கூட்டும் கருவி யாகும்.
கருப்பூரம் தானுருகி எரியும் போதில்
கரிகூட மிஞ்சாமல் ஒளிவ ழங்கும்.
கருமேகம் வடிக்கின்ற கண்ணீர் தானே
கழனித்தாய் கருவுயிர்க்க உதவும் வித்து?
கருக்காயே நெல்லைப்போல் தோன்றி னாலும்
கருதவொண்ணுப் பதராகும்; அரிசி யில்லை!

ஆறுமுகம் பன்னிருகை இருகால் கொண்டோன்
ஆண்டவனும்; மதிக்கின்றீர், வணங்கு கின்றீர்!
ஆறுகாலின் சீருயிராம் என்னைக் கண்டால்
அடியோடு வெறுக்கின்றீர்! ஏனோ ஐயா?
ஏறுமுகம் இறங்குமுகம் எதில்தான் இல்லை?
எனக்கென்றும் அதிலெல்லாம் உடன்பா டுண்டு;
மாறுபாடு கிடையாது; மனித ரைப்போல்
மந்திமனம் வண்டுமனம் எனக்கு வேண்டாம்.

உயிரெழுத்து வரிசையிலே நான்காய் நிற்பேன்!
உமக்கேனோ என்பெயரை உச்ச ரித்தால்
தயிரின்றிச் சாப்பிட்ட சைவன் போலத்
தகதகவென் றெரிகிறது வயிற்றி லெல்லாம்?
அயலெழுத்தோ குறுகியதாம்; அண்டை வீட்டார்
அயராது பிறன்மனையைக் காய்தல் போலே!
பயிலாது துயின்றிருப்போர் விழிப்பார்; என்னைப்
பளிச்சென்று பல்தெரிய விளக்கம் செய்வார்!

இரப்பதுதான் தொழிலென்று முடிவு கட்டி
இவ்வுலகில் வாழ்வதற்கே உரிமை பெற்றோர்
சுரப்பதெல்லாம் அன்பென்னும் கருத்தில் எங்கும்
சுற்றியலைந் தெனைக்கூறிச் சொப்ப லாலே
நிரப்பிடுவார் நீர்கொண்டு தம்வ யிற்றை;
நித்தநித்தம் செத்தெழுவார்; இழிவு காணார்!
பரப்பளவில் மிக்கஇந்த நாட்டில் ஈகைப்
பண்பெல்லாம் பண்டைநாள் கதையா யிற்றும்.

நான்மொய்த்த பண்டங்கள் குப்பைத் தொட்டி
நாடிவிடும்; நல்லதுதான்! என்ன செய்ய?
தேன்மொய்த்த பலாச்சுளைமேல் யானுங் காதல்
தீருமட்டும் குடியிருப்பேன்; குற்றம் உண்டா?
வான்மொய்க்கும் விண்மீன்போல் யானுட் கார்ந்தால்
வாளியினுல் மருந்துதனைத் தெளிக்கின் றீரே!
பேன்மொய்க்கும் தலைதனைநீர் என்ன செய்வீர்?
பிளந்திடவா செய்கின்றீர் கத்தி கொண்டு?

சமதரும வாதியென்ருல் நான்தான்! ஓர்நாள்
சாய்க்கடையில் தெருமலத்தில் உட்கார்ந் தாலும்
நமதருமைத் திருக்கோவில் ஆண்ட வற்காம்
நைவேத்யப் பொங்கலிலும் அமர்வேன்! பின்னர்
எமதருமன் ஊரடைந்த பேர்கள் மீதும்
இருந்திடுவேன்! மணமக்கள் இடையிற் சென்றும்
சுமைதரும்பூ மாலைகளில் மணம்நு கர்வேன்!
சுகவாழ்வாம் இகவாழ்வு; நகைப்பேன் உம்மை!

சுரங்களிலே இரண்டாவ திடத்தைப் பெற்றுச்
சுமாராக ஒலிக்கின்ற 'ரி' தான் என்னைக்
கரங்களிலே இணைத்தவுடன் மேலே போகும்;
கமகங்கள் பிர்காக்கள் உதிரும் பின்னர்!
மரங்களிலே பாலைவளம் காட்டும் ஈச்சை;
மறந்தென்னை விடுத்திட்டால் பொருளே வேறும்!
அரங்களின்றி அறுக்கின்றேன் என்பீர், இன்னும்
அடியேனின் கதைசொன்ருல்! வணக்கம், ஈ, ஈ!

# பல்

பலவென்னும் பொருள்படவும் என்னைச் சொல்வார்;
பதினாறாய் இருவரிசை நிறையாப் போது
சிலவேனும் வாய்க்குள்ளே நிலையா விட்டால்
சிறுகுழவி, பெருங்கிழவி என்பார் மக்கள்!
பலசாலி எதிரியிடம் கையை ஓங்கிப்
"பாருன்னை உதிர்க்கின்றேன்!" என்றால் வீரம்.
உலகமிதில் எழுந்தவுடன் எனைத்து லக்கல்
ஓம்என்ற பிரணவம்போல் முதன்மை யாகும்.

எனையிளித்துக் கைபிசைதல் இழிவே யாகும்;
இரவலரின் அரும்பண்பாம் இஃதோர் தீமை.
எனைக்கடித்தல் சினத்துக்கே சின்னம் என்பர்;
இதையொழித்தே அடக்கமாக விளங்கல் நன்மை.
எனைக்காட்டி முறுவலித்தால் இன்பம் பொங்கும்;
எழிலார்ந்த அகத்துக்கே எடுத்துக் காட்டாம்.
எனைப்பேணிக் காவாக்கால் நோய்க்கே மூலம்;
எனையிழந்தால் முகத்துக்கே அழகு போகும்:

முத்தென்பான்; முல்லைப்பூ அரும்பு கோத்த
முழுச்சரமோ எனப்புகழ்வான்; என்வாய் எச்சில்
சத்தென்பான்; காதலியை வயப்ப டுத்தச்
"சற்றேநீ முறுவலித்தால் சொக்கிப் போவேன்;
அத்தானை அகலாதே!" என்ற ணைப்பான்.
அறவெறுப்பான் எனைத்தூய்மை செய்யா விட்டால்!
முத்தமிட இதழ்சேர முடியா தென்றும்
முறைதவறி நான்வெளியே வளர்ந்து வந்தால்!

கொன்றுதின்னும் புலாலுணவு கொள்வோற் கெல்லாம்
குறைவின்றி என்பணியை முடிப்பேன்; ஆனால்
என்றுமவன் அவ்வுணவை நம்பி வாழ்தல்
இயலாது; வயதானால் சீர ணித்தல்
அன்னாடம் எளிதன்றே; மருத்து வர்கள்
ஆகாது கொழுப்பென்பர்! யாவ ருக்கும்
நன்றென்பர் மரக்கறிதான்! என்வி ருப்பம்
நன்றியுடன் இறுதிவரை நல்ல தொண்டு!

நாக்கறியும் சுவையென்பர்; நானில் லாமல்
நாக்கெதனை மென்றுதரும்? இப்ப டிச்செல்
வாக்குடையார் புகழையெலாம் பறித்துக் கொண்டால்
வறுமையுடன் நானென்று பெருமை கொள்வேன்?
நோய்க்கிருமி எனைத்தாக்கிச் சொத்தை யானால்
நொடிப்பொழுதில் எனைப்பிடுங்கி எறிந்து விட்டுப்
போக்கற்றுப் போலிகளைப் பொருத்தி வந்தீர்;
புத்துயிரைத் தருகின்றார் எனைத்தி ருத்தி!

எனக்கிடையில் கால்போட்டால் காலை நேரம்
எதிர்பார்த்துக் காத்திருப்பீர்; இந்தச் சத்து
தனைவிடுத்தால் வள்ளுவர்க்குக் குறளி யற்றத்
தக்ககரு மூன்றில்லை; இளைஞ ருக்கு
முனைப்பெடுக்கும் இக்கல்வி தேவை யென்றே
முழங்குகிறார் இந்நாளில்; உண்மை தானே?
எனையுடைத்துக் கைமீதில் தருவீர், இன்னும்
எனைப்பற்றிச் சுய புராணம் பாடிச் சென்றால்...

# மாலை

எதிரிகளைக் கூடஇன்று நம்ப லாகும்;
ஏமாற்றும் அரசியலின் எத்த ரான
எதிரிகளை யார்மதிப்பார்? அஃதே போல்தான்
உலகத்தை நறுமணத்தால் மகிழ்வித் தாலும்
உதிர்வதற்கே மலர்கின்ற பூக்க ளையும்
ஒருவருமே சூடமாட்டார்; அதனால் நானே,
சதிராடிச் செடிநுனியில் மடியு முன்னர்
சாகாத புதுவாழ்வில் இணைக்கச் செய்வேன் !

காலைக்குப் பகைவன்நான்! கதிரோன் கண்டு
கண்விழித்துக் கடன்முடித்துக் கடுகி ஓடி
வேலைக்குச் செல்கின்ற ஆண்கள் பெண்கள்
விரும்பியெனை வரவேற்கத் தவங்கி டப்பர்.
சோலைக்குள் சோர்வகற்றுந் தென்றல் கூடச்
சுகமாயென் வருகையில்தான் சொக்கி, வீசும்!
சேலைக்கும் வேட்டிக்கும் உறவை மூட்டும்
சிறுகாதல் என்மடியில் எரியும் தீயாய்!

மனிதனது வாழ்க்கையிலே ஒரேநா ளாகி
மறக்கவொணுத் திருவிழாவாய் நிலவி என்றும்
இனிதான நினைவுகளால் கிளுகி ளுக்கும்
இதயத்திற் கிதமான அன்பில் தோய்ந்து
புனிதமென எதிர்காலம் முழுதும் போற்றப்
பொருள்போகம் அனைத்துக்கும் தொடர்பு நல்கித்
தனிமனிதன் இருவராகிப் பலராய்ப் பல்குந்
தமிழ்மணத்தால் பிணைப்பதுவும் நானே அன்றோ?

இருக்கின்ற சிலநாளில் யார்க்கும் நன்மை
இயற்ருமல் பயனற்றுப் பொய்யே பேசித்
தருக்கிநின்று தானென்னும் ஆணவத்தால்
தலைவணங்காக் கொடுமையாள ராக வாழ்ந்து
பெருக்கமான நிலையென்றும் அழியா தென்ற
பேதைமனக் கோட்டை ஓர்நாள் இடிந்து வீழ
உருக்கமுடன் அழுவதற்கும் ஆளில் லாமல்
ஊர்வலமாய்ச் செல்வோர்க்கும் அழகு நானே!

அரிப்பெடுக்கும் சிலருக்கே ஒரு 'நான்' வந்தால்;
அடுத்தபடி இன்னொரு 'நான்' கழுத்தில் போட்டால்
சிரிப்பெடுக்கும்; கர்ச்சிப்பார் மேடை யேறிச்
சிங்கம்போல்; பதவியிலே உயர்வு வேண்டி
நரிப்பழக்கம் கையாள்வோர் 'எனைக்'கைக் கொள்வார்!
நாட்டினிலே மிகப்பெரிய 'லை' யே நான்தான்!
பிரிப்பதுதான் சிலர்தொழிலாம்; குரங்கு கையில்
பிரியமுடன் எனைத்தந்த பான்மை போலே!

என்முன்னர் 'கா' போட்டால் காண்ப தெல்லாம்
எப்பொழுதும் மஞ்சளாகத் தோன்று மென்பர்.
என்முன்னர் 'பா' போட்டால் கவிஞர் சூட்டி
ஈடற்ற தலைவனுக்குப் படைப் பதாகும்.
என்முன்னர், 'மணி' போட்டால் துறவி யர்கள்
எழில்காவி உடைமீதில் அலங்க ரிப்பேன்.
என்முன்னர் வரும்மதியம் விழுங்கிப் பின்னர்
இரவுக்கே தினந்தினமும் இரையாய் ஆவேன்!

# படி

படிபடியென் றேதலையில் அடித்துக் கொண்டார்;
பள்ளிவிட்டுக் கல்லூரிப் படிமி தித்தேன்!
கொடிபிடியென் றுணையிட்டார் அண்ணல் காந்தி;
குடந்தையிலே போராட்டக் களம்ப டிந்தேன்!
தடியடியும் பிரம்படியும் வெள்ளை ஆட்சி
தரும்படிதான் வரும்படிகள் எல்லாம் அன்று!
படியரிசி எப்படியோ நான்க ணுவாய்ப்
பாடிவிற்ற காலம்மறு படிவா ராதோ?

செப்படிவித் தைபடித்தார் யாரும் உண்டோ?
சிதைந்தலையும் கருமேகத் திரளைக் கூட்டி
அப்படியே பிழிந்தெடுத்து மழையாய் மாற்றி
ஆறுகுளம் ஏரிகிண றெல்லாம் நீராய்க்
கொப்பளிக்கும் படிநிறைக்க மார்க்கம் காண்போம்!
குவித்திருந்த தானியங்கள் மாநி லங்கள்
இப்படியே கேட்டபடித் தந்து வந்தோம்;
இன்றேங்கும் படியாளும் வறட்சி யாலே!

"ஏற்றிவிடும் ஏணிக்குப் படிகள் உண்டா?"
ஏறியபின் இப்படியும் சிலபேர் கேட்பர்!
போற்றியவர் குழறுபடிக் கொள்கை யாலே
புளுகுகின்ற படியாகிப் புழுதி வாரித்
தூற்றிடுவார் பெரும்படியாய்! மாடி மீதில்
தூக்கிவிடும் மின் தூக்கி பழுதாய்ப் போனால்
மாற்றுவழி சுழற்படிதான் அன்றோ? என்றும்
மறவாத படியிருப்போம் படிக்கட் டைத்தான்!

''கரும்படிஉன் சொல்லெனக்குக் காரி கையே
        கண்டபடி உளறுதே! கடைக்கண் வீசித்
திரும்படி;என் கன்னத்தில் இதழ்ப டிந்தே
        தித்திக்கும் படியாகப் படித்தேன் ஊறும்
வரும்படியாய் முத்திரையும் தருவா'' யென்றால்...
        வளைவாயிற் படிவரைக்கும் வருவாள், செல்வாள்.
''துரும்படி என் மாற்றாரின் பகைமை யெல்லாம்!
        தூளாகும் படிமுறிப்பேன், பார்பார்!'' என்பான்.

படிப்படியாய் முன்னேற்றங் காண்ப தன்றிப்
        'படா'ரென்று மேலேற முனைவோர், வீழ்ந்து
பொடிப்பொடியாய் நொறுங்கிடுவார்! புகழை நோக்கிப்
        பொச்சரிப்பார் உருப்படியாய் வாழ மாட்டார்.
அடிப்படையை மிஞ்சுமாறு படிகேட் பாரை
        அறியாதார் சொற்படியே நடப்போர் என்பர்.
நடிப்பதுதான் மிகஅதிகப் படியென் பார்கள்
        நயவஞ்சப் பண்புகொண்டார் உறவு கண்டு.

படிமானம் தேவைதான்; அடங்கிச் செல்வோன்
        பைத்தியமென் றெண்ணுகின்ற படிவேண் டாமே!
படிதாண்டாப் பத்தினியென் றுரைப்ப தாலே
        பழிவாங்கிப் பெண்குலத்தை அடக்க லாமோ?
படிவேண்டும் எனக்கேட்டால் நூல கத்தார்
        பழைய நூலின் பிரதிகளை எடுத்த ளிப்பார்.
படியாத பாமரர்க்குப் படியாய் நிற்போம்;
        பழையபடி கீழ்ப்படியா வண்ணம் காப்போம்!

# தாள்

வாள்பிடித்துத் தோள்உயர்த்திச் சூள்உ ரைத்தான்:—
"வஞ்சகமாய் வளைத்திட்ட வெள்ளைக் காரர்
தாள்பிடித்துத் தன்மானம் இழக்க மாட்டேன்!
தலைதாழா (து) உயிர்விடவும் துணிவேன்!" என்றான்.
ஆள்பிடித்துத் துரோகத்தை விதைத்து வந்த
அந்நியரைப் புறங்கண்டான் கட்ட பொம்மன்.
தாள்பிடித்து வாழ்வதுதான் தொழிலெ னக்கு!
தயக்கமென்ன? எழுத்தாள்வான் எதைப்பி டிப்பான்?

தாள்கிடைத்தால் போதாது; பேறு வேண்டும்.
தடைபடாது கருத்தூறும் புதுமை தேவை.
தாள்கிடைத்தால் கறுப்புமையால் கிறுக்கு வோர்கள்
தாளாளர் ஆவாரா? கூளம் ஆவார்!
தாள்கிடைத்தால் மாட்டுக்குத் தீனி ஆகும்;
தங்கநிற நெல்பிரிந்தால் வைக்கோல் தாள்தான்!
"தாள்" கிடைத்தால் வாலிபர்க்கு மகிழ்ச்சி! எத் "தாள்"?
தந் "தாள்" வந்"தாள்" பின்னர் அணைத்தி ருந்"தாள்."

பிறந்தாள்பின் வளர்ந்தாள்நால் வயத டைந்தாள்
பிறர்மெச்ச மொழிந்தாள்வாய் முத்து திர்ந்தாள்
சிறந்தாள்நற் செயல்புரிந்தாள் பள்ளி சேர்ந்தாள்
சீர்மிகுந்தாள் எழில்மலர்ந்தாள் மகிழ்ந்தி ருந்தாள்
மறந்தாள்தன் வயமிழந்தாள் மனங்கு லைந்தாள்
மணம்விழைந்தாள் ஆள்நினைந்தாள் துணிந்தாள் ஓர்நாள்
துறந்தாள்முன் பெற்றோரைப் பிரிந்தாள் வந்தாள்
தொடர்ந்தாள்வேற் றூர்நடந்தாள் இணைந்தாள் வாழ்ந்தாள்

தாள்என்ருல் இலைஎன்றும் பொருளு ரைத்துத்
தமிழ்முன்னோர் பனைஓலைச் சுவடி கண்டார்.
தாள்எனிலோ காகிதமாம் புரியும், இன்று
தன்மையினுல் இவ்விருதாள் ஒன்றே என்போம்.
தாள்ஒற்றி மைநிறைய வீணுய்ப் போகும்;
தடங்கலுடன் எழுதுங்கால் உதறித் தள்ளி!
தாள்ஒன்றில் ஒன்று, பத்து, நூறு ரூபாய்
தருகின்ருர்; பணத்தருமை என்ன ஆகும்?

தாள்உண்ட தண்ணீரை இளநீ ராக்கித்
தலையாலே தருவதுதான் தென்னைப் பண்பு;
தாள்கண்டாள் இராமனது தாளே கண்டு
தாங்கவொணுக் காதலுறல் சீதைப் பண்பு;
தாள்கொண்ட பாதுகைக்குப் பட்டஞ் சூட்டத்
தலைமீது சுமந்ததுதான் பரதன் பண்பு;
தாள்கொண்டு மாவலியின் தலைய முத்தித்
தரைக்குள்ளே அழுத்திடுதல் தெய்வப் பண்பா?

தாள்களிலே பல்வகைத்தாள்; கதைத்தாள் செய்தி
தைக்குந்தாள் வதந்தித்தாள் திரைத்தாள் மஞ்சள்
தேள்கொடுக்குத் துடுக்குத்தாள் சுடுந்தாள் தீத்தாள்
சேர்க்குந்தாள் காதலர்தாள் நிர்வா ணத்தாள்
ஆள்களையே மிரட்டுந்தாள் அரசி யல்தாள்
அறிவுத்தாள் விளம்பரத்தாள் தேசி யத்தாள்
கோள்குறித்துப் பலன்சொலுந்தாள் குடும்பத் தார்தாள்-
கோணலிலாக் கொள்கைத்தாள் இத்தாள் ஒன்றே!

# டிவி

“ஆட்டிவிட்டால் யாரொருவர் ஆடா தாரே?
அவனன்றி ஓரணுவும் ஆடா” தென்பார்.
ஆட்டிவிட்டால் தஞ்சாவூர்ப் பொம்மை கூட
ஆடிவிழ மாட்டாமல் அமைத்துள் ளார்கள்.
காட்டிவிட்டால் மெய்ம்மைக்கு மதிப்புத் தாழும்;
கட்டிவிட்டால் அவிழ்ப்பதற்கும் ஒருவர் தேவை.
ஈட்டி விட்டால் வேகமாகப் பாயும்; செல்வம்
ஈட்டிவிட்டால் செலவழிக்க மனம்வா ராது!

இருட்டிவிட்டால் கள்வர்க்கு நன்மை; செய்தி
எட்டிவிட்டால் காவலர்க்கு வசதி யாகும்!
உருட்டிவிட்டால் பந்தாலுல் உருளும்; காற்றை
ஓட்டிவிட்டால் நசுங்கிப்போய் உருவம் தேயும்!
சுருட்டிவிட்டால் தமக்குத்தான் சொந்த மென்று
சொத்துரிமை பேசிடுவார் சுயந லத்தை
வெருட்டிவிட்டால் சமதர்மம் தழைக்கு மென்பார்.
வெண்டிவிட்டால் குழம்புநன்றாய் மணக்கும், ஆமாம்!

ஊட்டிவிட்டுத் தாய்ப்பறவை வளர்க்கும் குஞ்சை;
உண்டிவிட்டால் வளர்வாலுே மனிதன் நாளும்?
மாட்டிவிட்டுக் கழற்றுவது சுலப மாகும்;
மாடிவிட்டுக் கீழிறங்க மனம்கேட் காது.
வாட்டிவிட்டு மாமிசத்தைத் தின்றான் ஓர்நாள்.
வட்டிவிட்டு முதல்வாங்கார் கெட்டிப் பிள்ளை.
நாட்டிவிட்டுக் கொடிபறக்க வைத்தான் சேரன்;
நாடிவிட்டுப் போயினரே வடவ மன்னர்!

ஆடிவிட்டால் விதைப்பதற்கு மாத மில்லை.
அடிவிழாமல் படிப்பவனே நன்மா ணுக்கன்!
பாடிவிட்டால் பரிசுதர மன்ன ரில்லை;
படிவிழாதா என்றேங்க வள்ளல் இல்லை!
கூடிவிட்டால் காதலர்கள் இல்ல றத்தார்;
குடிவிளங்கக் குழந்தைகுட்டி விளங்க வைப்பார்!
ஓடிவிட்டால் தப்பித்தான்; அகப்பட் டோன் தான்
ஒட்டிவிட்டால் பிய்க்கவொண்ணுப் படம்போ லாவான்!

மழைவேண்டி விண்ணேக்கி விண்ணப் பித்தார்;
மழைவேண்டி விமானத்தால் மருந்தும் விட்டார்!
தழைவேண்டி விடியலிலே மரத்தில் ஏறித்
தலைதட்டி விழுந்தவனே சிதறிச் செத்தான்!
கழைவேண்டி விளையாடி விழிநீர் சிந்திக்
கடைகட்டி விசனித்தான் வருவாய் இல்லான்!
குழைவேண்டி விதிர்விதிர்க்கக் காதைக் குத்திக்
குண்டலங்கள் மாட்டிடுவார் குதூக லிக்க!

இட்டெலிவி சும்பிலேபோய்ப் பறக்கு மென்ருல்
என்பாட்டி விடமாட்டாள்; "அடிவி டாதே!
சட்டெனவே கிட்டிவிட வழியென்?" னென்பாள்!
சரியாக வானெலிக்குப் பேர்த்தி போல
எட்டிவிடா ஒலிகளெல்லாம் வீட்டில் கேட்கும்
எளிதாம்ஓர் சாதனமாய் நிகழ்ச்சி எல்லாம்
பெட்டியின்மேல் விழச்செய்யும் தொலைவுக் காட்சிப்
பெருநிலையம் பிறந்துளது தமிழ கத்தில்!

# ஏணி—தோணி

**ஏணி :**

ஆற்றுவெள்ளம் விரைந்தோடும்; இறங்கி நீந்த
அறியாதார் உனைத்தானே நாடு கின்றார்!
ஏற்றுகின்றாய்; இக்கரையில் உள்ளோர் மீதில்
எத்தனையோ அக்கறையாய் அக்க ரைக்கே
மாற்றுகின்றாய்; மகிழ்வோடு காத்தி ருந்து
மறுபடியும் திரும்புவோரை அழைத்து மீள்வாய்.
போற்றுகின்றார்; உன்பாடு கொண்டாட் டந்தான்
புகழ்ச்சியினால் தண்ணீர்போல் குளிர்ந்து போவாய்!

**தோணி :**

ஒப்புரவாய் ஏறிடுவோர் ஓரம் நின்றால்
உடனடியாய்ச் சமன்செய்ய இயலா வண்ணம்
குப்புறநான் கவிழ்ந்திட்டால் என்ன நேரும்?
குடிகேடி என்றென்னைச் சபிப்பார் அன்றோ!
எப்போதும் நீர்மேலே மிதப்ப தாலே
ஏற்கனவே குளிர்ந்துள்ளேன்; நீயும் என்னைத்
தப்பாக நினைக்கின்றாய்; ஒன்று கேட்பேன்...
தரைமீதில் ஓர்கணம்நான் போதல் ஆமா?

**ஏணி :**

என்றேனும் நீதரையில் செல்ல நேர்ந்தால்
ஏன்கவலை? வண்டியிலே ஏறிக் கொள்வாய்!
சென்றதற்கு நன்றியாக நீரைத் தாண்ட
சிறுஉதவி, வண்டியைநீ ஏற்றிச் செல்வாய்!

ஒன்றுக்கொன் றுபகாரம்...உன்னை ஓட்டும்
    ஓடப்பன் வாழ்க்கையிலே உயர்வான் உன்ருல்—
அன்ருடம் உன்வயிற்றில் குந்தி வாழ்வோர்
    அலட்சியமாய் மதிப்பதில்லை—அஃதே போதும்!

**தோணி :**

ஓடுகின்ற வரைபெருமை; சிறிதாய் உள்ளே
    ஓட்டையொன்று விழுந்திட்டால் ஒழிந்தேன்! நீயோ
ஆடுகின்ற தொல்லையின்றி, அசைதல் இன்றி
    ஆங்காங்கு வைத்தஇடம் சார்ந்து நிற்பாய்!
தேடுகின்ற வேலையில்லை; கோபு ரம்போல்
    தெரிகின்ருய் உயரமாக! ஆணி சட்டம்
கூடுகின்ற இருமூங்கில் உனக்குப் போதும்—
    கொண்டாட மனிதரில்லாக் குறையேன் வீணே?

**ஏணி :**

கணைக்கால், மேல் ஆடுதசை, முழங்கால் மூட்டும்,
    கற்றூண்போல் தொடை, இடுப்பும், வயிறும், யாரும்
அணைக்காத மார்பகமும், அகன்ற தோளும்,
    அளவான வாயுதடும், மூக்கும், கண்ணும்,
இணைக்காதும், நெற்றிமேடும், முடியும்·கொண்டே
    எழுந்துநிற்கும் மானிடன்மேல் ஏறு தல்போல்
துணைக்காலின் நுனிவிரலால் மிதித்த ழுத்தித்
    துடிதுடிப்பாய் என்படியில் ஏறு கின்ருர்!

**தோணி :**

இவ்விதமாய் ஏறிடுவோர் உனைத்தி ரும்பி
    எக்கணமும் பார்ப்பதற்கே அஞ்சு கின்ருர்!
செவ்வையாகச் சேருமிடம் உயரே சென்று
    திடுமெனவே உதைத்துன்னைத் தள்ளி விட்டுத்
திவ்வியமாய்க்·காரியங்கள் முடித்த பின்னர்
    தெரியாமல் குதித்திறங்கி வெளியே போவார்!
எவ்விதமும் நன்றிகொல்லும் மனித ருக்கும்
    ஏணிதோணி இருவருமே தொண்டு செய்வோம்!

# கை காட்டி

தனிமரம்நான்; தளிர்ப்பதில்லை; துளிர்ப்ப தில்லை;
தரைசாய்ந்தி டாதபட்ட மரமா? அல்ல;
மனிதர்கள் எனைநாடி வருவ துண்டு;
மருந்தான கருநொச்சி மரமா? இல்லை;
கனிமரம்போல் ஏறெடுத்துப் பார்ப்ப துண்டு;
கட்சிகளின் கொடிமரமா? அதுவும் அல்ல;
தனிமையிலே நின்றிடுவேன் சாலை தன்னில்;
தந்திமர மா? விளக்கு மரமா? இல்லை.

காற்றினிலே நிமிர்ந்திடுவேன் பாறை அல்ல;
கணைபோலத் தோன்றிடுவேன் பாய்வ தில்லை;
நேற்றிருந்த படியேதான் இன்றும் உள்ளேன்;
நிலைகெட்டா அலைகின்றேன் உலகில்? இல்லை!
ஊற்றுகின்ற மழையெல்லாம் தலைமேல்; கோடை
உச்சிவெயில் அத்தனையும் உடலில்; எந்த
வேற்றுமையும் காட்டாத பட்டா ளத்து
வீரன்நான்; துப்பாக்கி கையில் இல்லை!

அழகுமரம் சந்தனமா? இல்லை, மெல்ல
அலங்கோலம் அடைந்திடுவேன் காலப் போக்கில்!
கழுமரமா? அதுகதையில் தானே உண்டு?
கழுகுதொடா மரம்நான்; மின் மரமா? இல்லை.
பழகுமரம், புதியவர்க்குப் பயன்ம ரம்நான்;
பழமரமா? ஆம், பழநாள் பழக்கம் உண்டு!
நிழல்மரமா? நெடும்பனைபோல் நானும் ஒல்லி!
நிம்மதியை நிறைத்திடுவேன்; இவைபோ தாவோ?

முச்சந்தி, நாற்சந்தி, மூலை எங்கும்
முறுக்கோடே இருக்கின்றேன்; ஆனால் பாழும்
பச்சோந்தி களைப்போல்ஊர் சிரிப்ப·தில்லை!
பட்டணமா? பாங்கான பட்டிக் காடா?
அச்சந்தான் உண்டாமோ? கையைக் காட்டி
அறிமுகத்தைச் செய்கின்றேன்; இதனால் என்ன
மிச்சந்தான் எனக்கென்றால் விளம்பு கின்றேன்:
விளம்பரத்தை விரும்பாத விளம்ப ரம்நான்.

கைகாட்டி நிற்கின்றேன்; யார்முன் னும்போய்க்
கைகட்டி நிற்பதில்லை; மானம் உள்ளோன்!
கைநீட்டிப் பழக்கந்தான்; கேட்ட துண்டா?
கருப்பென்பார் வெளுப்பென்பார் இசைந்த· துண்டா?
கையாட்டி விளையாடும் சிறுவர் வீணாய்க்
கால்கட்டி ஏறுகின்றார் என்மேல்; நீங்கள்
கையோட்டி நடக்கின்றீர் கவனிக் காமல்;
கண்காட்டி மயக்கினேனா நான்சொல் லுங்கள்?

தனிமனிதன் காட்டுகின்ற தத்து வங்கள்
தலைகீழாய் மாறிடலாம்; ஆனால் தன்னந்
தனிமரம்நான்; தைரியமாய் எனைநம் புங்கள்;
சரியான இடம்போவீர் தடுமா றாமல்!
தனிமனிதன் வாழ்வுக்கா ஒற்றைக் காலில்
தவமிருந்து வருகின்றேன்? சிந்தி யுங்கள்!
பனிமலையைப் பார்க்கத்தான் முடியும்; என்றன்
பணிமிகவும் பெரிததற்கு வையம் சாட்சி!

# கா

காஎன்றால் கானகமோ காடோ அல்ல;
காவிரியில் கரைவிரியும் பூங்கா ஆகும்!
காஎன்றால் காப்பாற்ற வேண்டு மென்று
கடவுளுக்கு விண்ணப்பம் அனுப்பும் வார்த்தை!
காஎன்றால் காக்கையினம் ஒன்றை யொன்று
கரைந்தழைக்கக் குரல்கொடுக்கும் கனிவுச் சொல்! அக்
காஎன்றால் தங்கைக்குத் தமக்கைக் காரி;
கார்குழல்சேர் காரிகையில் மூத்தாள் என்போம்.

காலணிகள் பலவகையாம் கொலுசு, காப்பு;
கடிக்கின்ற செருப்புக்கும் அஃதே பேராம்!
காலடியில் கிடப்போரை அடிமை என்பார்;
காவடிகள் காணிக்கை செலுத்து வோராம்.
காலமெலாம் முடிந்தபின்னே காலன் வந்து
கயிற்றாலே கட்டுவதைக் காண லாமா?
காலியென்பார் கால்நடையைக்; காளி மாரி
காவுகேட்கும் எனச்சொல்வார் காவி பூண்டோர்!

காதலெனில் ஆண்பெண்ணை ஈர்க்கும் காந்தம்—
காரமில்லா இனிப்பென்று நினைப்பான் காளை!
காதமெனில் பத்துக்கல் தொலைவு காட்டும்.
காமாந்த காரனுக்கோ காமா லைக்கண்;
காதகனும் காசுபண ஆசை கொண்டு
காகிதப்பூ மணக்காத காதை சொல்லிக்
காதடைக்கக் காணிவிட்டுக் காந்தன் போவான்;
கானலைநீர் எனநம்பி நங்கை சாவாள்!

காரத்தில் அதிகாரம் அதிகக் காரம்;
காசநோய்போல் காயத்தைத் தேய்க்கும் காட்சி!
காரத்தில் அகங்காரம் காறை போலாம்;
காஞ்சிவழி காட்டாத காழ்ப்புக் காடி!
காரத்தில் உபகாரம் தக்கா ளிக்காய்;
காளவாய்போல் அபகாரம் காங்கை; தீது!
காரத்தில் அலங்காரம் அழுக்காற் றாலே
கரையாதாம்; இளக்காரம் வாடைக் காற்றும்!

ஆகாரம் அருந்துவதோ உயிர்வா ழத்தான்;
அதற்கெனவே காயம்இஃ தென்பார் உண்பார்!
ஆகாயம் துப்புரவாய் அமைந்தி ருந்தால்
அழகொழுகும்! காற்றாடி பறக்கும் நன்றாய்!
'ஆகாகா!' எனவியப்போம் அங்கா டிக்குள்
அன்றாடம் காசுகேட்க வில்லை யானால்!
ஆகாதோ ஏகாந்தம்? உட்கார்! காந்தி
அனுமதியா ஓங்காரக் கூச்சல் வேண்டாம்!

பூம்புகாரைக் கடல்கொண்டு போன தாகப்
புளுகாதீர் போய்ப்பாரும்; திகைப்புக் காண்பீர்!
போம்; புகாரில் வாழ்வோரே; புழுங்கா தீர்நீர்!
புளகாங்கி தம்கொள்ளப் புதிய ஊரைத்
தாம்புகுத்தித் தமிழ்க்காவல் புரிகின் றார்கள்;
தக்காரின் முயற்சியிது; காழ்ப்பும் ஏனோ?
காம்புள்ள தாமரைபோல் மலர்மு கத்தால்
காசினியோர் 'கா' கவிதை வரவேற் பீரே!

# கை

கையெதற்குச்? சாப்பிடவா? எழுதிக் கற்க!
கண்டவுடன் கை கூப்பாக் கைஉலக் கை! மங்
கையெதற்குத்? தகைமையுடன் வாழ்க்கை பேணிக்
காக்கைபோல் சேர்க்கையாகுங் கொள்கைக் கே! ஈ
கையெதற்கு? வள்ளலெனும் உவகை மேவிக்
கைசிவக்க! ஏழையரின் கண்ணீர்க் கோரிக்
கையெதற்கு? மாளிகையில் இருக்கைக் குக்; கங்
கைவெள்ளம் போலின்பம் சதங்கை பாட!

பகைவரையும் பணியவைத்து வாகை சூடிப்
பண்போடு மன்னித்தல் அரும்வே டிக்கை!
புகைவரின்பின் நெருப்புவரும் எனும்பே ருண்மை
பொக்கைவாய்க் கிழவிக்கும் புரிந்த தாகும்!
தொகைவருமா எனப்பாரா வணிகன் தக்கை;
தோகையில்லா மயில்போலச் சோகை யாவான்!
"நகைவருமா?" என்க்கேட்கும் தங்கை பேச்சில்
நகையேது? நாழிகைக்குள் அழுகை மிச்சம்!

தூரிகையின் திகைப்புதரும் பலநி றத்தால்
தொடர்கின்றான் ஓவியனும் பலகை; பொய்கை.
காரிகைபோல் மயக்கத்தைத் தருவ தாலே
கடும்யாப்பு இலக்கணமும் அப்பேர் கொள்ளும்.
பேரிகையின் முழக்கங்கள் வீர னுக்குப்
பெரும்மருட்கை அளிப்பதும்ஏன்? நம்பிக் கைதான்
சூரியன்கை ஒளிக்கதிரே வெக்கை யேனும்
சுடுகையிலும் படுகையெல்லாம் வளமே கொஞ்சும்!

இயற்கையாகக் குகைகளிலே வாழ்ந்த நாளில்
ஏமாறு எச்சரிக்கை ஒருவா டிக்கை.
செயற்கையாகச் சலுகையுடன் சிவிகை ஊர்ந்தார்
சீர்கெட்ட சங்கையினுல் சக்கை யானுர்.
வியர்க்கையிலே தென்றலெனக் கைகொ டுத்து,
வேட்கையெழும் மிகையினையே ஒழித்துக் காப்போம்.
உயர்கையிலே ஓய்வுவகை அறியார்; நங்கை
ஒளிக்கையில் கைபிணைத்தே படுக்கை சேர்வார் !

கைப்பிடித்தல் கடைசிவரை காப்பாற் றத்தான்;
கையாலா காத்தனத்தால் இடையில் போனுல்—
கைப்பிடித்தாள் கைம்பெண்ணே! அவளுக் கின்று
கைதிநிலை போக்கிவிட்டோம்! ஆட்சிக் கட்டில்
கைப்பற்றல் மக்களுக்கு வாழ்வு நல்க;
கைவிட்டே ஓடிடுதல் கோழைச் செய்கை!
கைப்பான முருங்கைக்காய், சிகைக்காய் நன்கு
காப்பாற்றும் யாக்கைநலம்; கைக்கொள் வீரே!

எதுகையுடன் மோனையென்பார் இலக்க ணத்தில்;
எதுகை, கால் எனப்புரியா தலைவார் இங்கே!
மது, கையில்; மயங்குகையில்—குழறு கையில்—
மனிதன்வாய் சீழ்க்கையொலி கிளப்பு கையில்—
இது கையின் முத்திரையென் றறைவார்! கன்னம்
இருபுறமும் வீங்குகையில் முகைபோல் தோன்றும்!
பொது 'கை'யைப் புதுவகையில் சொல்லிப் பார்த்தேன்
புரிந்தவரை தமிழ்க'கை'க்குப் பெருமை; நன்றி!

# பா

பாவென்றால் அகவற்பா கலிப்பா வெண்பா
பாராட்டும் வஞ்சிப்பா ஆக நான்காம்.
பாவென்றால் மருட்பாவும் பாடல் என்பார்;
பாவினமாய்த் தாழிசையே துறைவி ருத்தம்.
பாவென்றால் நெசவாளர் ஊடு பாவாம்;
பாந்தமுடன் பாட்டாளி பாத்யம் கொள்வான்.
'பா'வென்றால் சென்னையிலே வண்டிக் காரர்—
பால்காரர்—நமையழைக்கும் பாச வார்த்தை!

பாக்கம்தான் கடற்கரையின் பாங்கர் ஊரே;
பாய்விரிக்கும் படகுகளைப் பார்த்தல் கூடும்!
பாக்கியமாம் பாவையவள் பார்யாள் ஆனால்;
பாட்டனுக்கும் பாட்டிக்கும் பாப்பா வேண்டும்!
பாக்குவைத்தால் அழைப்பாகும்; பாங்கன் பாங்கி
பாயசம்சேர் விருந்துக்குத் தயாராய் நிற்பார்!
பாக்கிவைத்தால் வாழ்க்கையிலே நாண யம்பாழ்;
பாவியென ஒருபாட்டம் திட்டித் தீர்ப்பார்!

பாகலெனில் உண்மையைப்போல் கசப்பாம்; பாறை
பாசிகொண்டால் நீரடியில் வழுக்கும் பான்மை!
பாகனெனில் யானையோட்டி; பார்வ திக்குப்
பாதிதந்த பரமனுக்கும் பொருந்தும் பேர்தான்!
பாகமெனில் பங்காளி கேட்கும் சொத்து!
பாடகர்போல் இருகரமும் நீண்டால், பாகம்!
பாகையெனில் வழுக்கையினை மறைக்கும் பாங்கு!
பாணியெனல் பாசாங்கு; பாகுச் சொல்லே!

"அபாயமிதைத் தீண்டாதே!" எனமின் கம்பி
அற்பாயுள் தடுப்பதற்குப் பாடங் கூறும்!
அபாரமாகப் பாடசாலை போகும் பாலர்
ஆபாசப் படம்பார்க்கும் பாட்டை செல்வார்!
உபாயமென்ன? பால்கல்வி கயிறு, பாம்பா?
உபாதையுள்ள உடற்பாண்டம் உதவாப் பானை!
அபாண்டமாகப் பேசிடுவார் அகம்பா வத்தால்
அம்பாரம் பாதகம்சேர் சுபாவம் கொண்டார்!

'அப்பா'என் றுண்டவனின் பாதம் பாடும்
அம்பாளின் பாலகர்போல் பாசு ரங்கள்—
அப்பாலே தப்பான பான கங்கள்—
அருள்பாலித் தாட்கொள்ள ஆர்ப்பாட் டங்கள்—
ஒப்பாரி—குறைகளெலாம் பார மாக்கி
ஒப்பாரே இல்லையெனல்—பாது கைகள்
அப்பாவித் தனத்தாலே தலைமேல் வைத்தல்—
அறிவங்கே பாடையேறும் பாம ரர்க்கே!

காப்பாற்றுங் கடப்பாடு மெய்ப்பா டாக்கக்
கைப்பாடு படுகின்றேன்; பாலை யானல்
கூப்பாடு போட்டிடுவேன்! பாவா டைபோல்—
கூம்பாத பாளைபோல்—விரியும் வாழ்வில்
சாப்பாடு, சம்பாத்யம் குன்று வண்ணம்
சம்பாநெல் விளைச்சலுக்குப் பாச னம்போல்—
பாப்பாடும் கோட்பாடு வாய்ப்பா டாக்கிப்
பாய்ச்சுகிறேன்; பாதையில்ஏன் பாகு பாடு?

# பை

பையையாய்ப் பணங்கொட்டி எழுதென் றாலும்
பகுத்தறிவுக் கொவ்வாத பாதை செல்லேன்!
தைதையென் றாடமாட்டேன் தலைக்க னத்தால்!
தகுதியுண்டென் றெனையேற்றுந் தலைவர் காட்டும்
சைகையால் செயல்முடிப்பேன்! துரோகம் செய்யேன்!
சப்பையாகிச் சோடைசொத்தை ஆக மாட்டேன்!
கைமையால் பொய்யெழுதேன்! புறமுங் கூறேன்!
கைப்பையைக் காலிப்பை யாக்கி நிற்பேன்!

கருப்பைக்குள் உறுப்பையெலாம் உருவ மாக்கிக்
கடமையினால் மனிதனுக்கிப் போட்டாள் தாய்தான்!
விருப்பமுடன் கலப்பையினால் உழுது நட்டே
விளைவித்தால் சாக்குப்பை நிரம்பும்; நெல்லை
இருப்புக்குத் தக்கபடித் தொம்பைக் குள்ளே
இட்டுவைத்தால் பஞ்சத்தில் இடும்பை தீர்க்கும்.
திருப்தியுடன் அரம்பையர்கள் மகளிர் ஆண்போல்
திரிந்திடுவர் கிருபையுடன் கடைக்கண் நோக்கி!

குரும்பைதான் வளர்ச்சியிலே இளநீர், தேங்காய்;
கொப்பரையை நீக்கிவைத்தால் கொட்டாங் கச்சி
பெரும்பிடியில் செருகியபின் அகப்பை யாகிப்
பிரியமுடன் சட்டியிலே இருப்பை அள்ளித்
தரும்பெரிதாய்; தாராளம் எனப்பு கழ்வோம்!
தராவிடிலோ, சமைத்தவர்மேல் தப்பை வைப்போம்!
வெறும்பையாய் இருந்திடினும் அழகுப் பையை
விரல்களிலே தொங்கவிட்டுப் பெண்கள் செல்வர்!

கிளுகிளுப்பை உள்ளத்தில் மூட்டும் இல்லக்
கிழத்திக்கு வளைகாப்பை முடித்த பின்னர்...
கிலுகிலுப்பை வெள்ளியினால் வாங்கு தற்குக்
கிடைக்கின்ற பணத்தையெல்லாம் சேர்த்து வைத்தான்.
சிலுசிலுப்பைத் தருங்குழந்தை பிறக்கு முன்னர்
திடீரென்று உடல்நலிந்தாள்! மருந்து வாங்கும்
அலுவலுக்குச் செலவழிக்க மறுத்தான் முட்டாள்!
அவனறிவு மொட்டையென மனைவி செத்தாள்!

கோப்பையெனில் தவறாகக் கருது கின்றார்;
குற்றந்தான் மதுவிலக்குக் கொள்கை மீறல்!
கோப்பையிலே தேநீரும் குடிக்க லாமே—
குறையெல்லாம் பருகுவதைப் பொறுத்துத் தானே?
கேப்பையிலே நெய்வடியும் என்று சொன்னால்...
கேட்பவர்க்குப் புத்தியெங்கே போயிற் றென்பர்!
ஏய்ப்பையெலாம் நம்பாதீர்! அறிஞர் கூறும்
எச்சரிப்பைப் பொருட்படுத்தி வாழ்வீர் நன்றாய்!

'தொப்'பென்று கண்டவற்றை உள்ளே போடத்
தொங்கிப்பை பெருத்ததனால் தொப்பை என்றார்.
குப்பைகளைப் போடுகின்ற தொட்டி அல்ல!
குந்தியே தின்றழிக்கத் தொந்தி வேண்டாம்.
துப்புரவாய்த் தும்பைப்பூ நிறத்தி லுள்ள
தூயவெள்ளைக் காகிதத்தில் கறுப்பைப் பூசி
எப்பொழுதும் தருகின்றேன்; முறிப்பீர் நட்பை!
என்பையிற் பேனாவின் இழப்பை வேண்டேன்!

# மா

மாஎன்றால் வடு, கனி, காய் மனத்தில் தோன்றும்;
    மாணாக்கர் இலக்கணத்தில் புளிமா, தேமா!
மாஎன்றால் பொதுவாக விலங்கினம்தாம்;
    ‘மா’ என்று மாடு, கன்றை அழைக்கும் அன்பாய்!
மாஎன்றால் இருபதிலோர் பங்கு; வீசம்
    மாகாணி; அரைமாநாற் பதிலே ஒன்று.
மாஎன்றால் பெரிதென்பர்; ஆப்பம், உப்பு
    மா, தோசை, இட்டலியாய் மாவே மாறும்!

மாதத்தில் மார்கழியில் மாரி நீங்கி
    மாசிவரை பனிக்காலம் குளிர்தான்; அம்மா!
மாதரினம் கொண்டாடும் மகளிர் ஆண்டில்
    மாளாத கும்மாளம் உலகம் எங்கும்!
மாதாவின் மாணிக்க வயிற்று தித்தோம்;
    மானிடரே; மாண்புடனே ஆணும் சேர்வோம்,
மாதத்து வம்பேசும் இறுமாப் புங்கள்
    மாங்கல்ய தாரியிடம் மாயும்; ஓயும்!

மானத்தில் தன்மானம் பேணும் மார்க்கம்
    தமிழ்மா நிலத்துக்கே மாட்சி யாகும்!
மானத்தில் அவமானம் மாற்றார் தந்தால்
    மாடமாளி கைகளெலாம் மாயம் ஆகும்!
மானத்தில் படிமானம் அபிமா னம்; தீர்
    மானத்தால் சேருமானம் வெகுமா னந்தான்!
மானத்தில் உவமான உவமே யங்கள்
    மாலைநேர மாருதமாய் மகிழ்வு நல்கும்.

மாமாவோ மாவுத்தன், யானைப் பாகன்;
மருமானோ மாலுமியாம், கடல்மேல் செல்வோன்!
''சாமான்யன் ஆனாலும் தரைமேல் வாழ்ந்தால்
சமாதானங் கொண்டுநானும் தருவேன் பெண்ணை!
கோமானும் எனக்குப்பின் அம்பா ரிக்குள்
குடைநிழலில் சமானமாக அமர்ந்தி ருப்பார்!
சீமானோ பூமானோ இலையென் றாலும்
செம்மாப்புக் குறைவில்லை எனக்''கென் றானே!

அம்மானை ஆடுகின்றார் மாளி கைவாழ்
ஆரணங்கு சோலையிலே இன்பம் மாந்தி.
சும்மாடு தலைமீது; சுமையைத் தூக்கிச்
சுமாராக வாழ்கின்றார் உழைக்கும் பெண்டிர்.
சிம்மாச னத்தினிலே வீற்றி ருந்தோர்
செரிமானம் ஆய்விட்டார்; மறைந்தே போனார்!
பெம்மானே பெருமானே என்று பாடிப்
பிரமாத மாய்ப்புகழக் கவிகள் இல்லை.

அரிமாவின் நோக்கென்பார்; கடக்கும் பாதை
அனுமானம் மிகத்தேவை! ஏமாற் றத்தைப்
பரிமாறு வோர் மாசு பரிமா ணத்தால்
பலமாகும்; இமாலயமாய் உயர்ந்து நிற்கும்!
பொரிமாவில் ஆசையுற்ற பொக்கை வாயன்
பொய்மான்மேல் ஆசையுற்ற சீதை போல!
சரி; 'மா'வில் இனியொன்றும் கிடைக்க வில்லை.
சன்மானம் விமானத்தில் வருமா? பார்ப்போம்!

# மை

பொறுமையிலே மிகச்சிறிய மாற்றஞ் செய்தால்
பொருமையாக உருவெடுத்தல் எழுத்தின் மேன்மை!
வறுமையிலும் செம்மையென்றுர்; தேவை தானே?
வளமையிலே வள்ளன்மை வியப்பா காது.
சிறுமைக்கும் பெருமைக்கும் உரிமை, தத்தம்
செய்கைதான் என்றமைதல் உணர்தல் நன்றும்.
மறுமைக்கு வேண்டியவை இம்மை ஆற்ற
மகிமையுள்ள மதவாதி தொடர்ந்து ரைப்பார்!

உண்மைக்குப் பகைமையாகும் பொய்ம்மை; என்றும்
ஒற்றுமைக்கும் வேற்றுமைக்கும் ஒருமை சேய்மை!
பெண்மைக்கும் ஆண்மைக்கும் முறைமை-தாழ்மை
பேசாமை; ஏசாமை, இணையுந் தன்மை!
கண்மையைக் கருமைக்கும் உவமை காண்போம்—
கயமையுள்ளார் நிலைமைக்கும் தகைமை சொல்வோம்!
வெண்மையுள்ளம் வெகுளாமை தங்கும் கூடம்!
வேளாண்மை மேலாண்மைத் தொழிலாம், வாய்மை!

நன்மைக்குத் தின்மையெனில் அச்சந் தோன்றும்!
நாணமிலார்க்குடைமையென்ன? உடையில் லாமை!
புன்மைதான் அறியாமை விளையும் பூமி;
புதல்வரது படியாமை புகழைக் கொல்லும்!
மென்மையெனில் மங்கைக்கும் மலர்க்கும் தாய்மை;
மெய்ம்மையறி யாமூர்க்கர் உணரார் நுண்மை.
வன்மையில்லா வீரமுமே வெறுமை; ஏழ்மை,
வளையாமை தலைமைக்குச் சிறப்புக் கேண்மை!

ஆமைபோல் புலனடக்கும் எளிமை வேண்டும்.
அகலாமை அணுகாமை தீயி டத்தில்!
ஊமையிலும் உளறுவாயன் பதுமை, பொம்மை;
உதவாமை தோழமையின் தன்மை அன்று!
தீமையிலாத் திருக்குறளின் தொன்மை போற்றல்
செழுமையான தமிழ்வாழ இளமை எண்ணம்!
சீமையெலாம் முதுமையான மொழிச்சான் றோர்க்கே
சிலையெடுத்தல் தூய்மைமிகும் புதுமைக் கொள்கை!

நில்லாமை நிலையாமை உலகின் பண்மை.
நேர்மைதான் தமிழனது பழைமைப் பான்மை.
கல்லாமை அகற்றுதல் நம் கடமை; பெண்டிர்
கைம்மைதனைக் களையாமை மடமை யாகும்!
இல்லாமை இல்லாமல் பொதுமை யாக்க
இயலாமை மனிதனுக்கே கீழ்மை சேர்க்கும்!
கொல்லாமை கள்ளாமை சூதா டாமை
குடியாமை பிறன்மனைநா டாமை பண்பாம்!

தையருமை பொங்கலாலும், பெண்க ளாலும்!
தாயம்மைச் சீர்மைசுவைச் சமைய லாலே!
கையுரிமை முடம்நீக்கும் நீர்மை வெல்லும்;
கனியினிமை காய்மரத்தின் திண்மை காட்டும்!
வையவரும் வாழ்த்தவரா நாவின் கூர்மை
வையகத்தில் வெம்மைநிறை கொடுமை யாகும்!
மையருமை உணராமை பேறு குற்றம்!
'மை' அரிதாம் அச்சகத்தில்; விட்டேன் உம்மை!

# இசை

காலமெலாம் பின்னணியில் பாடி வந்த
கருநாகன் ஒருநாளில் உணர்வு பெற்றான்.
ஓலமிடும் உள்ளத்துப் புயலின் சீற்றம்
ஓய்வில்லாக் கூச்சலாக உருவெடுக்கச்,
சீலமுடன் பல்லாண்டாய் வருவாய் தந்த
திரைமறைவுப் பிழைப்புக்கு விடையளித்து,
ஞாலமிசை இசைக்கலையில் ஈடில்லாத
ஞானத்தை வெளிக்காட்ட ஊக்கம் கொண்டான்!

முழுதாகச் சுருதி, லயம், சரளி, ராகம்
முறைமையுடன் குருகுலத்தில் வசித்துக் கேட்டான்.
அழுதாலும் விட்டதில்லை; அறைந்தறைந்தே
அவன்தொடைகள் தாளமிட்டுக் காய்த்துப் போகும்!
கெழுதகையாய்க் குரல்வளமும் செழித்திருக்கக்
கிருதி, வர்ணம், கீர்த்தனைகள், பாடல் கற்றுத்
தொழுது, வாழ்த்துப் பெற்று, வெளி வந்த பின்பும்
துணிவில்லாச் சபைக்கோழை மறைந்தே வாழ்ந்தான்!

குரல், துத்தம், கைக்கிளையின் தொடர்ச்சியாகக்
கூடும்உழை, இளி, விளரி, தாரம் என்ற
நிரல்சுரங்கள் சரிகமப தநியாம் ஏழும்—
நிரவல்,சங் கதி,கார்வை, இறக்கம், ஏற்றம்—
முரல்கின்ற தம்புராவின் சுதியில் ஒன்றி,
முரணுமல் இழைந்தோடும் நாத வெள்ளம்!
விரல்நுனியில் திரிபுடை,ரூபகமும், ஆதி—
வின்னியாச லயமுடனே தாளம் மேவும்!

பிலகரி,பூ பாளம்,சா, வேரி, தோடி,
பியாக்,கனடா, இந்தோளம், வசந்தா, சாமா,
கலகௌளை, காம்போதி, வராளி, காப்பி,
கல்யாணி, மோகனம்,பை ரவி,ச காஞ,
அலகுஅம்சத் தொனி, நீலாம் பரி,மு காரி,
ஆபோகி, தன்யாசி, அடாணு, நாட்டை—
உலகமெச்சும் கருநாட இராகம் அன்றி,
ஒண்புகழ்சேர் பழந்தமிழ்ப்பண் தெரிந்தி ருந்தான்!

குணமறிந்து கொண்டதனுல்—கல்வி இன்றிக்
குருட்ட றிவால் முன்னணியில் நின்ற கூத்தன்
பணமளித்துத் திறமையினை முடக்கிப் போட்டுப்
பாடலெலாம் தனக்காகப் பின்னி ருந்து
மணமளிக்கப் பாடிவரப் பணித்து வைத்தான்!
மனங்குமுற அடங்கியவன் தினங்கு மைந்தான்!
கணம்மறந்தும் பாடகனைப் புகழ்ந்த தில்லை;
கண்மறைவில் வஞ்சகமாய் ஒளித்து விட்டான்!

கூத்தனது வாயசைப்பு மெய்யாய் எண்ணிக்
கொண்டமக்கள் கொண்டாடிப் பெருமை ஈந்தார்;
சாத்துபடிச் சிலையழகை வியப்போர், மூலத்
தானத்துச் சிலைப்புகழை மறத்தல் போலே!
காத்திருந்தோன் காசுக்குக் கலையை விற்றுக்
கண்டதென்ன? உளநிறை வா? இருட்ட டிப்பே!
பூத்தெழுந்த கதிரவன்போல் இசைபெ ருக்கப்
புவியோர்முன் தோன்றி, இசை பொழிய லானுன்!

# கடவுள்

கையொன்று செய்ய; விழி யொன்று நாடக்;
கருத்தொன்றை எண்ணிட; வாய் வேறு பேச ;
மெய்யென்று மற்றவர்கள் மிரட்சி கொள்ள
மேலெழுந்த வாரியாகக் கடவு ளுக்குச்
செய்கின்ற பூசைதனை எவ்வா றேற்பார்?
செகப்புரட்டு வேண்டாமென் றுரைத்த சொற்கள்
பொய்யென்று நினையாதீர் என்ப தற்குப்
பொதுமன்றில் கதையொன்று சொன்னார் அண்ணா:

சத்தியுள்ள கடவுளெல்லாம் நிறைந்த காஞ்சித்
தலத்தினிலே கடைவீதி தன்னி லே, ஓர்
சித்திரமாய்ப் பிள்ளையாரின் சிறிய கோயில்
சிறப்பான மகிமையோடு விளங்கல் உண்டு.
கைத்தறிக்குப் பெயர்போன நகர மன்றோ?
கனவான்கள் பட்டாடை உடுப்பர்! மற்றோர்
சுத்தமான நூலாடை வாங்கிக் கொள்ளச்
சுற்றிவந்து தெருத்தெருவாய்க் கூவி விற்போர்

மூட்டைகளைத் தலைமீது சுமந்த வண்ணம்
முன்னே இவ் விநாயகரை வணங்கி விட்டுப்
பாட்டையோடு செல்வார்கள் காலை நேரம்!
பார்ப்பதற்கு வரிசையுடன் அழகாய்த் தோன்றும்!
கூட்டமாகப் போகிறவர் பேச்சின் ஓசை
கூச்சலாக மாறுவதும் உண்டு! பின்னர்,
போட்டமுதல் பெருகுமாறு இலாபம் பெற்றால்
போய்வந்தும், காற்செருப்பைக் கழற் றி நின்று

கணபதியைக் கும்பிட்டு வீடு செல்வர்!
காலத்தின் சுழற்சியிலே, நாள டைவில்,
பணமதிகம் பார்ப்பதிலே நாட்ட முள்ளோர்,
பக்கத்தில் வருபவர்பால் பேசிக் கொண்டே,
கனமுடைய சுமைதலையில் வைத்த வாறு,
கடைவீதி ஓரத்தில் வெளியூர்க் காரர்
மனமகிழ்வில் ஏமாறு வாரா என்று
மங்காத பார்வையினைச் சுழல விட்டுக்,

கரமிரண்டும் புகையிலையைக் கிள்ளிப் போடக்,
காற்செருப்பு தாமாகக் கழன்று கொள்ள,
வரமருளும் யானைமுகன் கோவில் முன்னே—
மனத்தினிலே வணங்குகின்ற எண்ண மின்றி—
உரமுடனே சிறுபொழுது நின்று, மீண்டும்
உரத்தக்குரல் சத்தமிடச் செருப்பை மாட்டிப்
பரபரப்பாய்ப் புறப்படுவார்! இவர்கள் நெஞ்சில்
பக்தியுண்டா? கடவுள்தான் நம்பு வாரா?

# கம்

அகம்பாவம் மிக அசிங்கம், அக்கம் பக்கம்
அறிமுகம்செய் யும்அடக்கம் அநேகம் நன்மை!
நகம்பெரிதா நாகரிகம்? அதிகம் நீண்டால்
நரகம்தான் எனில்தயக்கம் நடுக்கம் எல்லாம்!
சுகம்பெறுதல் சொர்க்கம்போம் தொடக்கம் என்றால்
சுணக்கம், தோல் சுருக்கம், கூன் வணக்கம் ஏனோ?
சகம்போற்றும் முச்சங்கம் வளர்ச துக்கம்
சண்பகம்போல் தமிழ்ச்சமூகம் மணம்கம் பீரம்!

ஆகம்தான் முழுத்தேகம்; அங்கம் கம்பம்;
ஆதிக்கம் தரும்ஆக்கம் வெறும் குதர்க்கம்!
பாகம்தான் பூரணத்தின் பங்கம், இன்பப்
பானகம்தான் பாதகம்ஆம் இனிப்பு நீர்க்கு!
நாகம்போன் றார்சிநேகம் துரோகம் வர்க்கம்!
நாத்திகம்சேர் பிரசங்கம் பிரத்தி யேகம்!
காகம்போல் ஓரக்கண் கலகம் தூண்டும்
காதகம்ஏன்? கானகம்தான் கலக்கம் நீக்கம்.

இகம்பரம் என் றிணக்கம்சேர் தரங்கம் பாடி—
இச்சகம், பொய் இயக்கம், பின் இரக்கம் தேடும்!
திகம்பரமாய்த் தெய்வீகம் சமணர் தீர்க்கம்;
தியக்கம் ஏன்? சேர்வதெனில் மேலாம் துங்கம்!
மகம், பூரம், உத்திரமாம் மயக்கம் போக்கி
மத்தகம்போல் தலைதூக்கின் களங்கம் ஓடும்!
நுகம்பூண்ட இணைமாட்டின் நோக்கம் ஒன்றே;
நூக்கம்தான், தேக்குவேண்டாம் என்ப தேனோ?

ஈகம் சந் தனமரமே ஏக போகம்,
இந்தியாவின் ஏறுமுகம், மணக்கும் தங்கம்.
மோகம் முப் பதுநாளாம் மூடர் ஏக்கம்
மோதகம் வாய் மூடிகம்மேல் ஈசன் போக்கோ?
போகம், சை யோகம்,வை போகம், ஏகம்;
பூலோகம் மேலோகம் இதன்பூர் வாங்கம்!
வேகம் வேண் டாவிரகம், விவாகம் வெட்கம்;
விளக்கம்சொன் ஞலிதுதான் அன்பின் வீக்கம்!

உகம்நான்காய் உலகம்நீள் உறக்கம் கொண்டால்
உற்சாகம் ஏதிங்கே? உருக்கம் நிற்கும்;
அகம்புறமென் றிருதிணையால் அஞ்சு கம்போல்
அணுக்கம்சேர் நுணுக்கம்பின் வீணுய்ப் போகும்!
முகம்நகவே நட்பதனுல் முழக்கம் இன்றி
முடக்கம்செய் ஞாபகம்பொய் முயக்கம் தீர்க்கும்!
அகம் ஒன்றே, புத்தகம்தான்; வேட்ட கம் போய்
அகங்காரம் மேற்கொண்டால் புக்க கம், போம்!

ஊகம் சிந் தனைவிளைவாம்; ஒழுக்கம், ஊக்கம்,
உபயோகம், நல்யோகம், நெருக்கம், ஓக்கம்.
யாகம்நற் சாதகம், தீக் கிரகம் நீங்க
எருக்கம்பூ யாசகம்ஏன்? சீர கம்நீர்
தாகம் தீர் கற்பகம் ஆம்! கடகம் கட்கம்
தர்க்கம் பாழ்! கலிக்கம்தான் இமையாத் தூக்கம்!
சோகம்கொள் அவலராகம் தொண்டைக் கம்மல்;
சூசகம் சேர் வாசகம் என் வழக்கம், சிங்கம்!

# சம்

அச்சம், வீண் ஆயாசம்; ஆசா பாசம்
அவகாசம் அப்பியாசம் வேண்டா அம்சம்.
உச்சம்போம் உபவாசம் உயிரை வாங்கும்
உத்தேசம்; உபதேசம் உதவா உச்சம்!
எச்சம்பின் ஏகதேசம் புகழே; என்றும்
இதிகாசம் இலவசம்தான்; இலட்சம் கோடி
துச்சம், போ, எனவெறுக்கின் சுவாசம் சொச்சம்!
சுபீட்சம்பின் அதிரசம்தான்; துன்பம் தும்சம்!

பஞ்சம்சேர் பிரதேசம் பரதே சம்போல்
பரிகாசம், பரவசம் வீண் பார பட்சம்
வஞ்சம்கொள் அசம்பாவி தங்கள் தீர்ந்தால்!
வம்சம்பார் பிரகாசம் புனர்பூ சம்போல்!
மஞ்சம், பொய், மாமிசம், கள், மச்சம் சூதால்
மந்தகாசம் எத்தனைநாள் நிற்கும்? தொங்கும்
குஞ்சம்போல் சிலகாலம் அழகு செய்யும்;
கொஞ்சம்தான் ஆயுள், பின் குறையாக் கூச்சம்!

நேசம்நீள் நிலைக்காவிட் டாலோ நீசம்;
நெஞ்சம்சார்ந் தன்பிருந்தால் நிசம்செ ழிக்கும்!
கேசம் முன் இருக்குமிடம் உதிர்ந்து வீழ்ந்தால்
கிலேசம்ஏன்? குப்பையாகும்; தலையா போகும்?
பாசம்தான் அனிச்சம்; நல் அங்குசம்; வெம்
பாதரசம்; இனிப்பூட்டும் பாய சம்ஆம்!
காசம்நோய் எலும்புருக்கின் கவசம் ஏது?
கலசம்போல் கணிசம்கொள் உயர்ந்த பூசம்!

விசம், கால் குறைமதியால் விரசம், வீச்சம்;
மிச்சம், நல்வெளிச்சம்சேர் விகாசம் ஆகும்!
வாசம்மென் மணம் தங்கும்; இருக்கை; நோக்கி
வசம் ஈர்க்க வல்வியாசம் வரைதல் கூடும்!
தேசம்என் ருல்சுதேசம்; விளக்கம் வேண்டாம்!
திவசம்முன் செத்தாரை நினைக்கும் நாளாம்!
நாசம்பூ கம்பத்தால், நீரால், தீயால்,
நாராசம் போன்ற சுடு சொல்லால் நேரும்!

சம்மட்டி அடிப்பவர்குச் சங்கோ சம்ஏன்?
சரசம், நற் சமரசம்தான் எதற்குத் தேவை?
சம்மாரம் செய்வதற்கும் சாவ காசம்,
சம்மதம், பின் சம்வாதம், சகசம் ஆமோ?
சம்மேள னம்என்ருல் சம்பூர் ணம்தான்;
சம்பிரமம் அனைத்துமங்கே பிரவே சம்தான்!
சம்மானம், சம்பாவ னைகேட் பார்க்குச்
சாகசம் நற் சம்பவம்சேர் கதைக்கா பஞ்சம்?

சம்பந்திப் பைசாசம் பரிசம் கேட்டால்
சம்போகம் அதிகபட்சம் தாம சம் ஏன்?
சம்புடமே திருநீருல் நிறைத்த ஆண்டிச்
சகவாசம் சம்சாரிக்கு இரசம் அன்று!
சம்பங்கி வாசனைக்குச் சந்தே சம்போல்;
சம்பகமும் அவ்வாறே! மனித ருள்ளும்
சம்பளமே பெரியதொரு சம்பத் தென்றும்;
தஞ்சம்மோ சம்;முரசம் பிரத்தி யட்சம்!

# தம்

அதம்புரிவார் அபவாதம் நீதம் அந்தம்
'அற்புதம்பார்!' எனல்அபத்தம், அழுத்தம் ஆகும்!
இதம்புகல்வார் இங்கிதம்தான் இரதம் ஏற்றும்
இரசவாதம்; ஏகாந்தம் இரத்தம் போக்கும்!
மதம் மாந்தம்; வதம் வாதம் வருத்தம் தந்தால்...
மாருதம் சேர் நல்வசந்தம் மாதம் மந்தம்!
விதம் பலவாய் விரோதம், பின் குரோதம் கொண்டால்
விரதம் வீண் வியர்த்தம், பாழ், அநீதம், ஏதம்!

அத்தம்காண் அத்வைதம் ஆசீர் வாதம்;
அஞ்ஞானம் ஆனந்தம், அகாதம் அல்ல!
சுத்தம்சோ பிதம், சுகிர்தம், சுகந்தம் சொந்தம்
துரோகிருதம் சுவாகதம்போய்த் துரிதம் தொந்தம்.
நித்தம்வேலை நிறுத்தம்; அலுத்த பெண்ணாள்
நிருத்தம்கற் கும்நிமித்தம் நிபந்தம் பெற்றாள்;
முத்தம்முத் திரைபயின்று மூர்த்தம் சேர்த்தாள்;
முகூர்த்தம்தான் ஆயத்தம், அமிர்தம் உண்டாள்!

அருத்தம்கெட் டால்அனர்த்தம் அனந்தம் ஆதம்;
அசம்பவிதம் அபராதம், அசுத்தம் மேவும்.
விருத்தம்வே லாயுதம், வே தம்வி னோதம்,
விபரீதம் வேதாந்தம் விவாதம் செய்தால்!
திருத்தம்சங் காத்தம்சீர் திருத்தம்; ஆனால்
தீர்த்தம்நீர் திகாந்தம்நாற் புறமும் சூழும்!
பொருத்தம்பார்த் தால்பூதம்; வைகுந் தம்சொல்
புரோகிதம்தான் பாரதம்சேர் புனிதம் போதம்!

காதம்பத் துக்கல்லாம் கணிதம் சொல்லும்!
காந்தம்நற் கடிதம், கா கிதம்க தம்பம்!
பாதம்தன் பரிசுத்தம்; பரதம் பாந்தம்;
பஞ்சபூதம் பலவந்தம், பக்க வாதம்!
சாதம்நெற் சோறுண்ணுச் சபதம் சாந்தம்!
சம்மதம்தான் பலிதம்கொள் பஞ்சா மிர்தம்!
மீதம்வைக் கும்பதார்த்தம் அமுதம் பந்தம் !
மிதம்தின்ருல் பதிவிரதம், பரமா னந்தம்.

சத்தம்சேர் தம்பட்டம் ஒலிச்சம் பந்தம்;
தனித்தவிலின் சங்கீதம் சரிதம் சந்தம்.
தத்தம்தம் பதி சகிதம் தார தம்யம்,
சம்வாதம் தாமதம் வீண்—தம்பி ரானே!
பித்தம்போக் கும்பிடித்தம் பௌத்தம்; போரில்
பிடிவாதம் அனுசிதம்தான், உணர்க தம்பி!
மொத்தம்யுத் தம்சகாப்தம் தீ உற் பாதம்
மோகிதம்சேர் மோதம்ஊ மத்தம் பூவே!

நாதம்போல் உன்னதம்வே றுசிதம் உண்டோ ?
நத்தம்சேர் ஒப்பந்தம் நற்சங் கேதம்.
கீதம்பா டும் குமுதம் குதம்பைச் சித்தர்
கிரந்தம்போல் கிருதம்பின் யுகத்தில் ஏது?
பேதம்செய் பிரசாதம் பிராயச். சித்தம்;
பெருமிதம்கொள் பிரபந்தம் பிரமா தம்தான்!
சீதம்சேர் சீமந்தம் தாய்மைச் சித்தம்,
சேதம்சீர் அடிதொகுப்பு கருணு னந்தம்!

# பம்

அப்பம்பார் வெள்ளையப்பம் செட்டி நாட்டில்;
ஆப்பம்பால், இடியாப்பம் பாயா இங்கே!
ஒப்பம்கை யெழுத்து!பரி தாபம் முன்னுள்
ஓட்டப்பம் பட்டினத்தார் பிரத்தா பம்ஆம்.
கப்பம்கட் டாதகட்ட பொம்மன் புட்பம்
கதம்பம்போல் பிரதாபம் கால மெல்லாம்!
குப்பம்போய்க் கோபுரத்தில் குடும்பம் ஏற்றம்
குழப்பம்தீ, பூகம்பம், ஏதும் இல்லை!

அற்பம்போல் ஆரம்பம் பெரிதாய் ஓங்க...
ஆட்சேபம் அற்பருக்குக் காலட் சேபம்!
சொற்பம்தான் என்றிளப்பம் கொள்வார் வாழ்வில்
துன்பம்தான் இலாபம்; பின் நமக்கே இன்பம்!
சிற்பம்போல் நுட்பம்சேர் கலைஎம் ஊக்கம்;
சிற்றின்பம் நோக்கமெனில் உயிர்கொல் சர்ப்பம்!
கற்பம்கொள் ளாவிகற்பம் வெறும்சங் கற்பம்!
கர்த்தபம்முன் கலாபம்சேர் மயில்ஏன் ஆடும்?

அரூபம்தான் ஆண்டவனின் தன்மை என்றால்
அசுபம்போல் கருதுவதேன்? இடபம் ஏறும்
உரூபம்பல் லாயிரமாய்ப் படைக்கா விட்டால்
உலோபம்என் றுநினைப்பார்? வீண்உ ருப்பம்;
சொரூபம்அஞ் ஞானிகட்கே மடப்பம் போக்கும்
துடைப்பம்;நல் தூய்மைதரும் நிருபம் ஆகும்!
விரூபம்கற் காலவிம்பம் எதற்கோ இன்னும்?
விளம்பம்செய் யாது(அ)கற்றல் விழுப்பம் அன்றோ!

தெப்பம், தேர், திருவிழாக்கள் மகிழ்ச்சிக் கொப்பம்.
திருப்பம்தான் மத்திபம்சேர் ஏழை வாழ்க்கை!
செப்பம்செய் திட்டங்கள், அம்சம் போற்றும்
திட்பம்வேண் டும்;தீயோர் ஏப்பம் வேண்டாம்!
சிப்பம்கட் டித்தமக்கே பருப்பம் சேர்ப்போர்
சிலம்பம்,மற் போர்புரியும் வீரர் ஆகார்!
வெப்பம்நன்(ற) தற்காகச் சூரி யன்மேல்
விருப்பம்கொண் டாதொடுவார்? விம்பம் வேடம்!

தபம்தானம், மனத்தாபம், தம்பம், தாபம்,
தட்பம்நீக் கும்வெறுப்பு—தமக்கே நன்றும்!
சபம்செய்யச் சந்தர்ப்பம் தெரியா தோர்க்குச்
சல்லாபம் பிரலாபம், சலாபம் போலாம்!
சுபம்விரைந்து புரிந்திடுக; வள்பம் மோப்பம்
சுலபம்தான் கடினமன்று! சளிபி டித்தால்
கபம்சேரும்; காசநோய்க்குக் களபம் ஆகும்!
காளபம்போர் உயிரோடு, கம்பம் ஆட்டம்!

கோபம்வா லிபம் தலைமேல் சடகோ பம்போல்
கும்பம்ஏ கம்பம் மண் டபம் நி கற்பம்!
சாபம்தந் தால்சமீபம் விமோச னங்கள்
சாமீபம் சேர்க்கின்ற சரபம் ஆகும்!
தீபம்நல் லொளி தருமோர் தொட்பம் தூபம்;
தெட்பம்சார் பேருக்கம் பம்மல் நீக்கம்!
பாபம்பம் பரமாகச் சுழன்றான்; இன்றும்
பம்பையென முழங்குகின்றான் என்றே சொல்வீர்!

# கல்

பொங்கல்நாள் தமிழர்க்குத் திருநாள் என்றால்—
புழுங்கல்ஏன்? அழுகல்ஏன்? எதையோ பற்றித்
தொங்கல்ஏன்? நுடங்கல்ஏன்? குறைம னத்தால்
சுருங்கல்ஏன்? அறுவடையால் மகிழ்ச்சி வெள்ளம்
தங்கல்தான் உழவனிடம் விளங்கல் வேண்டும்!
தடைக்கல்லாய்த் தடுக்கல்ஏன்? அடிப்ப டைக்கல்
செங்கல்லோ, கருங்கல்லோ, உறுதி யானால்
செருகல்கள் அணுகல்தான் இயலா தென்றும்!

அகல்விளக்கை அமுக்கல்தான் அறிவுச் சூன்யம்;
அடக்கல்வீண் தருக்கல்தாம் இருசா ரார்க்குள்
இகல்மூள வகைசெய்யும்! முனகல் பேச்சால்
இயங்கல்தான் வழுக்கல்மேல் சருக்கல் போலாம்!
நகல்என்றும் அசலாகா தன்றோ? பொன்னில்
நசுங்கல்கள், நெருக்கல்கள், திருகல் என்னும்?
புகல்என்றால் சொல் எனலாம்; சுணங்கல் இன்றிப்
புகல்என்றால் அடைக்கலம்ஆம்; பொசுங்கல் இல்லை!

ஒக்கல்தாம் சுற்றத்தார்; ஒடுக்கல் நீங்கி
ஒடுங்கல்தான் குறள்நெறியில் ஒழுகல் ஆகும்!
முக்கல்தான் நோய்க்குறியை விளக்கல் கூடும்;
முச்சுமுட்டக் கக்கல்தான் நரகல் என்போம்!
குக்கல்வந் தவற்றையெலாம் நக்கல் நன்றோ?
கொடுக்கல்தான் வள்ளலெனும் உயர்வின் ஓங்கல்!
சுக்கல், தூள்; சிக்கல்நூல் நறுக்கல் நன்று!
சுருக்கல்தான் வீண்பெருக்கல் சுமைகு றைக்கும்!

ஏங்கல்ஏன், எதிர்பாரா ஏமாற் றத்தால்?
இரங்கல்ஏன், இழப்புகளால்? முடுக்கல் இன்றித்
தாங்கல்தான் இதயத்தின் கடமை யாகும்!
தாக்கல்போர் முறையெனினும் ஊக்கல் தீது!
வாங்கல்நான்; வழங்கல்நீர்; மெழுகல் வேண்டாம்!
வதங்கல்நம் கொள்கையிலே விளக்கல் நன்றும்!
தூங்கல்தான் ஏங்கல்பின் எனும்நி லேக்குத்
துவக்கல்! நண் பகல்நேரம், வைகல் போனல்!

அடங்கல்நன் ருமைபோல்! நற்கு ணங்கள்
அடுக்கல்நன் றென் றன்மேல் மற்றென் றுக!
மடங்கல்வீண் இழிவென்பார்; மடக்கல் முன்னே
மழுக்கல்ஏன்? தாமாக விலக்கல் மேலாம்!
தடங்கல்கொண் டெழுதாதீர் முடங்கல்! வாழ்வில்
தனிப்பதுக்கல், பின்நடுங்கல் நீங்கல் மேன்மை!
தொடங்கல்தான் தாமதத்தால் உறங்கல் போலே;
தொய்வான தைக்கசக்கல் பழுதாய் ஆக்கல்!

கலங்கல்ஏன்? கிறுக்கல்தாள் எழுத்தை ஊக்கல்
கடன்தானே? உரைகல்லாய்ப் படிக்கல் லாகத்
துலங்கல்நீர் காண்கின்றீர்! நடுகல் நட்டுத்
தொழுகல்லாய் வணங்கிடுவீர்; நீக்கல் இல்லை!
இலங்கல்நற் காரியத்திற் கிணங்கல் என்றல்—
ஏன்பழகல்? பின்நோகல்; திறக்கல்; மூடல்?
அலங்கல்கொண் டணிசெய்வீர் என்க ழுத்தை;
அடித்துவைத்த கல்லாநான்? சதங்கை கல், கல்!

# சல்

சல்லாபம் செய்திடலாம் வாராய் தோழி;
சலிப்புநீங்க உல்லாசம் தேவை இன்று!
சல்லாவால் உடல்மறைக்க நினைக்கின் றுயே...
சரிதானு? முறைதானு? இயலா தம்மா!
சல்லகமாம் பன்றிமுள்போல் முடிசி லிர்த்துச்
சட்டென்று கோபித்துச் சண்டை போடச்
சல்லடத்தைக் கட்டிவிட்டாய்; தாங்க மாட்டேன்!
சமாதான உடன்பாடு; சிரிப்புக் காட்டு!

சல்லிக்கட் டென்றுலே காளைக் கெல்லாம்
சங்கடந்தான்! அடக்கவரும் காளை யர்க்கோ
சல்லிக்கா சுக்காகப் பணயம் வைத்துச்
சபலத்தால் உயிர்விடுக்க மனம்வா ராது!
சல்லடையின் கண்போல உடலைக் குத்திச்
சன்னலெனக் கொம்பாலே குடைச்சல் போட்டால்
சல்லியத்துக் கரணியெனும் மருந்தை யிட்டுச்
சம்பூர்ண குணமடையச் செய்வார், அந்நாள்!

சல்லரியென் றுல்மேளம்; லயந்தப் பாமல்
சங்கீத முழக்கமிடும் சமயம் பார்த்து!
சல்லிகையோ பெரும்பறையாம்; உரசல் சப்தம்
சமர்க்களத்தில் ஒலிப்பதுபோல் ஓசை காட்டும்!
சல்லியமென் றுல்ஈட்டி; சக்தி யுள்ளார்
சண்டப்ர சண்டமாக வீசிப் பாய்வார்!
சல்லவட்டம் கேடயமாம்; தடுத்துக் கொண்டால்
சஞ்சலமில் லாதுலகில் சஞ்ச ரிப்போம்!

அஞ்சல்தான் அசல்வாசல் செய்தி போக;
அச்சத்தைத் தவிர்ப்பதற்கும் அஃதே சொல்லாம்!
கொஞ்சல்தான் ஊடலின்பின் வெற்றிப் பாதை;
கூடுவார்க்குக் கொஞ்சல்தான், கூச்சல் வேண்டாம்!
துஞ்சல்,கள் அருந்துவார்க்கு மரணம் போலே;
தூக்கிவைத்துக் காப்பாற்றிப் பயன்தான் என்ன?
மிஞ்சல்வீண் நெரிசல்தான்? மிகையாய்ப் போனல்
விரிசல்தான்; அலேச்சல் ஏன்? வருமா புத்தி?

ஈசல்கள் இறக்கையுள்ள கறையான்; புற்றில்
இருந்திடாமல் பறந்துவந்தால் வீழ்ந்து மாயும்!
ஏசல்கள் இதயமில்லா ஒதியங் கொம்பின்
ஏமாற்ற விளேச்சல்தான்; இடைஞ்சல் ஆகா!
பூசல்கள் பொல்லாங்கு நல்கா வண்ணம்...
புகைச்சல்,கண் எரிச்சல்கள் வராது காப்போம்!
ஊசல்சோ(று) உண்பதற்கே உதவா தம்மா;
ஊஞ்சல்போல் உள்ளமுந்தான் அஃதே யாகும்!

ஓய்ச்சல்கா ணுநீச்சல் மீனின் பண்பாம்;
உணராத எருமைகளே என்ன சொல்வோம்?
பாய்ச்சல்தான் புலிக்குட்டி இயல்பு; பன்றி
பதுங்கியோடிச் சேற்றில்தான் மூழ்கும்! புல்லில்
மேய்ச்சல்தான் ஆட்டுக்குத் தொழிலாம்; யானே
மேல்மட்டம் உயர்வதற்கு முடியா தன்றே?
காய்ச்சல்தான் பிதற்றலுக்குக் கார ணம்; ஆம்,
கடுஞ்சொல் ஏன்? பத்தியமாய்க் காத்தி ருப்போம்!

# மானம்

முக்கொடிகள் தருநிழலில் குளிர்ச்சி கண்ட
பாவேந்தர் வறுமையிலே திளைக்கா வண்ணம்
பரிசிலாக வரையாது வழங்கி வந்த
கோவேந்தர் பரம்பரையோ குன்றித் தேய்ந்து
குறுநிலத்துச் சிறுமன்னர் நிறைந்த தாலே
நாவேந்தர் நூலியற்றும் ஆர்வ மற்று
நலிந்தமனம் மெலிந்தவுடல் கொண்டு விட்டார்!

ஆனாலும் முத்தம்மாள் தமிழ்க்கு லத்தின்
அற்றைநாள் மூதாட்டி; கணவன் மாண்டு
போனாலும் திடங்கெடாமல் ஓரேபு தல்வன்
போற்றிவளர்த் தாளாக்கிக் கல்வி தந்து
தானாகக் கவிபுனையும் திறனைக் கண்டு
தானீன்ற பொழுதினிலும் பெரிது வந்தாள்.
ஊனாக உயிராகத் தமிழை எண்ணும்
உயர்குடும்ப மனப்பாங்கு வேறு காதே!

இருந்திட்ட சிறுகாணி நன்செய் மண்ணில்
இருவருமே பாடுபட்டுச், செந்நெல் கண்டு,
விருந்தினர்க்கும் சோறளித்துப், பண்பு காத்து,
விழாஎடுத்து, வீட்டிற்குப் பெண்ணும் கொண்டு,
மருந்தனைய மருமகளால் மேலும் சீராய்
மகிழ்ந்திருந்தார்; இருபிள்ளை அளவாய்ப் பெற்றார்.
பெருந்தனமாய் அக்குடும்பத் தலைவன் நாளும்
பேணுகின்ற பாக்களெலாம் ஓலை யேறும்!

எவ்வாறோ பாப்புனையும் திறனும் பெற்றான்;
இனிமையுடன் எழுதுகிற துடிப்பும் கொண்டான்!
செவ்வாழைக் கனிச்சுவையை வெல்லும் செய்யுள்
சிறப்போடு சுவடிகளை நிரப்பும்; நெஞ்சம்
ஒவ்வாத கருத்துகளை உரைத்த லில்லை;
உழைப்பினிலும் பின்வாங்க மாட்டான்; ஊரார்
அவ்வாறு பாராட்டிப் புகழ்ந்து ரைத்தார்.
அளவின்றிப் பொருளீட்டிச் சேர்த்து வைத்தான்.

வலிவான அரசாட்சி அமையாக் காலம்,
வன்முறையில் கொள்ளையிடும் கூட்டத் தார்கள்
மலிவாகப் பெருகிவந்தார்! ஊர்கள் தோறும்
மக்களெலாம் அஞ்சுமாறு சூழ்ந்து தாக்கி,
நலிவான செல்வரிடம் பொருள்க வர்ந்து,
நாடுமுற்றும் கேடுசெய்யப் படையெ டுத்தார்!
பொலிவார்ந்த தமிழ்நாட்டில் களங்கந் தேடப்
புகுந்துவிட்ட இக்குழுவைத் தடுப்பா ரில்லை!

முத்தம்மாக் கிழவிக்கும் ஒருநாள் ஓலை
முடுகிவரத் திடுக்குற்று மகனி டத்தில்
சத்தமின்றிச் செய்தியினை வெளியிட் டாளே !
சடசடெனு வீட்டிலுள்ள நகைபொ ருட்கள்
அத்தனையும் நிலத்தடியில் புதைத்து விட்டாள்!
அருமையாக மகன்யாத்த சுவடிக் கட்டைப்
பத்திரமாய்ப் பரண்மீதில் ஒளித்து வைத்தாள்;
பக்குவமாய் வெறும்வீட்டில் வாழ்ந்தி ருந்தாள்

அடுத்தநாளின் நள்ளிரவில் கள்வர் கூட்டம்
அறிவிப்புத் தவருமல் திரண்டு வந்தார்!
"கொடுத்துவிடு பொருள்யாவும்!" எனமிரட்டக்—
குறுங்கிழவி "இங்கொன்றும் இல்லை!" என்ருள்.
திடுத்திடெனப் பரண்மீதில் ஒருவன் ஏறித்
தேடுகையில் சுவடியோலைக் கற்றை கண்டு
கடுத்தமுகத் தோடு, "இதனைக் கொளுத்தி விட்டால்
காலைவரை குளிர்விரட்டப் போதும்!" என்ருன்.

"அப்பப்பா! அத்தனையும் மகன்வளர்த்த
அருந்தமிழாம்! அனைவர்க்கும் உயிராம்! இன்றேல்,
எப்போதோ உயிர்துறந்து மறைந்திருப்போம்
இன்னும்யாம் வாழ்ந்திருத்தல் இவற்ருல் மட்டும்!
இப்பாரும் இவற்றைவிட உயர்ந்ததில்லை!
இப்போதே புறக்கடையில் புதைத்து வைத்த
அப்பொன்னைத் தந்திடுவேன், அகல்வீர்!" என்ருள்;
அன்னைமொழி மானத்தைக் கிழவி காத்தாள்!

# தை

சங்கராந்திப் பண்டிகையாய் முன்கா லத்தில்
சரியாகப் பொருள்புரியா திருந்து வந்து,
பொங்கலெனுந் திருநாளாய்ப் பிற்கா லத்தில்
புதுமையுடன் மாறியுள்ள விழாவைக் கண்டோம்!
செங்கதிரின் ஒளியிணையே இரவல் வாங்கித்
தேய்வதையும் வளர்வதையும் தொழிலாய்க் கொண்ட
திங்களைப்போல் போலியல்ல; தனது சக்தி
தெளிவாக உடையதுதான் இந்நாள்; பொன்னாள்!

மாட்டோடும் ஆட்டோடும் வயற் பரப்பில்
மழைதண்ணீர் சேறென்று பாரா வண்ணம்,
வீட்டுக்கும் காட்டுக்கும் வேறு பாடு
விளங்காது, பகலன்றி இரவில் கூடப்
பாட்டாளி பாடுபட்டுப் பயிர்வி ளைத்துப்
பயன்முற்றும் அறுவடையாய்க் காணும் போதில்—
நாட்டுக்குப் பண்ணையாராய் யாரோ வந்து
நலன்களெல்லாம் களவாடல் முறையே ஆமோ?

உழைப்புக்கு வெற்றிபெறும் அரிய நாளில்...
உற்சாகப் பெருவெளியில் உழவன் நீந்திப்,
பிழைப்புக்குப் பட்டதுயர் மறந்து, நெஞ்சில்
பெருமகிழ்ச்சி கரைபுரள, மனைவி மக்கள்
அழைப்புக்குச் சிறப்பளித்துக், குடும்பத் தோடும்
அண்டையுள்ளார் வளம்பேணி, வாழ்த்துக் கூறித்
தழைப்பதுதான் தமிழ்நாட்டான் கண்ட பொங்கல்!
'தைதை!' யெனக் கூத்தாடித் துள்ளு வோமே!

# தா

"தா!" என்ருல் தருவீரா, "இந்தா!" என்று?
சமநிலையில் உள்ளவர்பால் கேட்கும் சொல்; தா!
தாவென்ருல் குரங்குபோல மரத்தில் தாண்டல்;
தாவலிலே ஆவலுள்ள மனிதன் உண்டு!
தாயென்ருல் மாதாதான்; பிதாவோ தந்தை;
தாத்தாவும் ஆத்தாவும் மூத்தார் ஆவர்!
"தா" என்ருல் தாம்பூல வாய், தா; அத்தான்
தாலிகட்டித் தாரம் ஆனுய்; தாகம் கொள்வாய் !

தாதுபார்த்து நாடிகளின் துடிப்பை நோக்கித்—
"தாறுமாருய்த் தாமதமாய் என்பால் வந்தாய்!
தாதிபார்த்துத் தருகின்ற மருந்த ருந்தித்
தாயாதிக் காய்ச்சலெலாம் தாங்கிக் கொள்வாய்.
தாதாஎன் றுனேயெண்ணித் தாரை வார்த்தாய்;
தாராளம் எதுவரையில் தாங்கும்? யார்க்கும்
தாதனென வாழாதே, நிமிர்வாய்!" என்று
தாமுரைத்தார் மருத்துவராம் எனது நண்பர்!

தாக்கணங்கு வாராத சங்க நூலின்
தாளில்லே; இந்நாளில் எவர்தாம் பார்த்தார்?
தாக்குவதோ தாவணியில் லாத ஆடை;
தாட்சணியம் பெண்கள்பால் இல்லே என்ற
தாக்கலொன்றும் இதுவரையில் கேட்ட தில்லே;
தாங்குவரோ இல்லத்தார் தாண்ட வத்தை!
தாக்குதல்கள் போர்முனையில் தானேக் குள்ளே!
தாழியின்மேல் குந்தாணி தாயத் தாகும்!

உதாரகுணம் வள்ளலாக்கும் சித்தாந் தந்தான்;
ஊதாரிப் பட்டத்தைப் பதாகை யாக்கும்!
உதாரணமாய் ஊர்க்கென்று வாழ்ந்தால், "தாசன்
ஓய்ந்தானு கூத்தாடி?" என்றே கூறி—
உதாசீனம் காதாரக் கேட்கப் பேசி—
உடைத்திடுவார்; பிரதாபம் மத்தாப் பூவாம்!
"எதார்த்தவாதி வேதாந்தி; தாடி மீசை
ஏன்?" என்று தாடையிலே தாளம் வைப்பார்!

ஆதாயம் இல்லாமல் ஆற்றைக் கட்டி,
ஆரிறைத்தார்? தாமரையின் தண்டு, நீரில்;
ஆதாரம் கேட்பாரா? தாழை, முள்ளாம்;
அந்திமந்தா ரையில்ஏது? மேதா விக்குச்
சூதாட்டம் எதற்காக? தாம்பில் தொங்கத்
தோதாகும்; சோதாவோ வாதா டல்தான்!
சாதார ணக்குடிக்குச் சேதா ரங்கள்
சதாவந்தால் தாழ்வாகும் நிலைமை மேலும்!

தானத்தில் அன்னதானம் சொர்ண தானம்
தான்யதானம் கோதானம் பூமி தானம்!
தானத்தில் சந்தானம் அளவாய் வேண்டும்;
தாவரம்போல் தழைக்கவிடக் கூடா தென்பார்!
தானத்தில் சமாதானம் உலகத் தேவை;
சமத்தான உறவுக்கும் பிரதா னந்தான்!
தானத்தில் நிதானந்தான் விதானம் போலே;
தாரகமும் அஃதேயாம்; போதும் இத்'தா'!

# வை

வையென்று சொல்லுமுன்னே வளையும் நாக்கால்
வைகிறவன் உயிர்வாங்கும் பகைவ னுவான்!
வையென்று சொன்னவுடன் பொருளைக் கீழே
வைக்கிறவன் உயிர்காக்கும் நண்ப னுவான்!
வையென்ருல் வைக்கோலாம்; மாடு தின்னும்!
வளர்பனியில் உறங்கநன்று வைக்கோல் கூரை!
வையகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டின்
வைப்புநிதி, சிலுவைஏசு கண்ட அன்பாம்!

அவையென்ருல் அஃதுக்குப் பன்மை என்பீர்;
ஆன்ருேர்கள் குழுமுகின்ற சபையும் ஆகும்!
சுவையென்ருல் ஆறுவகை, எனக்கு மட்டும்!
தொல்காப்பி யன்சொல்லில் சுவையோ எட்டு!
கவைக்குதவாச் செயல்புரிவோன் வீணன்; கெட்ட
கயவனவன் நாட்டுக்குப் பிளவை போன்ருன்!
நவையென்ருல் குற்றமாகும்! தேங்காய் ஓட்டில்
நல்லவைகள் குடுவையாகும்; முகவை யாகும்!

தேவைக்கு மேல்சொத்துச் சேர்க்கும் தீயோன்
திருடனெனச் சமுதாயம் உரைக்கும் இந்நாள்!
சேவைக்குக் கூலிகேட்போன் துரோகி யாவான்!
தெரிவையென்றும் அரிவையென்றும் புடைவை கட்டும்
பாவைக்குப் பணியாதோர் உலகில் இல்லை!
பார்க்கின்ருேம் கார்வையுடன் பாடும் பாட்டை!
கோவைக்குக் கோர்வையெனல் பிழையே ஆகும்;
கொல்லுகின்ருர் தமிழ்மொழியில் கலவை செய்தே!

அவ்வையெனக் கிழவிக்குப் பெயரைச் சூட்டி
அவள்தந்த அறிவுரையைச் சலவை செய்வார்!
செவ்வையாக எச்செயலும் ஆற்ற வேண்டும்;
தெளிவாகத் தெரியாமல் செல்லல் தீது!
கொவ்வையெனப் பெண்ணிதழைக் குறிப்பிட் டாரே—
கொட்டுகின்ற கசப்புமொழி கருதித் தானோ?
கவ்வையெனில் பழிதூற்றல்; இதற்குச் சான்றாய்க்
கண்ணற்றோர் பொதுவாழ்வில் நிலுவை யானோர்!

பார்வையினால் மயங்கியோர்க்குத் தண்ட னைதான்
பளிச்சென்று திருமணத்தை முடித்து வைத்துப்
போர்வையான இல்லறத்தில் புகவைக் கின்றோம்!
போக்கேது, புத்திரர்கள் பெருகி விட்டால்?
தீர்வைஅது தீராத தொல்லை தானே?
தெவிட்டுகின்ற அவ்வின்பம் மறப்ப தற்கு
வேர்வைக்கு மதிப்பளிக்கும் உழைப்புத் தேவை!
வெறும்பேச்சா விதவைக்கு வாழ்வு நல்கும்?

பறவையினம் குலவையிட்டுப் பாடி, வானில்
பறக்கலாகும்; குரவைக்கூத் தாடும் மேலே!
மரவையிலே பொருள்வைப்போம்! இரும னம்சேர்
வதுவையெனில் பூவையுடன் அரைவை யாகும்!
குருவையினம் நெல்வகையில் வேளா ளர்க்குக்
கொடுத்துவைத்த வைரமணி; மிதவை யன்று!
அறுவையெனில் ஆடையாகும்; விலக்க மாட்டோம்!
அறுவையெனில் இந்நாளில் பொருள்வே றன்றோ?

# வா

வா என்றால் செல்வாய்! நீ வருவாய் வாங்க
வருவாய்! பின் தருவாய் நின் செவ்வாய்! கொஞ்ச
வா என்றால் எழுவாய்; கீழ் வீழ்வாய்; நோவாய்!
வாழ்வாயோ தாழ்வாயோ? போவாய் பாவாய்!
வா என்றால் வால்வாள்வாழ் மூன்று வேறு
வாய்ப்பான வார்த்தையோடும் மோனை நாவாய்!
வா என்றால் வௌவால்போல் வாய்மை கெட்டு
வாதிக்கும் அவாவுக்குக் கழுவாய் வாயில்!

வாகடத்து வைத்தியத்தில் வாதம் வாய்வு
வாந்திக்கும் நிவாரணமாம் சூரணங்கள்!
வாகனங்கள் வானத்தில் பறக்கும் நாளில்
வாரையிட்ட பல்லக்குச் சவாரி வாதை!
வாகமைந்த சீவாளி வாத்தியத்தின்
வாசிப்பு நாயனமே வான்சிறப்பாம்!
வாகையணி வாயுறைசொல் வாட்டந் தீர்க்கும்;
வாணனுக்கு வாஞ்சைதான் வாவி போலாம்!

வாக்கியத்தைத் தொடங்கியவர் முடிக்க மாட்டா
வாடிக்கை அரசியலின் வாணிகர்க்கு!
வாக்களிப்போர் அறிவையுமே வாடகைக்கு
வாங்கியதாய் எண்ணுகிறார்; வாதனைதான்!
வாக்குவாதம் தேவையெனில் விதண்டா வாதம்
வாயடியே; அந்தவாடை வானரர்க்காம்!
வாக்குண்டாம் பாடும்ஔவை வாழ்நாள் அல்ல;
வாணங்கள் தூவானம் ஆகுங் காலம்!

வாசகத்தில் சிவாயநம மந்தி ரந்தான்
மாணிக்க வாசகர்சொல் ஐந்தெ ழுத்து!
வாசமெனில் வாழ்இடமாம்; உபவா சத்தால்
வாடும்உடல் அபவாதம் வானை முட்டும்!
வாசலது திறந்திருந்தால் நுழையும் மார்க்கம்;
வாங்கி, விடும் மூச்சுக்கு மூக்கு வாசல்!
வாசனைதான் நறுமணமாம்; சகவா சத்தால்,
மாருத சவ்வாதும் சாணம் ஆகும்!

வாரமெனில் ஏழுநாட்கள்; உழுத நெல்லை
வாரிடுவார் நிலப்பூமான்; அதன்பேர் வாரம்!
வாரணமென் றுல் தமிழில் யானை, பன்றி,
வாத்து, கோழி, தடை, மறைப்பு, கவசம்—என்பார்!
வாரியெலாம் அணை, தேக்கம்; துறைகள் தோறும்
வாரியங்கள் அமைத்துநலம் விளைத்தோம் அன்று!
வாரணியும் மடவார்போல் கூந்த லோடு,
வாலுள்ள தேவாங்காய் இளைஞர் ஆனார்!

வாலையிளங் குமரியரும் வாட்ட மின்றி
வாலிபரின் உடையணிந்து கவாத்துச் செய்வார்!
வாழையடி வாழையென வாரா திந்த
வார்ப்படத்து நாகரிகம்! துவாரம் உள்ள
வாளியிலா நீர்தங்கும்? எரியும் காள
வாயின் கீழ் வாயிலிட்டால் சுவாகா எல்லாம்!
வாளுருவும் வீரனுக்குக் கேட யத்தை
வைத்திருக்கும் வகைதெரியும்; வாவா வாழி!

# தல்

அகழ்தல், கீழ் அடிபெயர்த்தல், அசைத்தல், ஆழ
அமிழ்த்தல்,வீண் அலேக்கழித்தல், அயர்தல் காணத்
திகழ்தல்தா னேகளித்தல், திளேத்தல் ஆகும்?
தேம்புதல்கள் திகைத்தல்கள் தீர்தல் வேண்டும்.
புகழ்தல்சொல் புகலுதல்ஏன்? புரிதல் நன்று.
புழுங்குதல், வாய்ப் புலம்புதல்கள், புகைதல், கூடி
இகழ்தல்தீங் கிழைத்தல், பொய் இணைத்தல், பின்னல்
இடித்தல், கால் இடறுதல், முன் இரைதல்—அந்தோ!

ஆக்குதல்தான் ஆராய்தல், அறிவு றுத்தல்;
ஆட்படுத்தல் அதிகரித்தல் அமைதல் தீதாம்!
போக்குதல் கோள் புகுத்துதல்தான்; பொறுத்தல் போலப்
பூணுதல், சீர் பொலிதல்வே றடைதல் உண்டோ?
ஊக்குதல்காண் உடன்படுதல், உணர்தல் உய்தல்;
உயர்தல்தான் உருப்படுதல், உழைத்தல் உந்தல்!
நீக்குதல் வீண் நிந்தித்தல் நிறுத்தல் பண்பாம்;
நெகிழ்தல்,வார் நெருக்குதல்,மேல் போர்த்தல் மெள்ள!

இணங்குதல், நெஞ் சிரங்குதல், முன் இணேதல், ஈர்த்தல்,
இளித்தல், கை இழுத்தல், கண் இமைத்தல் செய்வோர்
பிணங்குதல், பின் பிரிதல்பற் றுதல்கு றைத்தல்,
பிளத்தல், வீண் பழித்தல்; பேர் பெறுதல் ஏனே?
சுணங்குதல், சீர் குலேத்தல்; நேர் கெடுதல் சூழ்தல்;
சுவாசித்தல் நிறுத்துதல்சொல் லுதல்போ லாகும்!
வணங்குதல்நம் வசித்தல்நாள் வளர்த்தல்; மேலும்
வர்ணித்தல், வழிமொழிதல் வலியு றுத்தல்!

ஈதல் மேல் இருத்துதல்தான்; இரத்தல் இல்லை!
இசைதல் கல் எழுதுதல்போல் அழிதல் ஏது?
காதல்வேர்க் கண்டுமுதல் கருத்த ரித்தல்;
கலைத்தல், கண் கலங்குதல், கற் பிழத்தல், காய்தல்!
சாதல்தான் சாதித்தல் சகித்தல் இன்றேல்;
சந்தித்தல் சறுக்குதல்கள் கற்பின் சாய்தல்!
கூதல்தான் குளிர்தல், கூம் பிடும்பெண் கூந்தல்
கூசுதல்ஏன்? நனைக்காமல் குளித்தல் கூடும்!

உடைத்தல், கல் உருட்டுதல்பின் உருக்கு லைத்தல்,
உலவுதல்செய் சாலைவைத்தல்; உவத்தல் கொள்வோம்.
படைத்தல்தான் உதவுதல்; ஆம் அழித்தல் வேண்டாம்.
படித்தல்பா டுதல்பதித்தல், கல்வி காத்தல்.
கிடைத்தல்கீ றுதல், கிழித்தல், கிளர்தல், கேலி
கிளப்புதல், கா ணுதல்கவர்தல், கத்தல் போலி!
துடைத்தல்,துப் புதல் துறத்தல், துவைத்தல், தூய்மை
தொழுதல்; நாம் தோன்றுதல்நற் பயன ளித்தல்!

ஊற்றுதல் நீர் ஊட்டுதல், வேர் விரைதல் மேவும்;
ஓம்புதல்தான் ஓங்குதல்சார் உண்மை ஓர்தல்.
ஆற்றுதல், நாம் ஆதரித்தல்; கடன்அண் ணுத்தல்,
அதிசயித்தல்; அருகுதல்தான் அன்பை ஆய்தல்!
ஏற்றுதல், வாய் ஏசுதல்; நெஞ் சொளித்தல் தீங்கே!
ஏவுதல், கை ஏந்துதல்போல் இழிதல் செய்தல்;
மாற்றுதல்தான் எனைமதித்தல்! மகிழ்தல், பூண்போம்;
மலர்தல்வேண் டுதல்; பார்த்தல், வருதல், வாழ்த்தல்!

# மல்

அடையாமல் அணுகாமல் போனுல் வாழ்க்கை
அமையாமல் சுமையாகும்! அவளெ னக்குக்
கிடையாமல் தடையா?மல் லுக்கு நின்றும்
கிழியாமல் கழியாமல் வாகை மாலை
உடையாமல் சிதையாமல் கையில் பெற்றே
உயராமல் போவேனே? உறுமல் பம்மல்
குடையாமல் குத்தாமல் காதல் பாதை
குறிக்காமல் செரிக்காது தின்னும் சோறே!

ஆடாமல் அசையாமல் அமரா மல்தான்
அணையாமல் காத்தேன்என் துணையாம் தீபம்!
தேடாமல் திணறுமல் வந்த இந்தத்
தெவிட்டாமல் குமட்டாமல் இனிக்கும் தேனைக்
கூடாமல் சுவைக்காமல் குறிக்கோள் வேறு?
கோடாமல் ஓடாமல் செடியில் பூத்து
வாடாமல் வதங்காமல் நிலைக்கும் பூவை
வாழ்த்தாமல் சூடாமல் வாழ்க்கை ஏனோ?

இடியாமல் மின்னுமல் மழையும்—காற்றில்
இயங்காமல் அலையாமல் முகிலும் உண்டா?
அடியாமல் காய்ச்சாமல் ஆயு தங்கள்—
அகழாமல் தோண்டாமல் கிணறும் உண்டா?
படியாமல் பயிலாமல் மாணுக் கர்கள்—
பாடாமல் குதியாமல் நடனம் உண்டா?
குடியாமல் வாழ்வதற்கு முடியா மல்தான்
குன்றுமல் நின்றுரும் குழுமல் விட்டார்!

ஈயாமல், இரங்காமல், இருமல் தும்மல்
எழுந்தால் கை நீளாமல் இருப்போர் நெஞ்சில்
ஓயாமல் ஒழியாமல் அமைதி என்றும்
உறங்காமல் தங்குமென்று நினைக்கின் றீர்கள்?
சாயாமல் சரியாமல் மணலின் கோட்டை
தாழாமல் வீழாமல் உயர்ந்தா தோன்றும்?
மாயாமல் வியாமல் காயா மல்தான்
காவாமல் போவாரேல் தோற்பார் மல்லர்!

உண்ணாமல் உடுக்காமல் உறைவி டத்தில்
உலவாமல் உதவாமல் பொதுந லத்தை
எண்ணாமல் நல்லாரோ டிணையா மல்போய்
ஏங்காமல் நீங்குவரேல் கண்ணீர் வெள்ளம்
நண்ணாமல் நெருங்காமல் அன்பு மல்கி
நனையாமல் உலராமல் நயத்தல் கூடும்!
பண்ணாமல் செய்யாமல் வருமா பண்டம்?
பாராமல் கேளாமல் ஏது சாட்சி?

ஊற்றாமல் முகக்காமல் ஏற்றம் இல்லை;
உயர்த்தாமல் இறக்காமல் ஏணி இல்லை;
போற்றாமல் புகழாமல் பக்தன் இல்லை,
புரியாமல் தெரியாமல் உரைநூல் இல்லை;
தூற்றாமல் இகழாமல் பகையே இல்லை,
துணியாமல் உழைக்காமல் வெற்றி இல்லை;
சாற்றாமல் எழுதாமல் கவிதை இல்லை;
சலியாமல் படிப்போர்க்குக் காதுக் கம்மல்!

# வல்

அவல்தந்து கண்ணன்மேல் அகவல் பாடி
அலுவல்தான் வேண்டிநின்ருன் குசேலன்! கண்ணன்
"கவல்கின்ருய் இருபத்தே ழெய்தி; வீணுய்க்
கைவல்யங் கற்றவனே, தவறேன் செய்தாய்?
நுவல்வதனுல் வருந்தாதே; வல்சி, அப்பம்
நொறுக்கிடுக; நூறு நூறு வைத்துள் ளார்கள்.
சுவல்வீங்கத் துவல்மாலை சூட்ட வந்தார்
சூழ்வல்லார், குபேரன்போல் செல்க!" என்ருன்.

ஆவல்தான் மூண்டெழுந்தால் அளவ ளாவல்;
அவாவல்சேர் அளாவல்தான்; அளவும் உண்டோ?
தாவல், பின் தமைமறத்தல். துழாவல், தவ்வல்,
தகவல்கள் பரிமாறல், தடுத்தாட் கொள்ளல்,
நிவல்,கூந்த லைவருடல், நெடுமூச் சாலை
நிறுவல்,பின் நெருப்பின்மேல் நிற்றல் போலே!
சேவல்தான் செவ்வல்லிப் பேடு சேலை
சீவல்போல் கையுருவல் செய்யும், நெய்யும்!

இரவல்கொள் வல்லிசையால் வல்லி னத்தோன்
இளவல்தான் வல்லாண்மை கொள்வான் ஆங்கே.
விரவல்செய் பொய்ம்மைதான் மேவல் உண்டாம்;
வினவல் ஏன்? வெருஉவல்ஏன்? வெற்றி பெற்றுக்
கரவல்தான் விஞ்சிநிற்கும்! ஒன்றை யொன்று
கவ்வல்செய் விழியிணையோ வல்ல யம்போல்!
நிரவல்செய் நெஞ்சகங்கள் நெருங்கிச் செல்ல
நிலவல்மெய்க் காதல்; வே றென்ன காவல்?

ஈவல்யான் வல்விலங்கு; வல்லூ றெல்லாம்
ஏவல்செய் வல்லுநன்யான்; வல்லி:யங்கள்
கூவல்செய் வனம்வாழ்வேன், வல்லூ கம்போய்க்
குலவல்செய் வல்லுளிகள் மேயும் ஈங்கே!
தூவல்செய் மரமலர்கள் இடைநு ழைந்து
துருவல்தான்; துறுவல்ஏன்? வல்லே ரேசை
நோவல்செய் வல்லபந்தான் நோய்போ லாகும்;
நூவல்தான் நீர்பாய்ச்சும் வேலை, நன்று.

உழுவல்பே ரன்பாலே உலவல் வேண்டும்;
ஊடுருவல், தடைபடுத்தல், உசாவல் ஆகா!
நழுவல்ஏன்? நல்லதுகண் டுதவல் எங்கே?
நாவல்காய் கனிபோல இனிப்பா நல்கும்?
தழுவல்மெய் சோர்ந்திருந்தால் உணர்வு மல்கும்,
தடவல்கை பிடித்தவரின் மனத்தைப் போலாம்;
கழுவல்தான் கைவிடுதல் துன்ப நாளில்;
கடாவல்வீண்; கருத்தெண்ணிப் பார்த்தால் போதும்

வல்மீகம் கரையான்புற் றாகும்; பின்னுள்
வல்லடியால் நாகத்தின் இருப்பிடம் ஆம்!
வல்லவரே நல்லவராய் மாறி நின்றால்
வல்லாங்கு வாழ்ந்திடலாம்; புலவல் ஏது?
வல்லாரை, விடவல்லி, கார வல்லி,
வல்லிசம்போல் மூலிகைகள் கொடுமை தீர்க்கும்.
வல்லாளன் முறுவல்தான் பனுவல்; கொள்கை
மருவல்செய் உருவத்தைத் துவ்வல் மௌவல்!

# பெருந்தன்மை

வள்ளியம்மை வளமான மண்ணில் ஊன்றி
வகையாக வளர்த்துவரும் கிழங்கு போலக்
கள்ளமின்றி நாடோறும் மெல்ல மெல்லக்
காண்பவரின் கருத்தினையே கவரும் வண்ணம்
புள்ளிமயில் சாயலுடன் உயர்ந்து வந்தாள்!
பொன்னூரின் மாணவர்கள் குறும்புப் பார்வை
பள்ளிக்குச் செல்வதையே தடுக்க நேர்ந்து,
பாவையவள் வீட்டோடு முடங்கிப் போனாள்!

கலைபயிலுங் காலத்தை வீண டித்துக்
கலவரத்தை நாடுகின்ற உள்ளப் பாங்கும்,
தலைமுடியும் கன்னத்தில் நீண்ட தூணும்
தடையின்றி வளர்ப்பதிலே விருப்புங் கொண்டு
நிலைகுலையும் சிலர்மட்டும் அலுவல் இன்றி,
நிமிர்உடலில் இறுக்கமான ஆடை பூண்டு
சிலையனையாள் சிறையிருக்கும் வீட்டின் முன்பு
தினந்தோறும் நடைபயிலும் வழக்கம் ஏற்றார்!

யாரையுமே ஏறெடுத்துப் பார்க்க வில்லை!
ஏழையான முத்தப்பன் இளைஞன்; உள்ளூர்,
கூரையிட்ட வீட்டினிலே குடியி ருக்கும்
குணக்குன்று; மருந்தகத்தில் நோயா ளர்க்கு
நீரையிட்டுத் தந்தாலும் நீங்கு மென்று
நீடியநற் புகழ்பெற்றோன்; எளியன்; தூயோன்;
பேரையெவர் கேட்டாலும் பெருமை கொள்வார்;
பேதையவள் நெஞ்சத்தில் இடத்தைப் பெற்றான்.

வீட்டார்கள் சம்மதித்தார்; சீர்கள் செய்து
மிகச்சிறப்பாய்த் திருமணமும் முடித்தார்; பின்னர்
நாட்டோரின் வழக்கத்தை மீறி டாமல்
நல்லதொரு வீடமைத்து வாழ வைத்தார்.
கூட்டாளி நற்பண்பின் பயனாய், ஊரார்
கூட்டத்தில் முத்தப்பன் திறமை மெச்சி
நாட்டாண்மைப் பொறுப்பினையே நல்கி னார்கள்!
நல்வகையில் பொதுப்பணிகள் ஆற்றி வந்தான்.

ஆற்றாமை மிகுதியினால் ஊரில் உள்ள
அழுக்காறு நிறைந்தசிலர் புழுக்க முற்று
"மாற்றானின் மனையாளாய் ஆனாள் வள்ளி;
வாழ்க்கையிலே சுகமடைய ஒவ்வோம்," என்று
தூற்றாத நாளில்லை; "தூய்மை கெட்டாள்;
துணைவன்மேல் அவளுக்குக் காதல் இல்லை;
வேற்றாளை விழைகின்றாள்; எம்மைக் கண்டு
மென்னகையும் விழியசைவும் செய்தாள்!" என்றார்.

"ஒற்றுமையாய் வாழ்கின்றோம்; உழைத்து நாளும்
உயர்கின்றோம்; ஊர்நன்மை நாடு கின்றோம்;
கற்றவர்கள் போற்றுகின்றார்; பயனைப் பெற்றார்
கண்கண்ட கடவுளென மிகையாய்க் கூறி
மற்றவர்க்கும் புரியுமாறு விளக்கு கின்றார்;
மனச்சாட்சி கொன்றுவிட்ட கயவர் பேச்சில்
உற்றபெருந் தன்மையின்றிப் போனால் என்ன?
உண்மையுடன் தழைக்கின்றோம்; தொடரும் தொண்டு."

# விருந்து

பிழைப்புநாடி அலைகின்ற கவலை யில்லாப்
பிறவிஅவர், பரம்பரையாய்ப் பெரிய சீமான்.
உழைப்பதற்கும் செல்வத்தைப் பெருக்கு தற்கும்
ஓயாமல் ஆயிரம்பேர் சூழ்ந்துள் ளார்கள்.
தழைப்பதெல்லாம் புகழுக்கே! அவரே என்னைத்
தரம்புரிந்து கூப்பிட்டால் தயங்க லாமோ?
அழைப்பிதழைப் பார்த்ததுமே அயர்ந்து போனேன்;
அடேயப்பா, அவ்வளவு நேர்த்தி அச்சு!

மிகப்பெரிய மாளிகையின் மூன்றும் மாடி
வெட்டவெளித் தோற்றத்தில் என்ன மாற்றம்!
அகப்படாத பூச்செடியே இல்லை என்பேன்;
அலங்காரத் தொட்டிநிறை செயற்கைத் தோட்டம்!
திகைப்பளித்துச் சுடர்வீசும் பலநி றத்தில்
திகழ்கின்ற மின்விளக்கின் தோர ணங்கள்!
முகப்பினிலே வரவேற்று வணக்கம் சொல்லி
முறுவலுடன் வழிகாட்ட அடியார் கூட்டம்!

எங்கிருந்து வருவதென அறியா வண்ணம்
இனிமைதவழ் நாயனமும் தவிலும் நல்கும்
சங்கீத அருவிஅங்கே சலச லக்கச்...
சல்லடமும் சட்டைதலைப் பாகை எல்லாம்
சங்குநிற வெண்மையாக அணிந்த ஆட்கள்
தவறாமல் ஒவ்வொருவர் அருகில் வந்தும்
இங்கிதமாய் என்னென்ன உணவு தேவை
என்பதெலாங் காகிதத்தில் எழுதிச் சென்றார்.

வருந்தாமல் வகைவகையாய்க் கொணர்ந்த தட்டும்
வரிசையான கோப்பைகளும் நிரம்பி நிற்க—
அருந்தியதும் பசியூட்டும் கனியின் சாரம்,
அடிசில்கள், நெய்ச்சோறு, சித்தி ரான்னம்,
மருந்துபோலப் பாயசம், மோர், பொரியல், கூட்டு,
வறுவல், பச் சடி, துவையல், ஊறு காய்! ஆம்
இருந்தவற்றில் எதை உண்ண? எதைவி டுக்க?
எனும்மலைப்பே எம்நெஞ்சில் எழுந்து மாயும்!

ஒருவழியாய் அரைஇரவு கரையும் நேரம்
உணவுக்கு விடைகொடுத்தோம்! கிளம்பும் சாக்கில்,
வருவாரும் செல்வாரும் ஆவல் தேக்கி
வள்ளலவர் திருமுகத்தை நோக்கி நின்றோம்.
தெருவோரம் இலைபொறுக்கும் ஏழைக் கூச்சல்
சிறிதளவும் எம்செவியில் ஏற வில்லை!
திருவாயால் பெரியவர்சொல் ஒன்றுக் காகத்
தின்றதெலாம் செரிக்காமல் நெளிந்து கூனி

"மன்னிப்பீர் அய்யா; எம் மனங்க னிந்த
வணக்கத்தை நன்றியுடன் மகிழ்ந்த ளித்தோம்!
என்னவொரு காரணத்தால் இவ்வி ருந்தை
ஏற்பாடு செய்தீர்கள்?" என்று கேட்டோம்.
"சென்னையிலே மட்டுமின்றித் தில்லி சென்று
செலவழித்தும், வழக்கொன்று தோற்ற தற்கே!
என்னவியக் கின்றீர்கள்? நானா தோற்றேன்?
இல்லையில்லை; அடுத்தவீட்டுக் காரர்!" என்றார்.

# வெறுங்கை

"நாட்டாண்மை அழைக்கின்றார்; நாளை மாலை
நான்குமணி அளவுக்குச் சாவ டிக்
வீட்டாரின் பிரதிநிதி வந்து தீர
வேண்டுமென்றார்; தவறிவிட்டால் அபரா தந்தான்!
கூட்டாகக் கலந்துபேசி முடிவெ டுக்கக்
கூடியதாய்க் காரியங்கள் நிறைய உண்டாம்!"
பாட்டாக இதைமுழக்கித் தாளத் தோடு
பறையறைந்தார் தலையாரி நேற்றுக் காலை!

இப்படியோர் கண்டிப்புத் தேவை யில்லை;
இதைவிட்டால் வேறென்ன கிழிக்கின் றார்கள்?
எப்படியோ வெற்றிலையைக் குதப்பித் துப்பி—
இரவுபகல் சீட்டாடி—வம்பு பேசி—
அப்படியே பொதுமடத்தில் படுத்துத் தூங்கி—
அரும்வாழ்நாள் வீணாக்கும் எம்ஊ ரார்க்குத்
தப்பாமல் வரச்சொல்லி அழைப்பா வேண்டும்?
தபதபவென் றனைவருமே குழுமி விட்டார்!

தகையுடைய நாட்டாண்மை தலைமை ஏற்றுத்
தன்னுடைய முன்னுரையைத் தொடங்கு கின்றார்;
புகையிலைபோய்த் தொண்டையிலே சிக்கிக் கொள்ளப்
புரையேறித் திண்டாடி, நிதானம் பெற்று,
மிகையாகப் பேசாமல் சுருக்க மாக,
மெதுவாக விவரத்தை விளக்கு கின்றார்:
"தொகைசேர்க்கும் திருப்பணி;நம் கோயி லுக்குத்
துவசத்தூண், பிராகாரம், கோபு ரங்கள்

விரைவாக முடித்துவிட்டுக் குடமு ழுக்கு
விழாவெல்லாம் விமரிசையாய் நடத்த வேண்டும்.
அரைகுறையாய் விட்டிருக்கும் அலுவல் யாவும்
அடுத்தமாதம் தீர்த்தால்தான் வசதி யாகும்!"
உரையிதுதான்; ஊராரின் கருத்தைக் கேட்க
உட்கார்ந்தார்; பட்டினத்தில் கெட்டு மீண்ட
திரையுலகத் துரையொருவன் எழுந்து நின்றான்:
"திகைக்காதீர்; யோசனைகள் நிறைய உண்டு!

குடமுழுக்கு விழாவுக்குத் தலைமை ஏற்கக்
கூப்பிட்டால் ஓரமைச்சர் வருவார்; பின்னர்
படவுலகின் பிரமுகர்கள், எழுத்தா ளர்கள்,
பாங்கான தொழில்மன்னர், வணிக வேந்தர்,
இடமளித்தால் வரநிற்கும் இசைவா ணர்கள்,
இவ்வூரே தாங்காமல் பக்தர் வெள்ளம்,
கடமையாற்றும் அலுவலர்கள், காவ லர்கள்,
கண்காட்சி—பிறகென்ன; வெற்றி தானே?"

ஊராரின் முப்பத்தி ரண்டு பற்கள்
ஒளிசிந்த வாய்பிளந்து வியந்தி ருந்தார்!
சீராக இவையனைத்தும் கேட்டு நின்ற
சிறுபையன் முன்வந்து "சரிதான் எல்லாம்!
யாரார்இங் கெவ்வளவு பணம்கொ டுப்பீர்?
இதுதெரிந்தால் கோபுரத்தை முதலில் கட்டித்,
தாராள மாகவிழா எடுப்போம்!" என்றான்;
தலைகுனிந்த பட்டினத்தான் பேச்சே காணோம்!

# கடிதம்

"படுத்தவுடன் தூக்கமில்லை; உறங்கி ஞலும்
பயங்கரமாய்க் கனவுகளே காணு கின்றேன்!
அடுத்தவூரின் மருத்துவரும் வந்து பார்த்தார்;
அதன்பிறகும் சொப்பனங்கள் நிற்க வில்லை!
கொடுத்தபல மாத்திரைகள் பயன்த ராமல்
குப்பையிலே கொட்டிவிட்டேன்! மனம கிழ்ச்சி
கெடுத்ததெல்லாம் வேறல்ல; எனக்கு வந்த
கேடுகெட்ட கடிதங்கள்! அவைவ ராமல்

அஞ்சலகம் தடைசெய்ய உதவ லாமா?
அன்புகூர்ந்து காப்பாற்றும்!" என்று கூறிக்
கெஞ்சுகிறேன்; அஞ்சலதி காரி உள்ளம்
கிஞ்சிற்றும் இரங்கவில்லை; "அலுவல் செய்வோர்
வஞ்சகமாய்க் கடிதத்தை வழங்கி டாமல்
வைத்திருக்கச் சட்டமில்லை! எழுது வோரின்
நெஞ்சகத்துத் துணிவென்ன? எதற்கோ இந்த
நீசவேலை புரிகின்ருர்? அறிவீ ராநீர்?"

இவரென்ன நீதிபதி போல்கேட் கின்ருர்?
இதற்கெல்லாம் பதில்தரவா இங்கே வந்தேன்?
தவறென்மேல் இவரிடம்நான் வந்த தாலே!
தயங்காமல் வழக்குரைஞர் காதில் போட்டால்
அவரிதற்குச் சரியான உபாயம் தேடி
அச்சத்தைப் போக்கிடுவார்! மிரட்டு வோர்கள்
எவரென்று புரிந்துகொண்டு சட்டத் தாலே
ஏதேனும் செய்தவரைக் கண்டிப் பாரே!

வழக்குரைஞர் நண்பரிடம் அடுத்துச் சென்று
வாட்டத்தைத் தெரிவித்தேன்! கேட்டுக் கொண்டே
வழக்கமான சோம்பேறித் தனத்தால் ஏதோ
மனுவொன்றைத் தட்டச்சு செய்து தந்து
முழக்கமிட்டார்: "காவலர்கள் நிலயத் துக்குள்
முறைப்பாக நீ நுழைந்து, கொடுத்தால் போதும்.
உழக்களவும் துன்பமின்றி ஓடிப் போகும்;
உடனே செல்!" எனத்துரத்திக் கடன்மு டித்தார்.

"போய்வருவேன்" என்றுரைத்துப் புறப்பட் டேன்நான்;
புகைச்சுருட்டைப் பற்றவைத்துத் தலைய சைத்தார்.
'ஆய்வாளர் அலுவலகம்' எனுஞ்சி வப்பில்
அறிவிப்புப் பலகையின்கீழ் நுழைந்தேன் உள்ளே!
ஓய்வில்லாத் தொலைபேசிக் கூப்பாட் டுக்கும்
உயர்ந்திருந்த கோப்புகட்கும் ஊடே நின்றார்.
'காய்வாரோ?' என்றஞ்சி "வணக்கம்" என்றேன்;
கனிவாகக் கைகாட்ட, அமர்ந்து கொண்டேன்!

விண்ணப்பம் எடுத்தளித்தேன்; விவரம் கேட்டார்;
விரட்டுகின்ற கடிதங்கள் வரத்தொ டங்கிக்
கண்ணயர முடியாத கவலை சூழக்
கணத்துக்குக் கணம்சாகும் நிலைமை சொன்னேன்.
"திண்ணமாகத் தண்டிப்பேன்!" என்று கூறித்
திறந்துபார்த்தார் கடிதவுரை!...சீறி வீழ்ந்தார்:
"மண்ணுஉம் தலைக்குள்ளே? இதாமி ரட்டல்?
வருமான வரிபாக்கி எச்ச ரிக்கை!"

# பண்பாடு

"உங்களம்மா நீண்டநாளாய் அழைக்கின்றாரே;
ஊர்க்குப்போய் வருவோமா?" மனைவி கேட்டாள்
தங்குதடை சொல்வேனா! மாமி யாரைத்
தான்விரும்பிப் பார்ப்பதொரு வியப்புத் தானே?
திங்களன்று விடியுமுன்னர் இறக்கி விட்டுச்
சென்றுவிட்ட தொடர்வண்டிப் புகையைத் தாண்டி
எங்களூரின் மண்சாலை வழியே சென்றோம்;
இரண்டரைக்கல் தொலைவுக்கும் கால்நடைதான்!

இருள்முற்றும் விலகாத இனிய நேரம்
இளவேனிற் காலத்தின் எழில்மயக்கும்
பொருள்முற்றும் புரிந்ததனால் உணர்ந்து பாடும்
புதுமைநிறை திருவருட்பா இசைத்த வாறே—
நிறைவோடு அருள்பெற்ற நடந்து சென்றோம்.
ஆறெல்லாம் வறண்டிருந்தும் ஊற்று நீரைச்
சுருள்சுருளாய்த் தோண்டிமொள்ளும் குழிகள் கண்டு
தொண்டாற்றும் இயற்கைத்தாய்அன்புணர்ந்தோம்

கடந்திருப்போம் பாதிவழி; எதிரில் யாரோ
கடும்விரைவாய்த் தடுமாறி வருதல் கண்டோம்!
நடந்திடவும் இயலாத ஒருமூதாட்டி
நரைதிரையைக் கருதாமல் ஓடி வந்தாள்!
இ ந்தந்து சிறிதொதுங்கி நின்ற எம்முன்
இரைச்சலுடன் பெருமூச்சு விட்ட வாறே
உடைந்துபோன உள்ளத்தை எதிரொலிக்கும்
ஓசையுடன் குழறுகின்றாள் கண்ணீர் சோர:

"அம்மஅம்மா! இணையாக எதிரில் யாரும்
அழகான இளமையான பெண்ணும் ஆணும்—
தம்முறவைக் காட்டாமல் ஓடி னாரா?
தயைசெய்து சொல்லுங்கள்; பார்த்தீ ராநீர்?
செம்மையாக ஏமாந்தேன்; பேர்த்தி செய்த
சிறுமையினை யாரிடம்போய்ச் சொல்லக் கூடும்?
அம்மைஅப்பன் இல்லாதாள் பிறனை நம்பி
அகன்றாளே? இவ்வழிதான் போயி ருப்பாள்! "

"பாட்டியம்மா! இருவரில்லை! பெண்ணொ ருத்தி
பகட்டில்லா உடையணிந்து பாங்காய்ச் சென்றாள்!
கூட்டிவர முடியாதே? வண்டி யேறிக்
கூட்டத்தில் போயிருப்பாள்!" என்றாள் இல்லாள்.
போட்டியாக நான்சொன்னேன்; "மங்கை ஏது?
புதிராகச் சொல்கின்றாய்! இளைஞ ஞக
வேட்டிகட்டிச் சென்றவன்தான் ஒருவன் மட்டும்;
வேறெவரும் நம் எதிரில் போக வில்லை!"

திரண்டுவீழ்ந்த கண்ணீரை வழித்தெ றிந்து
திகைப்புநீங்கி மூதாட்டி பேசு கின்றாள்:
"இரண்டுபேரும் சொல்வதிலும் உண்மை கண்டேன்!
எவ்வளவு பண்பாடு நிறைந்த வர் நீர்?
மிரண்டு, போன இருவரிலே பெண்ணைப்-பெண்ணும்,
மேன்மையுடன் ஆடவனை-ஆணும் பார்த்தீர்!
புரண்டழுதும் என்னபயன்? ஓடிப் போனோர்
புதுவாழ்வு தொடங்கட்டும்; வாழ்க நன்றே!"

# கஞ்சி

சோழமன்னன் குலக்கொடியாம் வளவ நங்கை
சொக்கப்பொன் விக்கிரகம், பேசும் சிற்பம்;
ஆழமான இளமனமும், அகன்று நீண்ட
அங்கயற்கண், துடியிடையும், அழகு வாயும்,
வேழமென மதர்த்தநடை, வெல்லச் சொல்லும்,
வீரமகன் யாரெனினும் நெஞ்ச ழிந்து
யாழமுதிற் கிறங்கிடுமோர் மயக்கங் கொள்ளும்
எழிலுச்சிக் கலசமெனத் திகழும் மேலாள்!

பல்லவத்து வீரவழித் தோன்ற லான
படைமுகத்துப் பெருமறவன், மரபு பேணிக்
கல்லெல்லாம் கவிபாடச் செய்யும் மல்லன்,
காஞ்சிநகர் இளவரசன் ஓவி யத்தை
நல்லமனத் தோழிஓர்நாள் காட்டிச் செல்ல,
நைந்துருகி நெகிழ்ந்துள்ளம் அவன்பின் போக,
எல்லையிலாக் காதலினுல் ஈர்க்கப் பட்டாள்;
இராப்பொழுதில் உறக்கமில்லை, பசியு மில்லை!

எத்தனைநாள் இமைமூடா திருத்தல் ஏலும்?
எவ்வாறே ஓர்இரவில் கண் துயின்ருள்.
சித்தத்தில் நிலைக்கின்ற சிந்த னைகள்
சிறகடித்துப் பறக்கின்ற கனவுக் காட்சி:
மெத்தென்ற பஞ்சணையில் உறங்கு கின்ருள்;
மெல்லவந்து நல்லியலாள் கரத்தைப் பற்றிப்
பித்தநகை புரிகின்ருன் ஒருவன்; யாரோ
பிறனென்று திடுக்கிட்டு விழித்துப் பார்த்து

வேற்றூரான் எனநினைத்து "விடாய்!" என் கின்ருள்.
'விட்டுச்செல்' எனும்பொருளிற் சொன்ரு ளேனும்
ஆற்றவொண்ணுத் தாகவிடாய் என்ப தாக
அவளுரைத்த தாயெண்ணி அந்தக் கோமான்,
"ஆற்றியே கஞ்சிகுடி" என் று ரைத்தான்.
அருந்தாகம் தீர்க்கவழி கூறி ஞலும்,
போற்றுகின்ற காஞ்சிநகர் வாழ்வோன் என்றே
புல்லரித்துப் பூரித்துப் போனுள் நங்கை.

உளத்தினிலே உயிர்வாழ்வோன் உருவம் பெற்றே
ஓடிவந்து கரம்பிடித்து நிற்றல் கண்டு,
"களித்தின்று போ" என்ருள். காதல் வேட்கைக்
கனவுநன வாகிடவே, கூடுங் காமக்
களத்தினிலே கலப்பதற்குத் துணிந்து கூறக்,
காதலனே, 'இளவரசித் தரங்கு றைத்து
விளித்து, யானும் கஞ்சிகுடி என்ற தாலே
வெகுண்டனளாய்க் களிதின்னச் சொன்ஞள் போலும்?'

என்றஞ்சி விரைவாக மறைந்து போனுன்;
ஏந்திழையாள் தூக்கத்தைக் கலைத்துப் போனுன்!
சென்றதெலாம் கனவெனினும் சீர்ம டந்தை
செவிலியர்பால் கவலையுடன் அனைத்தும் கூற,
நன்றென்று நாடாளும் நாய கற்கு
நவின்ருர்கள்; மணப்பேச்சுத் தூத னுப்பி
ஒன்ருக்க முனைந்தார்கள், அரச வம்சம்
ஊராளக் கிளைப்பதற்கும் உதவி னுர்கள்.

# 1, 3, 5, 7

உற்சாகம் கொப்புளிக்க ஓடி வந்தான்
ஒன்றுக்கும் உதவாத கண்ணையன்தான்:—
"நற்சான்றுக் கடிதமொன்று தருவீர், அய்யா!
நானதனைப் பயன்படுத்தி வேலை தேடித்
தற்சமயம் பிழைத்திடுவேன்; தருணம் இன்று
சரியாக வாய்த்துளதே! உங்கள் நண்பர்
சிற்சபையின் உதவியாளாய் அமர்ந்து விட்டால்...
செல்வாக்குப் பெற்றிடுவேன்!" எனவே கெஞ்சித்

தன்னிடமே கடிதத்தை வரைந்து, கையில்
தரவேண்டும் என்றுபிடி வாதம் செய்தான்.
என்னிடமா அவன்யுக்தி? எழுத்தில் சூழ்ச்சி
இணைத்திட்டுப் புகழ்ச்சிபோல எழுதித் தந்தேன்!
பொன்னெனவே அதைப்போற்றிப் புறப்பட்டான்; நான்
புதுமுறையைத் தொலைபேசி வழியே சொன்னேன்
ஒன்றுமூன்றைந் தேழென்ற வரிகள் சேர்த்தால்
உண்மையெண்ணம் புரிந்திடலாம் படித்துப்பாரும்:

கண்ணையன் நல்லவனே அல்ல; என்று
கபோதிகூட மனமாரக் கூற மாட்டான்!
கண்ணியத்தின் இருப்பிடமாய் எவன் சொன்னாலும்
கட்டாயம் மெய்யாக இருக்கும்: மாறு
திண்ணமாக நம்பவேண்டாம்! திருடன், சூதன்,
திடுக்கென்று கழுத்தறுப்போன், நெஞ்சில் தோன்றும்
எண்ணத்தை மறைக்கின்ற எத்தன், பித்தன்
இப்படியும் வேண்டாதார் விளம்பு வார்கள்!

கூப்பிட்ட குரலுக்கு வரவே மாட்டான்;
கொடுத்திட்ட வேலைகளை முடித்தி டாமல்!
சாப்பாடுந் தூக்கமுந்தான் இலட்சி யங்கள்
தனக்கல்ல; தன்னலத்தைப் பேணு வார்க்கு!
'ஏய்ப்பதனுல் தவறல்ல; ஏமா றும்பேர்
இருக்குமட்டும் நல்லதுதான்; இலையேல் நம்மைக்
காப்பாற்றிக் கரைசேர்க்க மாட்டார்' என்பான்
கடமையிலே கருத்துள்ள கர்ம வீரன் (!)

அகப்பட்டதைச் சுருட்டும் ஆண்டிச் சாமி
அஞ்சிடுவான் இவன்பெயரை உச்ச ரித்தால்!
சகப்புரட்டன் கன்னக்கோல் பொன்னுச் சாமி
சரியான எதிரியென இவனைக் கொண்டான்!
தகப்பனையே யார்என்னும் சிகப்புச் சாமி
தலைப்பாகை மாற்றுதற்குத் தடைஇ வன்தான்!
மிகப்பெரிய போக்கிலிகள் தொகுப்புக் கூட்டம்
மிரண்டோடி ஒளிவார்கள் நேரில் கண்டால்!

கும்பிட்டுக் கழுத்தறுக்க விரும்பும் செய்கை
கோணலான குறுக்குவழி தேட மாட்டான்!
வம்புக்குத் தாம்பூலம் வாங்கும் நேர்மை
வல்லடியும் சொல்லடியும் பொல்லாங் கென்பான்!
தம்பிக்கும் அண்ணனுக்கும் பகைமை மூட்டல்
தறுதலைகள் போக்கென்று வெறுப்புக் கொள்வான்
நம்பிக்கை மோசடியே அன்புக் கொள்கை
நன்றிகொல்லும் நாகரிகம் ஒன்றும் இல்லை

# கோட்டை

கோவேந்தர் கொலுவிருந்த 'கோட்டை' என்பேர்;
குளிர்பட்டுக் கோட்டையாநான்? இல்லை; அன்று
நாவாய்கள் ஓட்டிவந்த மேனாட் டாரை
நயந்தகள்ளிக் கோட்டையாநான்? இல்லை; தேசிங்
சாவோடு போராடித் தன்னாட் சிக்கோர்
சான்றுசெஞ்சிக் கோட்டையா நான்இல்லை; முன்னாள்?
மேவாத அரசுபல தில்லி தன்னில்
மீதிவைத்த செங்கோட்டை தானோ? இல்லை.

மலைக்கோட்டை என்றிடுவீர் பிள்ளை யாரை
மனத்துக்குள் நினைத்தவாறே; அஃதும் அன்று!
நிலைக்காத திப்புசுல்தான் புகழைப் பாடும்
நீள்வேலூர்க் கோட்டைதானோ? நிசமாய் இல்லை!
சலிக்காமல் பால்பொழியும் காங்கே யத்துத்
தரமான பசுப்பண்ணை காக்கும் பண்ணைத்
தொலைக்காத பழையகோட்டை என்பீர்; இல்லை!
தொலைவிலுள்ள கேரளத்தின் எல்லை யான

செங்கோட்டை சந்திப்பா? அதுவும் அல்ல;
சிந்திக்க இடம்உண்டு; விடாதீர் கோட்டை!
வங்காளக் கடலோரம் ஆங்கி லேயர்
வந்தெடுத்த புனிதசார்சுக் கோட்டை அல்ல;
எங்கெங்கோ எவைஎவைக்கோ கனவு கண்டே
ஏமாந்து மனக்கோட்டை கட்டு வோரே—
இங்கேயோர் கோட்டையெனில், முதலில் என்ன
எடுப்பான அடையாளம் அதற்குத் தேவை?

தலைநகரின் வெளிப்புறத்தில் காவற் காடு,
சார்ந்ததனைச் சுற்றிலுமோர் அகழி வேண்டும்;
மலையெனவே ஓங்கியவான் மதிலும், செம்பில்
வடித்ததெனும் வடிவழகோ என்னத் தோன்றும்;
அலைந்துவரும் பகையழிக்க ஞாயில் என்னும்
அறைகளுடன் அம்புவிடும் புழையும் வேண்டும்;
கலையாமல் பெற்றிருந்தேன் ஒருகா லத்தில்;
கலைந்ததின்று; காணுகின்றேன் இலக்கி யத்தில்.

முடிவேந்தர் அரண்மனையை முன்னை நாளில்
முகிழ்வித்தார் மலைக்கோட்டை யாகப்; பாரி
நெடிதாண்டான் 'பறம்பு' தனில்; பேகன் வாழ்ந்தான்
நிழல்சாய்ந்த 'பொதினி' தனில்; நள்ளி நின்றான்
குடியோம்பித் 'தோட்டிமலை' மேலே; ஓரி
'கொல்லி'யிலும், 'குதிரைமலை' அதிய மானும்,
மடியேந்தி வழங்காத காரி'முள்ளூர்'
மலையிலும், ஆய் 'பொதிகை'யிலும் கோட்டை கண்டார்

கட்டபொம்மன் கோட்டைநீங்கித் தூக்கில் தொங்கக்
காரணமாய் இருந்தவருள் அந்நாள் என்னைக்
கட்டியாண்ட அரசனுமோர் அங்கம் என்பார்;
கறைபடிந்த விளைவோநான் காய்ந்து போனேன்?
மட்டமான பேர்வாங்கிக் கட்டிக் கொண்டேன்;
மனங்கசிந்த தமிழரசும் கருணை கூர்ந்து
"பொட்டலான புதுக்கோட்டை தனிமா வட்டம்
புதுமையுடன் பொலிக!" எனப் போற்றக் கண்டேன்.

# வானம்

"வானந்தா னுய்ப்பொழியும்; குளிரும் பூமி;
வறட்சிமாறப் பயிர்செய்வான் நமது தோழன்!
ஏனந்த வெள்ளையனுக்கு இறை செலுத்தி
இழிநிலையில் நம்மைநாம் ஆள வேண்டும்?
மானந்தான் பெரிது நமக்கு; உயிரோ துச்சம்!
மறத்தமிழர் குடிப்பெருமை புராணம் அல்ல!
ஆனந்தம் அடிமைமண்ணில் இல்லை; என்றும்
அந்நியருக்கு இடங்கொடுத்தல் மடமை"என்றேன்.

வழக்கம்போல் உடன்பிறந்தான் உடன்தான் நின்றான்!
வஞ்சகமாய் நரிவேலை செய்யும் ஈனன்
சழக்கருடன் சேர்ந்துகொண்டான்; சதிகள் செய்தான்!
சண்டாளர், பிழைக்கவந்தோர், நாட்டை ஆள
உழக்களவும் உரிமையிலார் படிய ளந்தால்
உப்பிட்டுச் சோறுதின்போன் உணர்வு போமோ?
கிழக்கையாள மேற்கிருந்து வந்த கூட்டம்
கிடுகிடுக்கப் போர்தொடுத்தேன்; எனைய ழித்தார்!

பூண்டற்றுப் போகட்டும் எனது வம்சம்
புகழற்றுப் போகட்டும் நம்நா டென்றே
ஆண்டஅந்தப் பரங்கியர்கள் கனவு கண்டார்!
அடிமட்ட மாய்இடித்தார் கோட்டை யெல்லாம்!
வேண்டுமென்றே உழுதுபோட்டார்; ஆம ணக்கை
விதைத்திட்டார்! சுதந்திரத்தின் வேட்கை பின்னல்
மூண்டெழுந்து வெள்ளையரை வெளியே தள்ளி
முழுவதுமே குடியரசாய் மலர்ந்த தன்றோ?

இருபதினைந் தாண்டுகள்முன் இந்தி யாவின்
ஈடற்ற சுதந்திரத்தைப் பெற்றீர்! ஆனால்
ஒருபக்தன் பாரதத்தாய் விடுத லைக்கே
உயிர்விட்டேன் முதன்முதலாய்; எனைம றந்தீர்!
கருவத்தால் என்தலைதான் கனக்கும் வண்ணம்
கனித்தமிழன் இனித்ததொரு கனவு கண்டான்;
உருவத்தைச் சிதைத்தழித்தோர் வியக்கு மாறே
ஓங்கியெழும் கோட்டையொன்று சமைத்தான்மீண்டும்!

இதன்முன்னர் வேறெவர்க்கும் தோன்றா எண்ணம்
எத்தனையோ இவன்அறிவில் முளைத்த தாலே—
முதன்முதலாய் நம்நாட்டுக் கொடியை ஏற்றும்
முதலமைச்சாய் இவனன்றோ உரிமை பெற்றான்!
இதன்பயனை இன்றுணர மாட்டீர்! என்னை
இத்தனைநாள் ஏறெடுத்தும் பாரா மக்கள்
நிதமினிமேல் பாஞ்சாலங் குறிச்சி நோக்கி
நிமிர்ந்தநடை போட்டுவர நினைப்பீர், திண்ணம்!

கோட்டையென்ன; கொத்தளங்கள், மதில்கள் என்ன;
கொலுவிருக்கும் நேர்த்தியென்ன; என்முன் னாலே
கோட்டைவிடா ஊமதுரை, வெள்ளைத் தேவன்,
கொள்கைக்கோ சுந்தரன், நம் பிள்ளை உள்ளார்!
நாட்டையாண்ட கலைஞரென்றன் புகழை மீட்டார்;
நன்றிசொல்லத் தான்வந்தேன் நினைவிற் கொள்வீர்
நாட்டவரே, வீரனுக்குச் சாவே இல்லை;
நம்பிடுவீர், வாழ்கின்றேன்; உமக்கா கத்தான்!

# ஆடை

பொய்யாகும் வாழ்வென்று புகல்வார் தம்மைப்
பொய்யராக்கி, ஏமாற்று புரிவோ ராக்கி
மெய்யாகும் இவ்வுலக வாழ்வே என்று
மெய்ப்பிக்க, உடலுக்கு மெய்யென் றும்பேர்
கொய்யாத கனியான தமிழின் சான்றோர்
கூடிஅந்நாள் சூட்டினரே! அக்கா லத்தே
செய்யாத அறிவார்ந்த பணியும் உண்டோ?
சிந்தித்து விடைகாணுத் தோல்வி யுண்டோ!

கையாலே பருத்தியிலே பஞ்செ டுத்துக்
கையாலே நூல்நூற்றுத் தறிய மைத்துக்
கையாலே நெய்கின்ற தொழிலை முன்னர்
கண்டுபிடித்து உயர்வான முறையில் அந்நாள்
கையாளும் பெருமைசேர் தமிழர் கூட்டம்
கடல்கடந்து வாணிபத்திற் காகச் சென்று
பையாலே பொருள்நிறைத்து மீண்டார்; அந்தப்
பழம்புகழை எண்ணிடிலோ ஏக்கந் தோன்றும்!

அயல்நாட்டார் தமிழகத்தின் மென்மை மிக்க
அழகுமிழும் பட்டாடை, பருத்தி யாடை
மயல்பொங்கத் தம்மேனி தழுவு தற்கு
மரக்கலத்தை எதிர்பார்த்துக் காத்தி ருந்தார்!
கயல்விழியார் எல்லாரும் விழையும் வண்ணம்
கைவண்ணம் காட்டிவந்தார் நமது நெய்வோர்!
முயல்வதிலே பிழையில்லை; ஆனுல் இந்நாள்
முடங்கிவிட்ட கொடியநிலை கண்டோம் அந்தோ!

தறியருகே அமர்ந்திருகால் தாளம் போடத்
தவருமல் இருகையால் ஊடும் பாவும்
குறியுடனே இணைத்திறுக்கி ஆடை யாக்கிக்
குறிப்பிட்ட அளவாகத் துணித்த தாலே
அறிவுடையார் துணியென்றே அழைக்க; மேலும்
அமைவாக வெட்டிடலால் வேட்டி என்றும்,
நறியமணச் சேலைதனைக் கூறை யென்றும்
நாடுமுற்றும் போற்றுதலை நாமும் கண்டோம்.

ஆலையுடன் போட்டியிடத் தறியால் ஆமோ?
அற்றைநாள் தொழிலெனினும் விஞ்ஞா னத்துச்
சோலையதன் நறுமணத்தை நுகரோம் என்று
சொல்வதிலே நியாயமில்லை! எனினும் இன்று
வேலையின்றித் தறிபட்ட பாடு பட்டு,
விடியாத இருளாக வாழ்வி ழந்து
காலைஎன்று வருமென்று காத்தி ருக்கும்
கதியற்ற நெசவாளர் நிலைமை என்ன?

தள்ளுபடி அதிகமாகத் தந்தும், தாமே
தக்கஉதா ரணமாகத் திகழ்ந்தும், அன்று
அள்ளுசுவைத் தமிழரசை அமைத்த மேலோர்
அன்பாலே நெசவாளர் முன்னேற் றத்தைக்
கொள்ளுவதே குறிக்கோளாய்த் திட்டம் தீட்டிக்
குறைகளைந்தார்! நம்மவரின் கொள்கை யாகக்
கள்ளமிலாக் கைத்தறியின் ஆடை என்றும்
கையாள்வோம்; நெசவாளர் ஏழ்மை கொல்வோம்.

# கடல்

கடல்நீர்தான் உப்பாகக் கரிப்ப தற்குக்
காரணத்தைக் கவலையுடன் கூறும் போதில்
''கடல்கடந்த தமிழ்மக்கள் இற்றை நாளில்
கரைகாணுத் துயர்மூழ்கி வடிக்கும் கண்ணீர்
கடல்நீரில் கலந்ததனுல்!'' என்றுர் அண்ணு!
கற்பனைதான் எனினுமதிற் பொதிந்தி ருக்கும்
குடல்நடுக்கும் நிலைமையினைச் சிந்திப் போர்க்குக்
கொடுமைதனைக் களைகின்ற முனைப்பு தோன்றும்!

அலைகடலைக் குறியாக்கிக் கதையும் சொல்லி,
அழகாக மனக்குமுறல் காட்டி, நாட்டின்
நிலையதனைத் தெளிவாக்கித், தமிழ கத்தின்
நிலையுயரப் புகழோங்கத் தன்னை யீந்த
தலைமகனுர்-தமிழினத்தை வாழ வைத்த
தந்நேரில் பேரறிஞர்-முதல்வர் அண்ணு
நிலையான புகழ்கொண்டார் தமிழர் நெஞ்சில்;
நீடுதுயில் கொள்கின்றுர் கடலோ ரத்தே!

கத்துகின்ற தரங்கத்துப் பாடல் கேட்கும்
காவியத்து நாயகரை-எவரும் நத்தும்
வித்தகரை-யாரிடத்தும் பகைகொள் ளாத
மேலான திருத்தகையை-அவர்க்கு வாய்த்த
சத்தான பொன்னுடலை-அவர்தாள் தொட்டுத்
தணியாத காதலுடன் தழுவி இன்ப
முத்தமிடக் கடற்பெண்ணுள் துடிக்கின் றுளே;
முத்தமிழின் சுவைகாணத் துடிக்கின் றுளோ?

துன்பத்தை வெல்வதற்கோ துஞ்சு கின்ருர்
தூயமணச் சந்தனத்துப் பேழைக் குள்ளே?
என்றுமுள தென்தமிழை இயம்பி மிக்க
இசைகொண்ட தமிழ்க்கம்பன் அருகே நின்று
தன்கரத்தே எழுத்தாணி ஏடு தாங்கிச்
சலியாமல் நாளெல்லாம் எழுது கின்ருன்;
மன்பதைக்கு நம்அண்ணு வழங்கும் செய்தி
மகிழ்வுடனே கேட்டெழுதி நிற்கின் ருனே?

சிலநாள்பின், சதுக்கத்தின் மறுபு றத்தில்
சிலேவடிவு கொண்டுள்ள சிலம்பு தந்த
உலகமகா நாடகநூல் ஆசான் ஆன
ஒப்பற்ற தமிழ்த்துறவி இளங்கோ வந்து
நலமாக எழுதுதற்குத் துவக்கம் செய்தான்.
நாடுபோற்றும் வள்ளுவர்க்குக் கோட்டங் கண்ட
பலமான ஆட்சியதன் பெற்றி பாடும்
பகுத்தறிவுப் பெரியார்போல் எழுது வானே?

வெல்திறல்கள் பலபடைத்த கடலாம் அண்ணு
விழிமூடித் துயில்கொள்ள; எதிரில் ஆங்கே
பல்கலேகள் பயிற்றுகின்ற கழகம் நாளும்
பணிவுடனே நிற்பதும்ஏன்? அண்ணன் கற்ற
பல்கலேயும் பாங்குடனே முயன்று தானும்
பைந்தமிழர் அனேவர்க்கும் கற்பிக் கின்ற
நல்லதொரு பெருநோக்கம் கொண்டோ? அன்றி
நாமெங்கே இந்நாளில் எனநி னேத்தோ?

# நாடு

மாட்சிமிகு தமிழரசு மலர்ந்த பின்னே
மாநிலத்தில் சாதனைகள் மிகுந்த தம்மா!
ஆட்சிமொழி தமிழ், அனைத்தும் தமிழே ஆக
அரியதொரு வரலாறு காணு கின்றோம்;
காட்சிகளே நிலையான சாட்சி கள்தாம்;
கடுவேக மின்இணைப்பால் இருளி னின்றும்
மீட்சியுற்றோம்! விளையுளிலே நிறைவு கண்டு
வேளாண்மைத் திறத்தாலே விருதும் பெற்றோம்!

அரிசிவகை பெருகிடவே குவியும் வண்ணம்
அரும்பசுமைப் புரட்சியினை நாமே செய்தோம்!
பரிசெனவே புன்செய்க்கும், நன்செய் என்னில்
பதினாறு மாவுக்கும் வரிவி லக்காம்!
வரிசையுடன் விவசாயத் தொழிலா ளர்க்கு
வாகான வீட்டுமனை நிலப்பட் டாக்கள்
சரிசமமாய் வழங்கியவை போல முன்னர்
சரித்திரத்தில் யாரேனும் செய்தோர் உண்டோ?

காடான மேடான நிலப்ப ரப்பைக்
கணக்கின்றிப் பிணைத்தஉச்ச வரம்பு தன்னைக்
கோடாமல் ஆராய்ந்த எளியோர் ஆட்சி
கொடுமைதனை விலக்கியதே பெரும்பு ரட்சி!
மூடாமல் ஆலைகளை இயக்கு தற்கு
முனைந்திட்ட முயற்சியெலாங் கொஞ்சந் தானோ?
வாடாமல் தொழிலாளி மக்கள் வாழ
வாரியள்ளிக் கொடுத்தோமே இலட்ச மாக!

தாய்ப்பாச உணர்வோடிம் மாநி லத்தைத்
தமிழ்நாடென் றழைக்கின்றோம்; தியாகி கட்கும்
காப்பாக நிதிவசதி உதவு கின்றோம்;
களைத்திருந்த ஊழியர்க்குச் செவியைச் சாய்த்தே
மூப்பான இரகசியக் குறிப்பொ ழித்தோம்!
முகிழ்ந்திட்ட மகிழ்ச்சிவெள்ளம் அடங்கு முன்னே
கோப்பாகச் செலவென்று கருதி டாமல்
கொடைபத்தா யிரம்ரூபாய் கொடுத்தோம் அன்றோ?

அறங்காவல் பொறுப்பினிலே அரிச னங்கள்;
அர்ச்சகராய்ப் பதவிபெறச் சட்டம் செய்தோம்!
உறங்காது பலகோடிப் பொருள் ஒதுக்கி
உள்நுழையாத் துறையினிலும் இவர்முன் னேறப்
புறங்காணும் குறியீட்டை உயர்த்த லானோம்;
புதுப்புதிதாய்த் தொழிற்பயிற்சி நிலையம் வைத்தோம்!
திறங்காணும் தேர்வுதனை எழுது தற்கே
தேவையுள்ள தனிப்பயிற்சி வகுப்புந் தந்தோம்!

மாணவர்கள் விடுதிபல ஏற்ப டுத்தி
வசதியுடன் காந்திநிதி வழங்கு கின்றோம்;
மோனையெனப் புகுமுகத்தில் முன்நிற் போர்க்கு
முழுநூறு திங்களுக்குத் தருகின் றோமே!
கேணிதனைத் தோண்ட, உழும் மாடு வாங்கக்
கிடைக்கின்ற தொகை, உதவி யாவும் யாரால்?
ஏணியென நிமிர்ந்துநிற்கும் மாடி வீட்டில்
இடங்கிடைக்கும் என்றவரே நினைத்த துண்டா?

பிற்பட்டோர் நலங்காணத் தனிய மைச்சு
பிறபயனும் விரைந்தெய்தக் குழுவ மைத்தோம்;
முற்பட்டே தொழில்துறையின் மேன்மை ஓங்க
முனைப்புடனே வட்டியிலாக் கடன ளித்தோம்;
அற்புதமாய் முடிதிருத்து வோரும், ஆடை
அழுக்கெடுப்போர் தாமும்கைக் கருவி பெற்றார்!
சொற்பமெனக் கருதாமல் மாணாக் கர்க்குச்
சுலபவிலைப் பாடநூல்கள் வழங்கு கின்றோம்.

வருவாயில் மூன்றிலொரு பாகம் கல்வி
வளர்வதற்கே செலவழிக்கும் நிலைமை நன்று;
பெருவாரி யானவர்கள் கற்கு மாறு
பெருகிவளர் புகுமுகமும் இலவ சந்தான்!
திருவாழும் கோயில்கள் ஏழு கோடி
திரட்டுகின்ற சூழலுடன், வழிபாட் டிற்கோ
உருவான நறுந்தமிழாம்! பிணிய கற்றும்
உயர்வான மருந்தகம்,நற் கருணை இல்லம்!

குடிசைகளைக் கோபுரம்போல் மாற்றி விட்டோம்;
குடிநீரும் வடிகாலும் கொண்டு வந்தோம்;
படிப்பதற்கே இருமொழிகள் போதும் என்றோம்;
பார்வைதரும் கண்முகாம்கள் நடாத்து கின்றோம்;
துடிக்கின்ற தொழுநோயர் மறுவாழ் வில்லம்—
தோகையரில் விதவையர்க்கு நன்மை கண்டோம்!
படித்தவர்க்காம் இளைஞரணி யோடு, மெத்தப்
பயனுள்ள சீரணியும் சிறக்கச் செய்தோம்!

கோச்சோழன் கண்டமனு நீதித் திட்டம்
குக்கிராமம் வரையந்நாள் குடியே றிற்றே!
ஆச்சரியப் படுமாறு சிற்றூர் எல்லாம்
அண்மைவரும் பேரிணைப்புச் சாலை யாலே!
மாச்சுழலில் சங்கெடுப்போர்-மீன்பி டிப்போர்-
மருந்தடிப்போர்-மரமேறி-சாவில் காத்தோம்!
சீச்சீயென் றொதுக்காமல் தோளி ணைக்கும்
சீர்திருத்த மணச்சட்டம் வந்த திங்கே!

பேருந்தை நாட்டுடைமை ஆக்கி விட்டோம்;
பேணிடுமா நிலத்திட்டக் குழுவ மைத்தோம்;
சீருந்த விடாதவட்டிக் கடனால் தேய்ந்து
தென்பிழந்தோர் வலிவுறவே உரமுந் தந்தோம்;
யாருந்தம் பண்ணையாளை வெளியேற் றாமல்
ஏற்பாடு, கூலிக்குச் சட்டம் போட்டோம்!
ஊரெங்கும் ஆளைஆள் இழுத்து வந்த
உயிர்வாதை வண்டிகளை ஒழித்துவிட்டோம்!

ஆசிரியர், பொறியாளர் வேலை வாய்ப்பும்;
அரக்கோணம், சேலமிரும் பாலை யோடு
பேசுந்தூத் துக்குடியில் பெரிய திட்டம்!
பிணியகற்றக் கூவஞ்சீ ரமைப்பும், அண்ணா
வீசுபுகழ்ச் சதுக்கமங்கே நீச்சல் வாவி,
வெற்றிபெற்ற குடும்பநல முனைப்பி யக்கம்;
நாசியின்மேல் விரல்வைத்து வியக்கு மாறு
நாடுவாழ நல்லனவே தொடர்ந்து செய்தோம்!

# ஒழுங்கு

ஒழுங்குமுறைக் கூடங்களை ஊருராய் ஏற்படுத்தி
வழங்குவதும் வாங்குவதும் வாடிக்கை
ஆக்கி விட்டோம். (ஒழுங்கு)

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்களவும்
மிஞ்சாதென்று
அழுதுநின்ற கதையை இன்று
அடியோடு மாற்றி விட்டோம். (ஒழுங்கு)

கள்ளத்தனம் புரிவதற்கு எள்ளத்தனை இடமும் இல்லை;
கொள்ளைலாபம் அடித்து வந்த கூட்டத்துக்கு
வாய்ப்புமில்லை;
உழைப்புக்கேற்ற விலைகிடைக்கும் உண்மையான
எடையிருக்கும்
பிழைப்புக்கான வசதியெல்லாம்
பெருமையுடன் நிறைந்திருக்கும். (ஒழுங்கு)

காலமெல்லாம் பாடுபட்டுக் கண்டுமுதல் எடுக்கையிலே
ஓலமிடும் விவசாயி உயரும் வழி இங்கே உண்டு (ஒழுங்கு)

தரம்பிரித்தல் இலவசமாம்; தரகுமில்லை, கழிவுமில்லை!
உரமான சரக்கு வைக்க உதவும் கிடங்கு இங்கே உண்டு!
வண்டிவிட மாடுகட்ட வசதிகள் நிறைய உண்டு!
உண்டுவிட்டு ஓய்வுகொள்ள
உழவனுக்கு நிழலும் உண்டு! (ஒழுங்கு)

# பலன்

பாடுபடப் பாடுபடப் பலன்தருமே பூமி
பசிதீர நாள்தோறும் உழைக்கவேணும் சாமி
ஈடுஇணை இல்லாத தொழில்இதனை நம்பி
ஏமாந்து போனவர்கள் யாருமில்லை தம்பி! (பாடுபட)

இல்லையில்லை என்றுசொல்லி ஏங்கியே குந்தி
இருப்பவனைச் சிரிப்பாளே நல்லநில மங்கை
தொல்லைகளை ஏற்கஅஞ்சும் ஒருகோழை என்றும்
சோம்பேறி; செல்வத்தைத் தொடமுடியா ஏழை!
(பாடுபட)

பஞ்சங்கள் பறந்தோட வேண்டுமெனில் பச்சைப்
பயிர்விளையும் பாத்திகளில் நீர்வழிய வேண்டும்.
அஞ்சாமல் களையகற்றி, பூச்சிகளைக் கொன்று
அருமையாய் உரமிட்டுக் காவல்காக்க வேண்டும்.

காஞ்சி கரிகாலன் வைகை காவேரி பெண்ணை
நோஞ்சலான பழைய நெல்லை மாற்றியே விதைத்து
கண்ணகி கருணு பவானி ஐயாறிருபது-எட்டு
நோகாமல் நஞ்சையிலே மிகுவிளைச்சல் தருவோம்!
(பாடுபட)

வரிசையுடன் பாரதி சுஜாதா வரலட்சுமி
வனிதையரின் பெயரல்ல புனிதமாம் பருத்தி
தரிசாகக் கிடக்கின்ற கரிசல்நிலம் எங்கும்
தயங்காமல் புதுமையாய்ப் பஞ்சுவிளை விப்போம்!

உருப்படியாய் வாழ்ந்திடவும் ஊட்டமான சத்து
வழங்கிடவும் மரவள்ளிக் கிழங்குபயிர் செய்வோம்.
பருப்புவகை நிரப்பிடுவோம்! எண்ணெய்விலை குறைப்போம்!
பயன்மிக்க காய்கனிகள் உயர்வாகக் கொய்வோம்.
(பாடுபட)

# பிழை

சின்னத்தம்பி இங்கே வா! என்
எண்ணத்தை நான் சொல்லவா?

அன்னை தந்தை அன்பில்—ஏனோ
ஆறு பேர்கள் பிறந்தோம்?
முன்னேயிருந்த உரிமை யெல்லாம்
மூத்த எனக்குப் போச்சே!
பின்னால் வந்த உங்கள் மீது
பிழையைக் கூறலாமா?
தன்னால் நேர்ந்த தவறு என்று
தந்தை உணர வேணும்! (சின்னத்தம்பி)

அன்று கிடைத்த அல்வா மிட்டாய்
இன்று கிடைக்கக் காணோம்!
ஒன்று இரண்டு பேர் இருந்தால்
ஒசத்தியாக வளர்ப்பார்;
ஆறுகாசு கடலை வாங்கி
யாருக்குத் தான் தருவார்?
ஊரும் உலகம் வாழ வீட்டில்
இரு குழந்தை போதாதா? (சின்னத்தம்பி)
பட்டுச் சொக்காய் வேணும்—நல்ல
பருத்தி ஆடை இருக்குதா?
பாலும் பழமும் வேணும்—பசிக்குப்
பழைய கஞ்சி கிடைக்குதா?
எட்டுந் தொலைவில் கல்வி வந்தும்
ஏடுவாங்கக் கெடுபிடி!
எல்லோருமே நோயில்லாமல்
இருக்க வீடு நெருக்கடி! (சின்னத்தம்பி)
சிறிய இந்த வயசில் எனக்குச்
சிரிக்கக் கூடத் தெரியலே—மனித
உரிமையிழக்கக் காரணம்-என்
உடன் பிறந்தார் நெரிசலே!
அரியபெரிய செய்தியெல்லாம்
அலசும் அப்பா அம்மாதான்
உரிய கவனம் செலுத்தி இதுக்கு
உடனே நிவர்த்தி தேடணும்! (சின்னத்தம்பி)

# சுற்றுலா

குற்றால அருவிகள்போல் குவல யத்தில்
குளிப்பதற்கும் களிப்பதற்கும் வாய்ப்பா யுள்ள
வற்றாத மலையருவி வேறெங் குண்டு?
வான்முட்டும் மலைத்தொடர்கள் பலஎன் றாலும்
வெற்றாகப் பனிபடர்ந்து பயனில் லாமல்
வீணாக நிறைந்துளவே எங்கும்; இங்கோ
உற்றார்க்குப் பேரின்பம் நல்க வல்ல
உதகையுடன், கொடைக்கானல், ஏரிக் காடு—

சுற்றுலாவை நாடுவோரின் நோக்கம் போலச்
சுகமிகுந்த மலிவான மலைத்த லங்கள்.
பற்றுடைய வெளிநாட்டார் மட்டு மன்றிப்
பயணத்தில் விருப்புள்ள உள்நாட் டாரில்
கற்றவர்கள், மேடான வாழ்வில் நிற்போர்
கருதுவதோ டன்றியிடைப் பட்டோர் கூட
முற்றிலுமே துய்க்குமாறு எண்ணி றந்தோர்
மொய்க்கின்றார்; நம்நாட்டின் பெருமை என்னே!

குறிஞ்சியுடன் மருதமுல்லை பாலை நெய்தல்
குறிப்பாக நிலப்பரப்பை ஐந்தாய் ஆக்கி
நறுஞ்சிறப்பு மிக்கனவாய் ஐந்தி ணைகள்
நல்லொழுக்க அடிப்படையில் வாழ்வாய்க் கொண்டு
பெறுஞ்சுகமே இயற்கையன்னை வகுத்த சொத்து;
பெறற்கரிய நீள்கடலோ துன்ப வெம்மை
உறிஞ்சிடவே உதவுவதால், உலகில் யாரும்
உணரவொண்ணா உயரின்பம் நமதே யாகும்!

தலையாய முத்தமொழிச் சொந்தக் காரர்
தமிழரினம் என்பதால்தான் நமது மூன்று
கலையாகும் இயலிசையும் கூத்தும் மூச்சு,
கவின்கலையாம் ஓவியமும் சிற்ப மென்னும்
நிலையான படைப்புகளும் காலத் தாலே
நெகிழாத வரலாற்றுச் சான்று கூறும்!
அலையாது திரியாது வாழ்வு முற்றும்
அயல்நாடு போகாமல் இன்பங் கூடும்!

வந்துவந்து செல்வோரின் வருமா னத்தில்
வளம்பெருக்கும் நாடுகளும் உலகில் உண்டாம்!
இந்தவகைப் பெருஞ்செல்வம் எவர்க்கு மில்லை;
எடுத்துரைக்கா திருந்ததுதான் நமது குற்றம்!
முந்திசெய்த தவறுணர்ந்து பிற்கா லத்தில்
முழுமூச்சாய்ச் சுற்றுலாவில் கவனங் காட்டிச்
செந்தமிழர் நலம்பாடும் சிறப்பை யெல்லாம்
சிந்தையிலே பிறநாட்டார் கொள்ளச் செய்தோம்!

நான்கு திக்கும் மலை குன்று கோயில் சிற்பம்
நானிலத்தார் அனைவரையும் கவர்ந்தி ழுக்கும்.
மான்குதிக்கும் கானகத்தில் யானை வேங்கை
மற்றபல விலங்குகளும் இணைந்து வாழும்.
மீன்குதிக்கும் ஆறு, குளம், ஏரி, வாய்க்கால்,
வேறெவர்க்கும் கிட்டாத கடலின் செல்வம்!
தேன்குடிக்கும் வண்டுகளாய் மதிம யங்கித்
திரிந்துவரச் செய்கின்ற இயற்கை காண்போம்!

# வள்ளல்

அப்பப்பா! சென்றநூற் ருண்டில் இந்த
அரியதமிழ் நாட்டினிலே அதற்கு முந்தி
எப்போதும் காணுத காற்ற ழுத்த
இழப்பைநீர் அறிவீரோ? வழக்கம் போல
வெப்பத்தின் மிகுதியிஞல் விளைந்த தன்று!
மிகவிரைவாய் மண்டிவிட்ட பழைமை எண்ணம்,
கப்பிநின்ற மடமையிருள் முடநம் பிக்கை,
காலத்தால் ஏற்பட்ட அறிவுச் சூன்யம்!

காற்றழுத்தம் குறைவானுல் என்ன நேரும்?
கடல்மீது குளிர்ந்திருக்கும் கனத்த காற்றே
ஏற்றமுடன் புயலுருவம் எடுத்துக் காலி
ஏற்பட்ட இடம்நோக்கிப் பாயு மன்ருே!
மாற்றமின்றி அவ்விதமே தோற்றங் கொண்டு
மகத்தான அருட்சோதிக் கருணை வீச்சால்
வேற்றுமைகள், அறியாமை வீழ்ந்து சாய—
வெற்றியுடன் இராமலிங்க அடிகள் வந்தார்.

இன்னல்கண் டிரங்குவதில் இயேசு; சூழ்ந்த
எதிர்ப்பினையே இடறுவதில் நபிகள்; மேலாந்
தன்னலத்தைத் துறப்பதிலே புத்தன்; தூய
தமிழ்ப்பண்பை நிறுவுவதில் குறளோன்; ஆழ்ந்த
தன்னடக்கம் பேணுவதில் காந்தி; பண்டைத்
தவறுகளை மறுப்பதிலே பெரியார்; வள்ளல்
என்னுமொரு சீர்பெற்ற துறவி சொன்ன
இணையில்லாச் சன்மார்க்கம் தமிழன் சொத்து.

# அண்ணல்

இந்திய நாட்டினில் வந்த விருந்தினர்
சொந்தமாய் எண்ணி நிரந்தரமாய்
விந்தையுடன் தங்கள் சிந்தை செலுத்தியே
சொந்த நலத்தில் அழுந்தி விட்டார்.
நொந்து கிடந்து பிறந்த சகோதரர்
வெந்துயர் மேலும் நிறைந்தவராய்
வந்தவர் தந்து மிகுந்த கொடுமையைக்
கொந்தி எறிந்திட முந்தி வந்தார்!

நஞ்சனையார்அவர் வஞ்சகமாக நாம்
தஞ்சம் அடைந்ததாய் எண்ணிவிட்டார்.
அஞ்சி அடங்கலும் கெஞ்சிக் குழைதலும்
கொஞ்சமும் நம்மவர் பண்பிலையே!
துஞ்சுதல் விட்டுநாம் விஞ்சி எழுந்திடில்
பஞ்சில் நெருப்பாய்ப் பறந்திடுவார்.
கஞ்சி இல்லாதவர் நெஞ்சினில் மாபெரும்
வஞ்சினங் கூறி விரைந்தெழுந்தார்!

பண்ணுடன் தாளமும் பின்னி இணைந்திட
மண்ணின் தன்மானம் நிலைபெறவே
நண்ணிடுந் தீங்குகள் எண்ணவொண்ணுதென
உண்மையுணர்ந்து நாம் தொண்டு செய்தோம்.
எண்ண இனித்திடும் அண்ணலாம் காந்தியின்
வண்ண மிகுந்த சுதந்திரப்போர்
திண்ணமாய் வெற்றியைக் கண்ணியமாகவே
கண்முனர்க் கொண்டு நிறுத்தியதே!

எங்கும் விடுதலைச் சங்கம் முழங்கிட
இங்கிலாந்து துரை இங்கிதமாய்ச்
"சங்கடந் தந்துயாம் தங்கி நிலைத்திடப்
பொங்கும் அறிவுதான் மங்கியதோ?
மங்கலச் சங்கீதம் இங்கே இலங்கிடக்
கங்குலில் தன்னுட்சி தந்தோம்" என்றூர்.
சிங்க மறவர்கள் பங்குபெற் றுனந்தம்
கங்கு கரையின்றித் துள்ளினமே!

அன்பெனும் மார்க்கமே இன்பங் கொணர்ந்திடும்
முன்பிருந்த பல துன்பங்கள் போம்.
என்புதோல் போர்த்திய மன்பதைக் கும்பலில்
தென்புடன் நன்மை குவிந்திடுமாம்
என்பதை நம்பிேனும் வன்முறை நீங்கிேனும்;
தன்புகழ் மேலும் பரப்பிவந்தோம்!
உண்பது உடுப்பது உறைவிடம் காண்பதில்
பின்புறம் செல்கிறேம்; வெற்றியில்லை!

# அய்யா

ஏற்காடு மலைமீதில் சற்று நின்றே
எழில்சிலிர்க்கும் வளங்கண்டு மகிழும் போதில்—
ஏற்காத கொள்கைகளைச் சொல்லிச் சொல்லி
இடித்துரைத்த அய்யாவின் நினைவு தோன்றத்—
தோற்காது கேட்காது செவிடாய்ப் போன
துணிவற்ற மனிதர்மேல் இரக்கங் கொண்டேன்!
தோற்காத கொள்கைகளா அன்று சொன்னார்?
தொல்லுலகம் மறுத்ததெல்லாம் இன்று நம்பும்!

மேட்டூரின் மேல்நிலையில் ஏறிப் பார்த்தேன்—
வேகமுடன் விரைகின்ற வெள்ளம் என்ன
காட்டாறு, கட்டுப்பா டின்றிப் போக?
கட்டிவைத்த பேரணை தன் சுவர்த்த டுப்பால்
ஓட்டத்தை மிதப்படுத்திப் பாய்வி ரிப்பாய்,
ஓர்புறமாய் வெளிவிடுமே—அதுபோல் அன்றோ
ஊட்டமுள்ள பகுத்தறிவுச் சத்தைத் தேக்கி
ஒழுங்குடனே வகுத்தளித்துச் சென்றார் அய்யா!

சென்றாரென் றுரைத்தேனே? எங்கே சென்றார்?
செல்வதெனில், எங்கிருந்தோ வந்தால் தானே?
ஒன்றாகி, இந்நாட்டின் உயிர் ஊன் ஆகி,
உடலாகி, நடமாடி உணர்வு தந்தார்!
நன்றாக அவருரையைப் புரிந்து கொண்டால்
நலிவேது? பொலிவிழந்து தேய்தல் ஏது?
குன்றாத வாழ்வுநமைத் தொடர வேண்டில்
கொள்கையெனத் தந்தவற்றை மறக்க லாமா?

நாளுக்கு நாள்மாறும் நாட்டுக் கூத்தில்
நமக்கென்ன பாத்திரமோ? அறியோம் நாமே!
ஆளுக்கும் வாளுக்கும் அஞ்சி வாழ்ந்தோம்;
அரசியலில் யாருக்கும் பயந்து போனுல்
தோளுக்குச் சரியாக வளரா தாரும்
துடுக்குடனே நமையடக்கத் துடித்து நிற்பார்!
கோளுக்குக் கலம்செலுத்தும் நாளில், இங்கே
கும்பிட்டுக் கைகட்டி வாழ்தல் ஏனோ?

தத்துவமாய்ச் சிந்தித்த பெரியார் சொத்தைத்
தமக்குற்ற நுண்ணறிவின் திறனுல் அண்ணு
புத்தகமாய் விரித்துரைத்தார்! கற்ருர், கல்லார்
புதுக்கருத்தைப் புரிந்துகொள்ள ஆசான் ஆனுர்!
வித்தகராய் விஜனயாற்றி, முடிக்கும் ஆற்றல்
விளைநிலமாய்க், களத்திறங்கி எதற்கும் என்றும்
சித்தமாகிச், செயல்படுத்தும் தொண்ட ராகச்,
சிறுவயதுப் பெரியாராய்ப் பலபேர் உள்ளார்!

தவருகத் திரித்துரைத்து, நாத்தி கத்தார்,
தமிழகத்தைப் பிரித்திடுவார் என்று கூவி
எவரெவரோ கச்சைகட்டி அழிக்கப் பார்த்தார்;
இயலாது தோல்விகளை ஒப்புக் கொண்டார்!
அவரவரும் இன்றுநெஞ்சில் உணர்ந்த தாலே
"அய்யாவின் செயலால்தான் மேம்பா டுற்ருேம்;
சுவரிருந்தால் தானேநம் சுகவாழ்வு!" என்றே
சொல்கின்ருர்; அதுநமக்குப் போதும் அய்யா!

# புதையல்

முப்பாலுக்கு அப்பாலோர் மொழிநூல் இல்லை;
முழுதுலகும் ஏற்றுள்ள உண்மை யாகும்.
இப்பாலை மூன்றாக்கிப் பகுத்துக் காட்டும்
எழிலுடைய இலக்கியமும் உலகில் ஏது?
தப்பாமல் திருக்குறளைப் பொருள்பு ரிந்து
தாமுணர்ந்தார் தடம்பிறழ்ந்த வரலா றில்லை!
ஒப்பாரும் மிக்காரும் இல்லா அண்ணா
உன்உரையை நாளெல்லாம் நாடு கேட்கும்!

காமத்துப் பாலென்றால் கசப்பாய் எண்ணிக்
கானகத்து முனிவரைப்போல் நடித்தோர் கூட
''ஆமதற்கு நிகரில்லை'' என்றே நெஞ்சில்
ஆதரவு தெரிவிப்பார்! வாழ்க்கை இன்பம்
தாமதித்தால் திரும்பிவர முடியா தன்றோ?
தமிழினிலே செறிந்துள்ள அகச்சு வைக்குப்
பாமரரும் பொருள்புரியச் செய்தாய் அண்ணா;
பழச்சா று நீதந்தாய்! அதனால் நாங்கள்

சேரத்துச் சிறியதம்பி இளங்கோ யாத்த
சிலம்புதரும் பல்சுவையில் காத லைத்தான்
வீரத்தை விடமிகவும் விரும்பிக் கற்றோம்!
வெறியாட்டாய்க் கடல்கொண்ட பூம்பு காரைத்
தூரத்தில் கரைமீதில் புதிதாய்த் தோன்றத்
தூக்கிவைத்து நிறுத்திடவே கனவு கண்டோம்;
பாரத்தைச் சுமக்கின்ற கல்லின் சிற்பம்
பழம்பெருமைக் காவியத்தைப் படைத்த தங்கே!

பொருட்பாலில் அரசியலை வடித்துத் தந்தாய்;
பொன்னனைய கருத்துகளின் சுரங்கம் அன்றோ?
இருட்குகையில் தவித்திருந்த நம்ம வர்க்கே
இதுதான்என் றொளிகாட்டும் ஞாயி றொப்ப
அருட்பார்வை செலுத்தியவன் நீதான் அண்ணா!
அதனாலே பாஞ்சாலங் குறிச்சி மண்ணில்
மருட்சியுற்ற பரங்கியரை விரட்டி மாண்ட
மாவீரன் கட்டபொம்மன் கோட்டை கண்டோம்!

அறத்துப்பால் அனைத்துக்கும் முதற்பால் ஆக
அதற்கொப்பத் தலைநகராம் சென்னைக் குள்ளே
குறைத்துமதிப் பிடாவகையில் குறள்தந் தார்க்குக்
கோட்டமொன்றும் எழுப்பிவைத்தோம்! கொள்கை
போற்றும்
திறத்துக்கோர் எடுத்துக்காட் டாகத் தானே
செல்வமுனைக் கடற்கரையில் புதைத்து
வைத்தோம்!
நிறைத்திருக்கும் புதையலிலே நிலைமைக் கேற்ப
நித்தமுன்றன் நினைவான செலவு செய்வோம்!

# புதுமை

மெய்ம்மையேபோற்றிவாழும் மேன்மையாந்தமிழர்நாட்டில்
கைம்முதல் கல்வி யின்றிக் கவிதைகள் எழுதப் போந்தோர்
பொய்ம்மையின் எல்லையாகப் புராணமே செய்தார்! இன்றோ
செய்ம் முறை நன்க றிந்து சீர்திருத் தங்கள் செய்து

பாட்டினிற் புதுமை கண்டான் பாரதி தாசன் என்பான்!
நாட்டினில் மக்கள் துன்பம் நலிவுகள் வறுமை சூழ்ச்சி
ஏட்டினில் விரித்து ரைக்கும் ஏழையின் தோழன் செம்மை
காட்டிட என்றால் ஆமோ? கண்ணுளோர் காணல்வேண்டும்!

உவமையிற் புதுமை என்ன உளந்தொடும் உணர்ச்சிஎன்ன
நவயுகக் கருத்தைக் கூறும் நடையினில் எளிமை என்ன
கவலையைத் தீர்க்கும் இன்பக் கவிநயம் நகைப்பும் என்ன—
அவனையிந் நாட்டார் முற்றும் அறிந்திடவில்லை இன்னும்!

கல்வியின்உயர்வுசொல்வான் காதலின்பெருமைசொல்வான்
நல்வினைக் குடும்பம் ஆற்றும் நடைமுறை நயந்துசொல்வான்
பல்சுவை விரவி நிற்கும் பழந்தமிழ் வலிமை சொல்வான்
அல்வழி யால்நு ழைந்த அயன்மொழித் தீங்கும் சொல்வான்!

செந்தமிழ் நடையை நல்ல தீர்ப்புமே தெளிவாய்க் காட்டும்
சுந்தர இயற்கை மாண்பை அழகின்சிரிப்புச் சொல்லும்
விந்தையாய் இல்ல றத்தைக் குடும்பவி ளக்கு வீசும்
அந்தமாய் இருண்ட வீடும் அறிவிலார் வாழ்வைப் பேசும்!

இன்னிசைத் தமிழர் பாடல் இசையமுது எடுத்துக் கூறும்
மன்னிய காதல் துன்பம் மாண்எதிர் பாரா முத்தம்
இன்னமும் இயம்புங் காதல் நினைவுகள் என்ற நூலும்;
பன்னிற மலர்கள் கூட்டம் பாரதி தாசன் பாட்டே!

பாண்டியன் பரிசு பாடும் பழந்தமிழ்ச் சுவையும் பண்பும்
வேண்டிய தொளித்து விட்டு வெறுங்கதை பேசி வீணில்
தாண்டிடும் பண்டி தர்க்குச் சாட்டையாம் தமிழியக்கம்!
மாண்டுபோம் உள்ளத் திற்கு மருந்தாகி உயிரையூட்டும்

பாரதி தாசன் பாட்டைப் பயின்றிடும் பொழுதென் நெஞ்சில்
வீரமும் புரட்சி காணும் வேகமும் தமிழில் பித்தும்
தீரமும் புத்து ணர்வும் சீர்திருத் தத்தில் நோக்கும்
பூரண மாகத் தோன்றும் புதுமையை என்ன சொல்வேன்!

# வாழ்வு

செக்கிழுத்தார்; சிறைசென்றார்; தியாகம் செய்தார்;
சிங்கமெனும் ஆங்கிலேயர் பிடரி தன்னைச்
சிக்கெனவே பிடித்தாட்டும் விதமாய்ப் போட்டிச்
சிறுகப்பல் கடல்தூத்துக் குடியில் விட்டார்;
தெக்கணத்துத் திலகரெனப் புகழும் பெற்றுத்
தேசியமாம் கனல்எரிய விறகாய் ஆனார்;
தக்கவர்க்குத் தக்கவாறு நினைவுச் சின்னம்
தமிழரசு சமைத்தநாளே திருநாள் அன்றோ?

அரசியலில் தம்மைத்தாம் அழித்துக் கொள்ளும்
அகிம்சையெனும் அறவழியில் பலபேர் சென்றார்;
வரிசைபெறுஞ் சிதம்பரனார் துய்த்த வண்ணம்
வகையான முழுவாழ்வு வாழ்ந்தோர் யாரே?
சிறைசென்று மீண்டவர்கள் பல்லோ ருள்ளும்
செக்கிழுத்துச் சிதைவுற்றோர் இவர்போல் உண்டா?
கரிசனமாய்ச் சுதேசியத்தைக் காப்போம் என்போர்
கப்பலினைச் செலுத்துதற்குத் துணிவா பெற்றார்?

இல்லறத்தில் ஈடுபட்டு வலிமை சேர்த்தோர்
எழில்மனைவி தனக்கொருநூல் இயற்றி னாரா?
வல்லவராம் இவர்தந்த வள்ளி யம்மை
வரலாறும் உரைநூலும் அரிய செல்வம்!
எல்லையிலா மொழிப்பற்றுக் கொண்ட தாலே
எத்தனை நூல் முதன்முதலாய்ப் பதிப்பித் துள்ளார்!
நல்லவர்கள் இருந்தாரே; இவர்போல் உற்ற
நண்பர்தம் வறுமையிலும் நீங்கார் யாரே?

# உணவு

ஆங்கிலேயன் ஆட்சிக்கு நன்றி சொல்வேன்;
அங்கியனின் அடிவருடி எனஎண் ணுதீர்!
ஓங்கிநிற்கும் இந்தியாவை ஒரேநா டாக்க
உதிரிகளைச் சூழ்ச்சியினால் பிரித்துச் சேர்த்துப்
பாங்குடனே ஆளுமுறை, அஞ்சல், கல்வி,
பயணவழி, நாகரிகம் பயிற்று வித்தான்.
தீங்கிவனால் இல்லையென்றும் செப்ப மாட்டேன்;
தீமையான அடிமைநிலை அன்றோ தந்தான்?

நம்மவரே தாயகத்தைத் துறந்து நீங்கி
நல்லவனாய் பிரஞ்சுநாட்டான் ஆண்ட மண்ணில்
விம்மலுடன் புகலடையச் செய்தா னேனும்
வீணில்லை; புதுவையிலே வீரர் கூடிச்
சிம்மநாதம் புரிந்தங்கே புரட்சிப் பாட்டை
செப்பனிட மறைமுகமாய்த் துணைபோ னானே!
செம்மல்நம் பாரதியும் புதுமைக் கீதம்
சீர்பெருக விடுதலைக்குத் தொடுக்க லானார்.

மரபுவழி பிறழாத செய்யுள் யாத்து
மண்புழுவைப் புலியாக மாற்றிப் போட்டுப்
பரபரப்பாய்ப் பணிமுடித்துப் பறந்து போன
பாரதிக்குப் பரம்பரைநாம் நாட்டை மீட்டோம்!
பிரபுவம்ச ஆங்கிலேயன் பின்ன டைந்து
பீரங்கிப் படைகளுடன் திரும்பிச் சென்றான்!
அரபுநாட்டுக் குதிரைகள்போல் உள்ளோம் என்றால்
அவர்சமைத்த கவியுணவை உண்ட தால்தான்!

# பிள்ளை

தென்பொதியை; தண்பொருநை; சந்த னத்தின்
சீர்த்தியெலாம் ஒருசேரக் குழைத்து வந்தே
இன்பூட்டும் நறுந்தென்றல்—இவற்ருல் என்றும்
ஈடில்லாப் புகழ்கொண்ட நெல்லை தன்னில்
மன்னுபுகழ்க் காந்திமதி நாதர்க் குற்ற
மகனுகப் பிறந்திட்ட கா சு ப் பிள்ளை
என்தமிழர் போற்றுகின்ற அன்புக் கிள்ளை;
இனியதமிழ் அன்னைக்கோ ஏற்ற பிள்ளை!

சட்டத்தின் நு ணுக்கமெல்லாம் கற்றுத் தேர்ந்த
சட்டப்பே ரறிஞரிவர்! "கவிஞர் தாகூர்ச்
சட்டவிரி வுரையாளர்!" போட்டி தன்னில்
தக்கபெரு வெற்றியினைப் பெற்ற தாலே,
சட்டத்திற் கொருபிள்ளை யானுர்; முந்தைத்
தமிழகத்தில் அவர் சட்டாம் பிள்ளை யானுர்!
சட்டத்தைத் தாய்த்தமிழில் தெளிவாய்ச் சொல்லல்
சாலுமென மெய்ப்பித்த செம்மல் அன்னுர்!

செந்தமிழை ஆய்வார்க்கும், சிவஞா னத்தைத்
தெளிவுறவே உய்த்துணர விரும்பு வார்க்கும்,
நந்தமிழில் நூல்பலவே நயந்த ளித்தார்!
நாளும்நாம் ஏத்துமாறு துறைகள் தோறும்
சிந்தைவளர் கலைநூல்கள் செய்த ளித்தார்;
தித்திக்கும் கவிதைகளும் ஆக்கித் தந்தார்!
பைந்தமிழைத் தனித்தமிழைப் போற்றி வாழ்ந்த
பண்பாளர் பிள்ளைபுகழ் என்றும் நிற்கும்!

# சிங்கம்

வீரத்தின் கழனியான தமிழர் நாட்டில்
வெள்ளையராம் அயல்நாட்டார் கால்ப திக்கச்
சோரத்தால் நம்மவரே துரோகம் செய்து
துணையிருந்தார் சிலகாலம். நாம் திகைத்தோம்!
"பாரத்த னையுமெங்கள் குடையின் கீழே;
பாரிந்த இந்தியர்கள் படும்பாடு" என்றுர்;
"யாரத்த னைபெரிய சூரன்?" என்றே
எழுந்ததுபார் தென்பாண்டிச் சிங்கம் ஒன்று!

பசும்பொன்னின் முத்துராம லிங்கம் என்றுல்
படைநடத்தும் பரங்கியரே நடுங்கிப் போனுர்!
விசும்பில்வீழ் மழைபோலச் சொற்பெ ருக்கில்
வீரத்தின் மணங்கமழும்! அஞ்சா மைக்கும்
நசுங்காத அன்புக்கும் எடுத்துக் காட்டாய்
நாடியவர் துயர்துடைக்கும் கருணை ஆருய்க்
கசங்காத நறுமலராய் என்றும் வாழ்ந்தார்;
கடுஞ்சிறையால் விடுதலையைப் பெற்றுத் தந்தார்!

ஊர்பேர்கள் தெரியாத உன்மத் தர்கள்
உயரத்தில் பறந்தாலும் பருந்தா வாரோ?
யார்யாரோ எவ்வாருே முனைந்த போதும்
இவர்புகழைத்-தலைமையினை-மறைக்கப் போமோ?
கூர்வாளை உருவிவிட்ட பாங்கில், இந்தக்
கொற்றவனின் வெற்றிக்குச் சின்னங் தானே
சீர்பெருகுங் தென்தமிழச் சீமை வாழும்
செயல்வீரர் முன்னேறி விரையுங் காட்சி!

# மலை

வான்மீகி காளிதாசன் வியாசன் போன்ருர்
வளமாக வடமொழியில் விளைத்த நூல்கள்
மேன்மையுடன் உலகமுற்றுங் கட்டி யாண்ட
மேனுட்டின் ஆங்கிலேய மொழியின் நூல்கள்
ஆன்மீகம் உலகவியல் அனைத்தும் ஈந்த
அன்னைமொழி படைத்துள்ள அறிவு நூல்கள்
வான்முட்டப் புகழெட்ட ஆய்ந்து கற்ற
மறையாத மறைமலைக்கு நிகரும் உண்டோ?

மும்மொழியில் கரைகடந்து முற்று ணர்ந்த
முழுஞானி எதிர்ப்பிடையே வெற்றி கண்டார்.
தம்மொழியில் தனித்தெழுத இயலா தென்ற
தருக்கழித்துத், தறுகணாளர் தந்த நூல்கள்
அம்மவோ எத் துணையினிமை; ஆய்வில் நுண்மை!
அன்றிருந்த இருள்போக்கி, மருளும் நீக்கிச்,
செம்மையுறத் தனித்தமிழ்க்கோர் இயக்கம் தோன்றச்
சிறப்புடனே வித்திட்டார்; வளர்த்தோம் இன்று!

அக்காலம் முதன்முதலாய் நம்மேல் வீழ்ந்த
ஆட்சிமொழி இந்தியெனும் வலையை நீக்கத்
தக்காராய்த் தமிழ்மேலார் இவரைத் தேர்ந்தார்.
தலைஉயர்த்தித் தாம்முழங்கிப் போரில் துள்ளி
"எக்காலும் தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆளும்;
ஏமாற மாட்டோ"மென் றெடுத்து ரைத்தார்.
முக்காலம் உணர்ந்த அந்த நாகை ஈன்ற
மூதடிகள் மறைமலையார் வழியில் செல்வோம்!

# பேறு

தஞ்சைமா வட்டத்தைச் சார்ந்த வன்யான்;
தமிழ்படிந்த கலைநெஞ்சம் வாய்க்கப் பெற்றேன்.
விஞ்சுபுகழ் ஆதீனம் மூன்றில் ஒன்றின்
வெளிச்சுற்றுச் சுவரையும்நான் கடந்த தில்லை!
அஞ்சிநின்ற ஒருகாலம் உண்டு! பின்னர்
அறவெறுப்பால் ஒதுங்கியதே மெய்யாம்! ஏனோ?
கொஞ்சமேனும் மக்களுக்குப் பயனுறாத
கூட்டமங்கே வாழ்வதெனும் எண்ணத் தாலே!

பின்னொருநாள் பார்க்கின்றேன்; பேர திர்ச்சி!
பீடுடைய ஆதீன கர்த்தர் என்பார்
தன்னிலையை மறந்தாரோ? தமிழ்மக் கட்குத்
தானுமொரு தொண்டனென எண்ணி னாரோ?
மின்னலெனும் வாழ்க்கையிது நிலையா தென்று
மிகமேலாம் பொதுநலத்தில் மூழ்கி னாரோ?
முன்னிருந்த நெறிமுறைகள் முற்றும் மாற்றி
முழங்கினரே யாங்கணுமே மேடை தோறும்!

தவத்திருவென் றடைமொழியைத் தாங்கி னாலும்
தாடிமுடி மாலைநீறு தரித்திட் டாலும்
இவர்புரட்சித் துறவியென்பேன் இளங்கோ போல;
இனியதமிழ் துறக்காத மாவீ ரர்தாம்!
எவர் தமிழைப்-பகுத்தறிவுத் தமிழர் மாண்பை—
இடையூறு செயவரினும் எதிர்த்துத் தாக்கித்,
தவறிழைப்போர் தமைத்திருத்தும் நக்கீரன் போல்
தமிழர்க்கோர் பெரும்பேறாய் வாய்த்த மேலோர்!

# காப்பான்

நெப்போலியன் அலெக்சாந்தர் சீசர் சர்ச்சில்
நெல்சன் மாவ் வாசிங்டன் லெனின்நம் காந்தி—
எப்பொழுதும் இவர்தம்மை ஒப்பார் மிக்கார்
இருந்துளரா உலகத்தின் அனைத்து நாட்டில்?
முப்பெரிய சேரசோழ பாண்டி வேந்தர்
முறைசெலுத்தி அரசோச்சும் அந்நாள் தொட்டுச்
செப்பரிய வீரமறச் செயல்பு ரிந்து
திறலுணர்த்தி, மறையாமல் இவர்வாழ் கின்றார்!

என்னஇவர் பெற்றிருந்தார் அரிதாய்ப் பண்பில்?
ஏற்றமுள்ள புகழ்வினைகள் எவற்றைச் செய்தார்?
சின்னவரும் சொன்னவுடன் பெயர்தெ ரிந்து
சிலிர்க்கின்றார் பெருமிதத்தால் உணர்வு பொங்க!
''முன்னுமில்லை பின்னுமில்லை மொய்ம்பு கொண்டோர்
முக்காலும் உண்மை'' என எக்க ளிப்பார்.
அன்னவர்போல் கண்ணெதிரே ஒருவன் உள்ளான்;
அறிவினங் களைந்திங்கே வந்தால் காண்போம்!

கடல்நீரோ முழுநீலம்; நெடுவான் ஊதா;
காரிருளே நாற்புறமும்; இரவின் உச்சம்;
சுடர்நிலவோ தோன்றவில்லை; விண்மீன் சொற்பம்;
சுழன்றடிக்கும் புயற்காற்றால் அலைகள் சீற்றம்;
திடநெஞ்சும் கரைந்துருகும் சூழல்; சென்று
சேருமிடம் மிகத்தொலைவு; பயணக் கப்பல்;
கடமையுள்ளம் படைத்திட்ட தலைவன்; ஆனால்
கலங்குகின்றார் மீகாமர்; யாது சொல்வான்?

"குதித்திடுவோம்; நீந்திடலாம் கடலில் வீழ்ந்தால்;
கூண்டோடு மாண்டிடுவோம் உள்ளி ருந்தால்;
மதித்திடுக எம்சொல்லை" என்றார் தோழர்—
மறுத்திட்டான் மாலுமிகள் தலைவன்;—"கப்பல்
துதித்திடுவேன், காப்பாற்றிக் கரையில் சேர்ப்பேன்;
தூளாக்கேன் ஒப்படைத்தோர் பெருநம் பிக்கை;
கொதித்திருக்கும் உள்ளத்தைக் குளிரச் செய்து
கூடியெனை நாடிடுவீர்; உறுதி கொள்வீர்!"

அச்சத்தால் ஆட்கொள்ளப் பட்டார் போல
அதுவரையில் அனுபவித்தோர் நழுவிச் சென்றார்!
மிச்சமுள்ளார்—இடுக்கண் வந் துற்ற போதும்,
மிகநடுக்கம் நெஞ்சுக்குள் நிறைந்த போதும்,
அச்சத்தை அறிவாலே தலைவன் வெல்ல—
அசையாது நீங்காது நிலைத்து நின்றார்!
துச்சமெனத் துயர்சூழ்ந்த காலம் செல்லத்
துடிப்புடனே செயலாற்றித் துன்பங் கொன்றார்!

வரலாறு படித்தவரே! இவனைப் போன்ற
வரலாறு படைத்தவனைப் பார்த்த துண்டா?
விரலாலே வேங்கையினை எதிர்த்து நிற்கும்
வீரவுள்ளம் அனைவர்க்கும் வாய்க்கா தன்றோ?
குரல்வளையை நெறித்திட்ட போதும் நெஞ்சங்
குலையாது மலைபோன்றான் தலைநி மிர்ந்தான்!
உரலுக்குள் அகப்பட்டும் உலக்கை வீச்சால்
உருச்சிதையாத் திண்மையுள்ளான், என்றுங்
காப்பான்!

★



# கல்மேல் எழுத்து

## தந்தை பெரியார்

நண்பர் கவிதை இயற்றுவதில் வல்லவர். அக்கவிதைப் புனைப்பில் மிக்க சுவையும் அரும் கருத்துக்களும் மலிந்திருப்பது மிகுதியும் பாராட்டற்குரியதாகும்.

இவர் கவி இயற்றுவதில் மாத்திரமல்லாமல் அரும் கருத்துக்கள் கொண்ட வியாசங்கள் எழுதுவதிலும் திறமை கொண்டவர்.

அரிய கருத்துக்களையும் சுவைமிக அழகுபடத் தொகுத்திருப்பதுடன் மிக்க எளிய நடையில் வசனம் போல் படித்து உணரும் தன்மையில் தொகுத்திருப்பது மிகுதியும் பாராட்டத் தக்கதாகும்.

## பேரறிஞர் அண்ணா

அறிந்ததனை அறிந்தோர்க்கு அறிவிக்கும் போதினிலே, அறிந்ததுதான் என்றாலும் எத்தனை அழகம்மா என்று அறிந்தோரையே மகிழவைக்கும் அருங்கலையே கவிதையாகும்.

அணிதெரியும் என்பதற்காய் ஆக்கித் தரப்பட்ட வணிகப் பொருளல்ல இவர் கவிதை. சமூகப்பிணி போக்கும் மருந்தளிக்கின்றார் கவிதைத்துளி வடிவில். பருகிட இனிப்பதது; உட்சென்றதும் பிணிபோக்கிப் புதுத்தெம்பு தருவதது.

இக்கவிதை நூலினைத் தந்தவர் என் நண்பர்! பெருமை அடைகிறேன் இத்தகைய நண்பர்தனைப் பெற்றவன் நான் என்பதனால்!

## டாக்டர் கலைஞர்

நண்பரது கவிதைகளில் அமைதியான தமிழோட்டத்தையும் அழுத்தமான கருத்தோட்டத்தையும் சுவைத்து மகிழ்ந்தவன் நான். நண்பர் அவர்கள் தோற்றத்தில் எவ்வளவு எளியவரோ அவ்வளவு எளிமையுடையவை அவரது கவிதைகள். உளத்தால் எவ்வளவு உறுதி கொண்டவரோ அவ்வளவு உறுதி முழங்குபவை அவரது கவிதைகள் ஒளிவிடும் கருத்துக்கள்.

இருபது பக்கங்களில் எழுதிக் காட்டிப் புரிய வைக்க வேண்டியவைதனை 'இரண்டு மூன்று வரிகளிலேயே பட்டுக் கத்தரித்தது போல் பக்குவமாக விளக்கிடும் ஆற்றல் அவருக்கு மிகுதியாக உண்டு.

இத்தகைய ஆற்றலுடையாரை நண்பராகப் பெற்றதால் பெருமையடைகிறேன் என்று அறிஞர் அண்ணா அவர்களே புகழ்ந்துவிட்ட பிறகு நான் என்ன சொல்ல இருக்கிறது என் நண்பரைப்பற்றி!